# 1.0 இந்து நாகரீகத்தின் வரலாற்றுப் பின்னனி

## 1.1 நாகரீகமும் பண்பாடும்

**பண்பாடு - வரையறை**

- ஓர் இனத்தின் பாரம்பரியமான பயன்பாட்டுக்கருவிகள், பொருள்கள், நுட்பத்திறன், கருத்துகள், நடத்தைகள், பெறுமானங்கள் என்பவற்றின் கூட்டுமொத்தம் - **மெலினோன்ஸ்கை**
- ஒரு சமூகத்தின் உறுப்பினரின் அறிவு நலம், கருத்து நலம், கொள்கை நலம், ஒழுக்க நலம் ஆகியவை மென்மேலும் திருந்திய ஒரு நடைமுறையே பண்பாடு ஆகும். இது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கம், சட்டம், பழக்கவழக்கம் என்பவற்றின் முழுமையான தொகுதி – **எட்வெட் ரெய்லர்**

**நாகரீகம் - வரையறை**

- நாகரீகம் என்பது நகரத்தோடு இணைந்தது.
- பண்பாட்டின் உயர் எல்லையை காட்டுவது.

**பண்பாட்டிற்கும் சமயத்திற்குமிடையிலான தொடர்பு**

- பண்பாட்டின் அமைப்பையும் மீட்டுருவாக்கத்தையும் தீர்மானிக்கும் பிரதான காரணி சமயம் - **T.S. எலியட்**
- பண்பாடு மரபு வழி வாழ்வியலுடன் கூடுதல் தொடர்புடையது.
- இந்து சமய நூல்கள் இந்துக்களை பண்பாடுடையவர்களாக்கும்.
- சமய நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை, கலை உணர்வு என்பன இந்து இலக்கியங்களில் வெளிப்படும்.

### வேறுபாடு

| பண்பாடு | நாகரீகம் |
|---|---|
| ▪ அகவயமானது | அகவயமானதும், புறவயமானதும் |
| ▪ பண்பாட்டின் உட்கூறுகள் வெளிப்படுகையில் நாகரீகமாகின்றது. | பண்பாட்டின் உயர் எல்லை |
| ▪ மாற்றமடையாது | மாற்றமடையும் |

**பயிற்சிகள்**

1. Culture எனும் ஆங்கிலச் சொல்லுக்கு பண்பாடு எனும் பதத்தை முதன் முதலில் பிரயோகித்தவர் யார்?
2. தமிழில் முதன் முதலில் நாகரீகம் எனும் சொல் காணப்படும் நூல் எது?
3. பழந்தமிழ் இலக்கியங்களில் பண்பாடு என்பதை சுட்டும் சொல் எது?
4. பண்பாட்டில் உள்ளடங்கும் கூறுகளில் பிரதானமானது யாது?
5. Culture, Civilization எனும் ஆங்கிலச்சொற்கள் எம் மொழிச்சொற்களிலிருந்து உருவாகின?

## 1.2 உலக நாகரீகங்களிலே இந்து நாகரீகத்தின் சிறப்பம்சங்கள்

1. தொன்மை வாய்ந்த நாகரீகம்
2. இன்றுவரை நிலைத்துள்ள நாகரீகம்
3. தனித்துவமான நாகரீகம்
4. இறை ஆற்றலே மேலானது எனும் நாகரீகம்
5. அறிவியல், வானியல், வைத்தியம் முதலிய துறைகளை உள்ளடக்கிய நாகரீகம்
6. சமூகம், சமயம், தத்துவம், கலை, அரசியல், அறிவியல் முதலானவற்றில் சிறப்பு பெற்ற நாகரீகம்
7. பிற மத கருத்துக்களையும் மதித்து போற்றும் நாகரீகம்
8. ஆன்மிக விடுதலையாகிய முத்தி தத்துவத்தை இலக்காக கொண்ட நாகரீகம்
9. உலகியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் நாகரீகம்
10. உலகவாழ்வை மட்டுமல்லாது மறுமை வாழ்வையும் தூண்டும் நாகரீகம்

**இந்து மதத்தின் சிறப்பியல்பு**

1. தொன்மை வாய்ந்த சமயம்
2. சனாதன தர்மம்
3. சமய தத்துவத்தை மரபாக கொண்டிருத்தல்
4. அறநெறி வாழ்க்கையினை வலியுறுத்தல்
5. கலையம்சங்களை மரபாகக் கொள்ளல்
6. ஆன்மாக்களின் உயர் இலட்சியத்திற்கு வழிகாட்டல்
7. பரந்த நோக்குடைய மதமாக விளங்குதல்

## 1.3 இந்து நாகரீகத்தின் தோற்றம் வளர்ச்சி

**சிந்து வெளிக்காலம்**

1. இந்து சமயத்தின் தொன்மையை அறிய உதவும் காலம்.
2. மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய பிரதான நகரங்கள் உட்பட சானுதாரோ, சங்குதாரோ போன்ற பல சிற்றூர்கள் ஆய்வுக்கு உட்படல்.
3. சிந்து நாகரீகம் காணப்பட்ட காலப்பகுதி கி.மு 3250 தொடக்கம் கி.மு 2750
4. ஆய்வுக்காலம் 1921 – 1930
5. ஆய்வாளர்கள் சேர். ஜோன் மார்ஷல், சேர். வில்லியம் ஜோன்ஸ், சேர். அலக்சாண்டர், கண்ணிங்கம், சேர். மோஸ்டிமல் உவிலர் கலாநிதி மைகோவட்சி.
6. கண்டுபிடிக்கப்பட்ட புதைப்பொருள் மூலாதாரங்கள் கட்டிடம், கற்சிலை, இலிங்கங்கள், களிமண் பொம்மைகள், முத்திரைகள், சித்திரவடிவ எழுத்துக்கள், தாயத்துக்கள், எலும்பு.

### வழிபாடுகள்

| | |
|---|---|
| ஆண் தெய்வ வழிபாடு | விருட்ச வழிபாடு |
| பெண் தெய்வ வழிபாடு | நாக வழிபாடு |
| இலிங்க வழிபாடு | பறவை வழிபாடு |
| நந்தி வழிபாடு | நேர்த்திக்கடன் வழிபாடு |
| பலியிடல் வழிபாடு | சூரிய வழிபாடு |

**சிந்துவெளி வழிபாடுகள் இந்து சமயத்தோடு தொடர்புற்றமைக்கான சான்றாதாரங்கள்.**

| **ஆண் தெய்வ வழிபாடு** | **பெண் தெய்வ வழிபாடு** | **இலிங்க வழிபாடு** |
|---|---|---|
| ▪ கொம்புடைய யோகி<br>▪ கொம்புகளிடையே மலர் செண்டு (சூலவடிவம்)<br>▪ முந்து சிவன் (மும்மூர்த்தி)<br>▪ இடது காலை தூக்கிய வடிவம் (நடராஜர்)<br>▪ மிருகங்கள் சூழகாணும் வடிவம் (பசுபதி) | ▪ தாய்வழி சமூகம்<br>▪ பெண்ணின் தொப்புலிலிருந்து செடி வளர்தல். (உலக சிருஷ்டி பெண்)<br>▪ தரைப்பெண் வழிபாடு<br>▪ சுடுமண் பெண் சிலைகள் | அளவில் சிறிய பெரிய சிவலிங்கம்<br>▪ சிவலிங்கத்தில் துளை (மாலையாக அணிதல்) வீரசைவ வழிபாடு |
| **நந்தி வழிபாடு** | **பலியிடல் வழிபாடு** | **விருட்ச வழிபாடு** |
| ▪ முத்திரை ஒன்றில் காளை ஒன்று ஒற்றைக் கொம்புடன் யோகியின் முன்காளை மாடு – (இது நந்தி) | வாளேந்திய ஆடவன் முன்னே மண்டியிட்ட பெண், வெள்ளாட்டைப் பிடித்தபடி ஆடவனும் அவனெதிரே பலர் வணங்குவது போன்ற இலட்சினை | அரசு, வேம்பு மரவழிபாடு<br>▪ இலட்சினையொன்றில் மரமொன்றில் பெண் தேவதை அதனை வேறு ஒரு பெண் வழிபடல். மரத்திற்கு கீழ் படையல் வைத்து வழிபடல். |
| **நாக வழிபாடு** | **பறவை வழிபாடு** | **நேர்த்தி கடன் வழிபாடு** |
| முக்காலி ஒன்றின் மீது பாற்கிண்ணமும் அதன் முன் படமெடுக்கும் நாகமும் | புறா, கருடன் உரு இலட்சினை (இன்றைய மயில், காகம் வாகனம்) | தெய்வத்தின் முன் குழந்தையை கையிலேந்திய பெண்ணின் உரு<br>▪ இறைவனுக்கு உணவு படைத்தல் |

**பயிற்சி**

**1.**

1. முத்திரைகளில் உள்ள எழுத்து வடிவங்கள் எப்பெயரைச் சுட்டுவதாக சேர்.ஜோன் மார்ஷல் குறிப்பிடுகின்றார்?
2. சிந்து வெளி நாகரீக காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட யோகியின் வடிவத்தை சூழ காணப்படும் விலங்குகள் நான்கினைக் குறிப்பிடுக.
3. சிந்துவெளிகால சிவ வழிபாட்டை அறிய உதவும் புதைபொருள் சின்னங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
4. சிந்துவெளி பிரதேசத்தில் கட்டிட கலையின் வளர்ச்சியை அறிய உதவும் நகரங்கள் இரண்டும் எவை?
5. "இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது" என்று கூறிய சிந்துவெளி ஆய்வாளர் ஒருவரைக் குறிப்பிடுக.
6. சிந்துவெளி மக்கள் சிற்பங்களுக்கு பயன்படுத்திய மூலப்பொருட்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
7. சிந்துவெளி மக்கள் திராவிடர்கள் என்பதற்கான ஆதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
8. சிந்துவெளி காலத்தில் பயன்படுத்திய இசைக்கருவிகள் யாவை?
9. சிந்துவெளி கால மக்களின் கலைகளின் செல்வாக்கினை குறிப்பிடுக.
10. சிந்துவெளி கால சமூகத்தின் கட்டிட கலையின் பண்புகளைக் குறிப்பிடுக.

**2.** சிந்துவெளி காலப் பகுதியில் பின்வரும் கூற்றுக்களை குறிப்பிட்ட நபர்களின் பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்க.

1. "துளைகளை உடையதாக காணப்பட்ட ஊதுகுழல்கள் வாசிக்கும் நிலையில் இருந்தது"
2. சிந்துவெளிகால நடன சிற்பங்கள் சிவபெருமானது பிற்கால நடனத்திற்கு தோற்றுவாய் ஆகலாம்.
3. இந்திய சிற்பக்கலை இந்தியாவிற்கே உரியது.
   (சேர்.ஜோன் மார்ஷல், மாக்கே, மா.இராசமாணிக்கனார்)

**3.** இடைவெளி நிரப்புக.

1. சிந்துவெளி நகரங்களுள் ……………………………………. மேற்கு பஞ்சாப் மாநிலத்திலும் ……………………………. பாகிஸ்தானிலும் உள்ளன.
2. இந்து நாகரீகம் …………………………… தொடக்கம் ………………………. வரையான காலப்பகுதியில் சிறப்புடன் விளங்கி இருக்கலாம்.
3. சிந்து வெளி மக்களின் பிரதான தொழிலாக …………………………….. இருந்தது.
4. யோகியின் வடிவத்தை சூழ விலங்குகள் காணப்படுவது சிவனுக்கு வழங்கும் ……………………………. என்ற பெயரை விளக்குகின்றது.
5. சிந்து வெளியில் ………………………… எனும் யோகக் குறியுடைய பதக்கங்கள் காணப்பட்டதாக ஆய்வாளர் கூறுகின்றனர்.


## 1.3.1 வேதம்

- முதல் நூல்கள் - வேதம், ஆகமம்
- வேதங்களை அருளியவர் - இறைவன்
- வேதங்களை தொகுத்தவர் - வியாசர்
- வேதகால பகுதி - கி.மு 1500 – கி.மு 600
- வேதகால ஆய்வாளர்கள் - திலகர், ஜகோபி, மாக்ஸ் முல்லர்
- வேதம் அறிவு நூல்

| வேதங்களின் வேறு பெயர்கள் | காரணம் |
|---|---|
| 1. வேதம் | அறிவிற்கு கருவி |
| 2. மறை | உயர் கருத்துக்களை தெரிவிப்பது |
| 3. அபௌருஷயம் | மனிதனால் ஆக்கப்படாதது |
| 4. சுருதி | செவி வழியாக கேட்கப்பட்டதால் |
| 5. எழுதாமறை, எழுதாக்கிளவி | எழுதப்படாததால் |
| ஆக்நாயம், சாமம், சந்தமறை, சுயம்பு, நிகமம், பௌடிகம், தலவகாரம், தைத்திரியம், சாமம் | |

வேதங்களை நான்காக வகுத்தவர் வியாசர்.




வேதம் -நால்வேதம், நான்மறை, சதுர்வேதம், சதுர்மறை
இருக்கு
யசுர்
சாமம்
அதர்வம்
சங்கிதை
பிராமணம்
ஆரணியம்
உபநிடதம்
கர்ம காண்டம்
உபாசனை காண்டம்
ஞான காண்டம்
சங்கிதை
பிராமணம்
ஆரணியம்
உபநிடதம்
கர்ம காண்டம்
உபாசனை காண்டம்
ஞான காண்டம்
சங்கிதை
பிராமணம்
ஆரணியம்
உபநிடதம்
கர்ம காண்டம்
உபாசனை காண்டம்
ஞான காண்டம்
சங்கிதை
பிராமணம்
ஆரணியம்
உபநிடதம்
கர்ம காண்டடம்
உபாசனை காண்டம்
ஞான காண்டம்

- இருக்கு, யசுர், சாமம் - திரையீ வித்யா
- அதர்வ வேதம் - பிந்திய வேதம்

| சங்கிதை | பிராமணம் | ஆரணியம் | உபநிடதம் |
|---|---|---|---|
| மந்திரங்களின் தொகுப்பு | வேள்வி கிரியைகளுக்குரிய விதிகள் | வானப்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டானம் | உண்மைப்பொருள் |

| | இருக்கு வேதம் | யசூர் வேதம் | சாம வேதம் | அதர்வ வேதம் |
|---|---|---|---|---|
| | பாடல்<br>மந்திரங்களின் தொகுப்பு<br>10 மண்டலம்<br>1028 பாடல்<br>21 சாகை<br>தெய்வங்களை அழைத்தல், துதித்தல், வேண்டல்.<br>ஒரு தெய்வ கோட்பாடு | செய்யுள்<br>உரைநடைகொண்டது.<br>வழிப்பாட்டு முறை<br>101 சாகை<br>கிருஸ்ண யசூர்<br>சுக்கில யசூர்<br>யாகக்கிரியை முறை | இசைபாடல் வேண்டும் பொருளை கொடுப்பது.<br>1875 பாடல்<br>ஆர்ச்சிகம்<br>உத்தர ஆர்ச்சிகம் | மந்திரம்,<br>தந்திரம்,<br>வசியம்,<br>மருந்து.<br><br>6000<br>20 காண்டம்<br>731 சூக்தம்<br>பிற்கால விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டது. |

**<u>வேதகால தெய்வங்கள்</u>**

- ஆரம்பத்தில் இயற்கை வழிபாடு
- நாளடைவில் இயற்கை அம்சங்களே தெய்வமாக வழிபடல்
- 33 தெய்வங்களை விண், மண், இடை என 3 மண்டங்களில் வகுத்தல்

| விண்ணுலக தெய்வம் | மண்ணுலக தெய்வம் | இடையுலக தெய்வம் |
|---|---|---|
| வருணன் | பிருதுவி | இந்திரன் |
| ஆதித்யன் | அக்கினி | திருத |
| சூரியன் | பிருகஸ்பதி | அபத்யன் |
| சவிதா | சோமன் | அஜ |
| தியௌ | துவஷ்டா | ஏகபாதன் |
| மித்திரன் | சிந்து | உருத்திரன் |
| பூஷன் | விபாட் | மருத்துக்கள் |
| விஷ்ணு | சுதுத்ரீ | வாயு |
| இருஅஸ்வினி தேவர்கள் | சரஸ்வதி | பர்ஜன்யன் |
| உஷை | ராத்திரி | அப்பு |

- இறுதியில் "ஏகம் சத்விப்ரா பகுதா பதந்தி" எனும் ஒரு கடவுள் கோட்பாடு

**<u>வேதகால வழிபாடு</u>**

- பாடல் ⟶ நீண்ட ஆயுளை வேண்டும் பாடல்
  கிரியைகள் ⟶ யாகம், தானம், தட்சனை
  வேள்வி ⟶ போரில் வெற்றி, நீண்ட ஆயுள்
  மாந்திரீகம் ⟶ பேஷஜானி, ஸ்திரீகர்மாணி

**<u>தனிமனித வாழ்வு</u>**

- வாழ்க்கை படிநிலை ⟶ பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம்.
- தம்பதி ⟶ கணவன் மனைவியை சுட்டும் சொல்

**<u>சமூகவாழ்வு</u>**

- நால்வகை வர்ணம் ⟶ பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர்
- மக்கள் குழுக்களாக வாழ்ந்தனர்.
- அரசன் குழு தலைவர்

**<u>தத்துவம்</u>**

- ரிக்வேதம் 1:164:46வது பாடல் ஏகம் சத்விப்ரா பகுதா வதந்தி
- நாஸதீய சூக்தம், யம சூக்தம், வருண சூக்தம், புருஷசூக்தம்.

**<u>முக்கியத்துவம்</u>**

- இறை நம்பிக்கை, தத்துவ சிந்தனை, அரசியல், சமூக சிந்தனை வளர்ச்சியில் அதிக செல்வாக்கு.
- பிற்கால இந்துசமய இலக்கியத்தின் பிரமாணம்.
- இந்து சமய வளர்ச்சியில் பங்களிப்பு.



## பயிற்சிகள்

1. இந்து சமய முதல் நூல் எது?
2. இருக்கு வேதத்தின் மிகப்பழைய பாடல்கள் உள்ள மண்டலங்கள் எவை?
3. இருக்கு வேத பாடல்களை இயற்றிய ஐவரைக் குறிப்பிடுக.
4. யசூர் வேதங்களை ஓதுபவர்கள் எவ்வாறு அழைக்கப்படுவர்?
5. அர்ச்சிகம் என்பது யாது?
6. அதர்வ வேதத்தின் வேறு பெயர்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
7. இருக்கு வேதம் போற்றும் தெய்வங்கள் ஐந்தினைப் பெயரிடுக.
8. கிருஸ்ணயசூர் கூறும் விடயங்கள் யாவை?
9. சாமகானம் பாடி இறைவனிடம் அழியா வரம் பெற்றவன் யார்?
10. கீழோர்குரிய வேதம் என அழைக்கப்பட்ட வேதம் எது?
11. யசூர் வேதம் கூறும் சதருத்திரியத்தில் இறைவனுக்கு எத்தனை பெயர்கள் கூறி வழிப்படபடுகின்றது?
12. பிரணவம், பிஜாட்சூம் போன்ற மூல மந்திரங்களின் தோற்றம் இடம்பெற்ற வேதம்?
13. வேதங்களின் இறுதிப்பகுதியாக அமைவன யாவை?
14. தெய்வங்களை நோக்கி இம்மையிலும் மறுமையிலும் இன்பம் வேண்டி பாடும் பாடல் எது?
15. மருத்துவ ஆராய்ச்சிக்கு வழிவகுத்த வேதம் யாது?
16. வேதகாலங்களில் இடம் பெற்ற வேள்விகள் ஐந்தினைக் குறிப்பிடுக.
17. காயத்திரி மந்திரம் ஓதப்படும் கடவுள் யார்?
18. வேள்வியின் போது ஓமக்குண்டத்தில் சொரியப்படும் பொருட்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
19. வருணனுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
20. வேள்வியில் தேவர்களை அழைத்துவரும் தூதுவன் யார்?

**பொருத்தமான சொற்களை வைத்து கீறிட்ட இடம் நிரப்புக.**

1. அதர்வன வேதம் குறிப்பிடும் உழவனுக்கும் வர்த்தகனுக்கும் செல்வச் செழிப்பு போன்ற நன்மையளிக்கும் தன்மை உடைய மந்திரம் …………………………………… பெண்கள் சுபீட்சம் பற்றியும் நன்மை தீமை கருதிச் செய்யப்படுபவை …………………………….. அரசர்களின் நன்மை கருதிச் செய்யப்படும் மந்திரம் ……………………………. நீண்ட ஆயுளை அளிக்கவல்ல மந்திரம் ……………………….. எனப்படும்.

2. வேதத்தில் முழுமுதற் கடவுள் பற்றி ……………………………. சூக்தமும் பிரபஞ்சம் தொடர்பான விடயங்களை ……………………………… சூக்தமும் மறுபிறப்பும் பற்றிய கருத்துக்களை ……………………………. சூக்தமும் ஒழுக்கமும் பற்றிய தகவல்களை ………………………………… சூக்தமும் கொண்டுள்ளது.

3. ……………...., …………….., …………….., …………………. என்பன பிராமணர்களின் முக்கிய கடமைகளாகும்.

## ஆகமம்

- தொன்று தொட்டு வரும் அறிவு.
- போய் சேர்தல் அல்லது வந்தடைதல்.
- ஆன்மா மலநாசம் பெற்று முத்திக்கு வழிகாட்டும் நூல்.

| | ஆ | க | ம |
|---|---|---|---|
| 1. | பாசம் | பசு | பதி |
| 2. | சிவஞானம் | மோட்சம் | மலநாசம் |
| 3. | வழிமுறை | வருதல் | உணர்தல் |
| 4. | பசு | பதி | பாசம் |

- ஆகமம் வேறுபெயர் - சிரௌதம், சுபதந்திரம், பரசுருதி.
- வேதம் பொதுநூல் ஆகமம் சிறப்பு நூல்.
- இறைவனால் அருளப்பட்டது.
- வேதமோடாகமம் மெய்யாம் இறைவனூல் - திருமந்திரம்

**ஆகமம்**

- **சைவ ஆகமம்**
  - காமிகம் முதல் வாதுளம் 28
  - உபாகமம் 207
    மிருகேந்திரம் - விசுவான்மிகம்
- **வைணவ ஆகமம்**
  - தந்திரம் சங்கிதை
    பாகவதசாத்திரம். 108
    விகானஸ்தொகுத்தவர்
  - சகஸ்திய சங்கிதை,
    ஈஸ்வர சங்கிதை,
    காசிபசங்கிதை,
    அனிருத்த சங்கிதை
- **சாக்த ஆகமம்**
  - தந்திரம்
  - 77
  - மகாநிருவாண தந்திரம்
  - திரிபுரரகசியம்
  - காமகலாவிலாசம்

**சைவ ஆகமம் (28)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | காமிகம் | 11 | விஜயம் | 21 | புரோத்தீதம் |
| 2 | யோகஜம் | 12 | நிச்வாசம் | 22 | லலிதம் |
| 3 | சிந்தியம் | 13 | சுவாயம்புவர் | 23 | சித்தம் |
| 4 | காரணம் | 14 | ஆக்நேயம் | 24 | சந்தானம் |
| 5 | அஜீதம் | 15 | வீரம் | 25 | சர்வோகதம் |
| 6 | தீப்தம் | 16 | ரௌரம் | 26 | பரமேஸ்சுரம் |
| 7 | சுகஷ்மம் | 17 | மகுடம் | 27 | கிரணம் |
| 8 | சகஸ்ரம் | 18 | விமலம் | 28 | வாதுளம் |
| 9 | அம்சுமான் | 19 | சந்திரஞானம் | | |
| 10 | சுப்பிரபேதம் | 20 | முகப்பிம்பம் | | |

வேதம் பொது : உலகத்தவர்க்கு அருளப்பட்டது. எல்லா சமயத்தவர்க்கும் பொதுவான விடயங்கள்.

ஆகமம் சிறப்பு : இறையடியார்களுக்கு அருளப்பட்டது. மல நீக்கம் பெற்று வீடுபேறு அடைய வழிக்காட்டுகிறது. இந்து மத உட்பிரிவுகளை தனித்தனியாக கூறுவதால் சிறப்பானது.

**ஆகமங்களின் முக்கியத்துவம்**

- ஆகமம் இறைவனால் அருளப்பட்டது.
- சமயம், தத்துவம், வாழ்வியல், கலை முதலானவற்றில் செல்வாக்கு செலுத்துகிறது.

**சிவாகமம் கூறும் சைவசித்தாந்த சிந்தனை**

- ஆலய வழிப்பாட்டுடன் சித்தாந்த சிந்தனைகளை கொண்டுள்ளது.
- யோகபாதம், ஞானபாதம் என்பவற்றில் சித்தாந்த சிந்தனை அதிகமாகும்.
- கிரணம், ரௌரவம், பௌஷ்கரம் முதலிய ஆகமங்களில் சித்தாந்த சிந்தனை அதிகமாகும்.
- முப்பொருள் உண்மை
- நாற்பாதம், குருலிங்க சங்கம வழிபாடு, தீட்சை சிவசின்னம் பற்றிய விளக்கம்.
- அட்டாங்க யோகம், அட்டமாசித்தி பற்றிய விடயங்கள்.
- சுத்தாத்துவித முத்தி



**ஆகமங்களின் பொருள் மரபு**

1. கிரியைகள்
2. ஆலயக் கட்டட அமைப்பு
3. சிற்பம் ஓவியம் நடனம்
4. விக்கிரகவியல்
5. தத்துவம்

**சிவாகமம்**

- ஆ – பசு க – பதி ம – பாசம்
- சிவபெருமானே அருளினார் என்பது சைவ சமயத்தவரின் நம்பிக்கை
- சிவாகமம் 28

**நான்கு பிரிவு**

**சரியாபாதம்**

- பிராயசித்தவிதி
- பவித்திர விதி
- ஆலயஅமைப்பு விதி
- சுற்று பிரகாரம்
- கோபுரம்
- பரிபாலகர் அமைப்பு

**கிரியாபாதம்**

- மந்திரம்
- உற்சவம்
- நித்திய
- நைமித்திய
- காமிய கிரியை
- சிவசின்னங்கள்

**யோகாபாதம்**

- மந்திரம்
- உற்சவம்
- நித்திய
- நைமித்திய
- காமிய கிரியை
- சிவசின்னங்கள்

**ஞானாபாதம் (ஆகமாந்தம்**

- முப்பொருள் உண்மை
- புவனங்களின் தோற்றம்

**சிவமூர்த்தங்கள்**

1. லிங்கோற்பவமூர்த்தி
2. சுகாசனமூர்த்தி
3. சக்திமூர்த்தி
4. கல்யாண சுந்தரமூர்த்தி
5. அர்த்தநாரீசுவரர்
6. சக்கரவரதர்
7. திருமூர்த்தி
8. ஹரியத்தர்
9. சோமஸ்கந்தமூர்த்தி
10. தட்சணாமூர்த்தி
11. பிட்சாடனர்
12. சரபமூர்த்தி
13. நீலகண்ட மூர்த்தி
14. திரிபாதமூர்த்தி
15. ஏகபாதமூர்த்தி
16. பைரவர்
17. இடபாரூடரமூர்த்தி
18. கங்காளமூர்த்தி
19. காமாரி
20. காலசம்காரமூர்த்தி
21. சலந்தராரி
22. திரிபுராரி
23. சந்திரசேகர்
24. நடராஜர்
25. கங்காதரமூர்த்தி

**நித்திய கிரியை - ஷட்கால பூசை**

- உஷக்கால பூசை
- காலைசந்தி பூசை
- நண்பகல் பூசை
- சாயரட்சை பூசை
- முதற் சாம பூசை
- அர்த்த சாம பூசை

**நைமித்திய கிரியை**

- வாரம் ஒருமுறை - வெள்ளிக்கிழமை, சனிக்கிழமை
- மாதம் ஒருமுறை - சதுர்த்தி
- மாதம் இருமுறை - பிரதோஷம்
- வருடம் ஒருமுறை - தைப்பொங்கல், தீபாவளி
- வருடம் 6 முறை - நடேஷர் அபிஷேகம்
- பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை - கும்பாபிஷேகம்

**கிரியைகள்**

- ஆலயக்கிரியைகள் ஆன்மாரத்த கிரியை, பரார்த்த கிரியை என இரு வகைப்படும்.
- ஆலயக்கிரியைகள் கர்ஷனம், பிரதிஷ்டை, உற்சவம், பிரயாச்சித்தம் என மேலும் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்படும்.

**கோயிற் கிரியைகள் நான்கு வகைப்படும்**

- கர்ஷணம் - ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தை பண்படுத்துதல்.
- பிரதிட்டை - ஆலயத்தில் திருவுருவங்களை பிரதிட்டை செய்தல்
- உற்சவம் - ஆலயத்தில் வருடமொருமுறை இடம்பெறும் விழா
- பிராயச்சித்தம் - ஆலய கிரியைகளின் போது இடம் பெறும்.குற்ற நிவர்த்தியின் பொருட்டு ஆற்றப்படும் கிரியை

**கும்பாபிஷேகம் கூறும் தத்துவம்**

கொடியேற்றம் - படைத்தல்
வாகனத்திருவிழா - காத்தல்
தேர்த்திருவிழா - அழித்தல்
தீர்த்த திருவிழா - அருளல்
மௌன உற்சவம் - மறைத்தல்

**கும்பாபிஷேகத்தின் வகைகள்**

- ஆவர்த்தனம்
- அனாவர்த்தனம்
- புனராவர்த்தனம்
- அந்தரிதம்

முப்பொருள் உண்மை ⟹ பதி, பசு, பாசம்

அட்டாங்க யோகம்

1. இயமம்
2. நியமம்
3. ஆசனம்
4. பிரணாயாமம்
5. பிரத்தியாகாரம்
6. தாரணை
7. தியானம்
8. சமாதி

அட்டமா சித்தங்கள்

1. அணிமா
2. லகிமா
3. மகிமா
4. கரிமா
5. பிராப்தி
6. பிரகாமியம்
7. ஈசத்துவம்
8. வசித்துவ

**ஆகமங்கள்**

1. வேதங்களைப் பொது எனவும் ஆகமங்களைச் சிறப்பு எனவும் கூறியவர் யார்?
2. ஆகமங்களை நாதனுரை எனக் கூறும் நூல்?
3. சிவாகமங்களின் எண்ணிக்கையையும் உபாகமங்களின் எண்ணிக்கையையும் தருக.
4. ஆகமம் கூறும் கிரியை நெறியை எடுத்துக் கூறும் நூல்?
5. ஆகமங்களில் சிவபேதம் கூறும் ஆகமங்களின் எண்ணிக்கையையும் ருத்திர பேதம் கூறும் ஆகமங்களின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.
6. ஆலயம் ஒன்றில் அமைய வேண்டிய பிரகாரங்கள் பற்றி பிரகார லட்சண விதிப்படலம் எனும் தலைப்பில் கூறும் ஆகமம் எது?
7. ''திருவுருவங்கள் அளவில் மிகினும் குறையினும் நலமுடையன அல்ல'' என்று கூறும் நூல் எது?
8. இலிங்கோற்பவ மூர்த்தம் சிவாலயங்களில் அமைந்துள்ள பகுதி எது?
9. திருவுருவங்களை நன்றாக நிலைநிறுத்தல் என்பது யாது?
10. வீரசைவத்திற்குரிய முதன்மையான ஆகமங்களாகக் கொள்ளப்படுபவை?
11. சிவவிக்கிரக கலை பற்றிய நூல்கள் எவை?
12. ஆகம கிரியைகளை ஆற்றுவதில் கைதேர்ந்தவர் யார்?
13. குமாரக்கடவுளின் வழிப்பாட்டு முறையை கூறும் ஆகமம் யாது?
14. பன்னிருவேளை பூசைகள் நடைபெறும் ஆலயம் எது?
15. புனராவர்த்தன கும்பாபிஷேகம் எத்தனை வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும்?
16. விருப்பங்களை நிறைவேற்றும் பொருட்டு மேற்கொள்ளும் கிரியை எது?
17. திருநீற்றை அணியக்கூடிய இரு முறைகளும் எவை?
18. தீட்சை எனப்படுவது யாது?
19. அபரகிரியைகள் மூன்றினைக் குறிப்பிடுக.
20. திருமணகிரியையில் அம்மி மிதித்தல் எனும் சடங்கு நிகழ்தப்படுவதற்கான காரணம் யாது?

**இதிகாசம்**

- இது இவ்வாறு நடந்த கதை இதி + ஹசம் எனப்படும்.
- இதிகாசம் 3 என்பது மரபு
    1. இராமாயணம்
    2. மகாபாரதம்
    3. சிவரகசியம்
- பகவத்கீதையின் சிறப்பால் மகாபாரதமும், மகாபாரதத்தின் சிறப்பால் இதிகாசமும் ஐந்தாம் வேதம் எனப்படுகின்றது.
- சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டு இன்று அனைத்து மொழிகளிலும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது.
- இந்து சமய கலைக்களஞ்சியம்.
- இந்து பண்பாட்டு அம்சமாகிய சமயம் வழிப்பாடு, அரசியல், வாழ்வியல் தர்மம் பற்றிய விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

**மகாபாரதம்**

- உலகிலேயே மிக நீண்ட காவியம் 18 பருவங்களையும் 1 லட்சம் சுலோகங்களையும் உடையது.
- மகாபாரதத்தை வடமொழியில் வியாசரும் தமிழ்மொழியில் வில்லிப்புத்தூராழ்வாரும் பாடியுள்ளனர்.

**சமயம்** -
- விஸ்ணுவை முதன்மைப்படுத்தல்.
- ஒவ்வொரு அத்தியாயமும் ‘‘ஓம் நமோ நாராண்ய நமஸ்கிருத’’ என்று ஆரம்பிக்கிறது.
- பகவத்கீதை கிருஸ்ண அவதாரத்தை வெளிப்படுத்தும்.
- சாக்தம், கௌமாரம், சௌரம், சைவம் முதலிய சமய நெறிகளையும் அறியலாம். உதாரணம் - துர்க்கா ஸ்தோத்திரம், அர்ச்சுணன், சிவனை வழிபடல்.

**வழிபாடு**
- விரத வழிபாடு, தீர்த்த யாத்திரை, தலமகிமை, தவம், பூசைமுறை, உருவ வழிபாடு, துறவு, தியானம், ஸ்தோத்திரம்.

**வாழ்வியல்**
- இல்லறவாழ்வு, சகோதரத்துவம் - தர்மன்
- நட்பு – கர்ணன்
- தாய்ப்பாசம் - குந்தி
- தபோவன வாழ்வு, குரு குலம் (ஏகலைவன்)

**இலக்கியம்**
- வைகுந்த அம்மானை, பாரதஅம்மானை கீராதார்ஜினியம், பாஞ்சாலி சபதம்.

**தத்துவம்**
- கடவுள் ஆன்மா, ஆணவம், கன்மம், மறுபிறப்பு, கருமயோகம், பக்தி யோகம்

**பாத்திரங்கள்** தருமன், பீமன், நகுலன், அருச்சனன், சகாதேவன், திரௌபதை, குந்தி, துரோணன், கர்ணன், துரியோதனன், காந்தாரி

**இராமாயணம்**

- வடமொழியில் வான்மீகியாலும், தமிழில் கம்பராலும், ஹிந்தியில் துளசிதாசராலும் பாடப்பட்டது.
- ஏழு காண்டங்களை கொண்டது.
- 24000 சுலோகம்
- கி.பி 2ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டது.

**வழிபாடு**

விஸ்ணு வழிபாடு
சிவவழிபாடு - இராவணன் சிவபக்தன், சிவதனுசு, தவம் (கோசலை விரதம்) தீர்த்தம், தல யாத்திரை, வேள்வி, யாகம்
உருவ வழிபாடு – விநாயகர், முருகன்
சக்தி வழிபாடு – திசைதெய்வம்

**அரசியல்**

- சத்திரியர் வாழ்க்கை நெறி
- தசரதன்,பரதன் சிறந்த ஆட்சி
- அறம் அரசனின் தலையாய கடமை அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநாட்டல்

**வாழ்வியல்**

- ஒருவனுக்கொருத்தி.
- கற்பு ஆண், பெண் இருவருக்கும் உரியது.
- சகோதரத்துவம், நட்பு, தாயன்பு, குரு வழிபாடு வாழ்க்கையின் நான்கு பருவம்
- நால்வகை வர்ணத்தாரின் கடமை அறம், பொருள், இன்பம் விருந்தோம்பல், செய்நன்றியறிதல், குருகுல வாழ்வு.

**இலக்கியம்**

- இராமகதை
- இராமர் பஜனை

**தத்துவம்**

- கடவுள், ஆன்மா, ஆணவம், கன்மம்

**பாத்திரம்**

- இராமன், இராவணன், அனுமன், வாலி, சூர்ப்பனகை, இலக்குமனன், பரதன், கைகேயி, தசரதன், குகன்

## இதிகாசம்

1. ‘‘சுகிருத் சம்ஹிதம்’’ எனப்படுவது யாது?
2. இராமாயணத்தில் சிறப்பிக்கப்படும் மகாவிஷ்ணுவின் அவதாரம் யாது?
3. குரு பக்தியின் மேன்மையைக் காட்டும் மகாபாரத பாத்திரம் எது?
4. இதிகாசங்களில் நடாத்தப்பட்ட யாகங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. இதிகாசங்கள் குறிப்பிடும் தீர்த்த யாத்திரைக்கான நதிகள் ஜந்தினைக் குறிப்பிடுக.
6. சிவரகசியத்தின் ஆசிரியர் யார்?

7. ஆதிகவி எனப் போற்றப்படுபவர் யார்?
8. கீழே இராமாயண கதாபாத்திரத்தில் அடங்காதவர்
   கும்பகர்ணன், சுமித்திரை, திருதராஷ்டிரர், வாலி, குகன்
9. கீழே மகாபாரத கதாபாத்திரத்தில் அடங்காதவர்.
   அஸ்வத்தாமர், துரோணர், கர்ணன், ஏகலைவன், லவன்
10. விஸ்ணு சிந்தியம் எனும் நூலை எழுதியவர் யார்?
11. அர்ச்சுணன் சிவனிடம் இருந்து பெற்ற அஸ்த்திரம் யாது?
12. அர்ச்சுணன் பாசுபதம் பெற்றமை பற்றிக் கூறும் நூல் எது?
13. இராமாயணம், மகாபாரதம் இறுதி வடிவம் பெற்ற காலப்பகுதி யாது?
14. தசரதன் அயோத்தியில் செய்த யாகம் யாது?
15. பாரத யுத்தம் முடிவடைந்ததும் அனுமன் உபதேசித்த கீதை யாது?
16. இராமாயண யுத்தத்தில் எஞ்சிய அரக்கன் யார்?
17. இராமாயணம் எவ்வம்ச வரலாற்றைக் கூறுகின்றது?
18. வைஷ்ணவர் சரணாகதி வேதம் எனப் போற்றும் நூல் எது?
19. மகாபாரதத்தின் இருதயப்பகுதியாய் விளங்குவது யாது?
20. தருமன் இந்திரப் பிரஸ்தத்தில் செய்த யாகம்?

**புராணங்கள்**

- புராணங்கள் என்றால் பழமையானது எனும் கருத்தைத் தரும்.
- புராதனம் என்பதன் சிதைவே புராணம் எனப்படும்.
- குப்தர் காலத்தில் பௌராணிகர்களால் தோற்றுவிக்கப்பட்து.
- புராணங்கள் மூவகைப்படும்.
  1. வடமொழிப்புராணம்
  2. தமிழ் மொழிப் புராணம்
  3. தலபுராணம்

**வடமொழிப்புராணம்**

- இது மகாபுராணம், ஆதி புராணம் எனப்படும்.
- 5 அல்லது 6 லட்சம் சுலோகங்களைக் கொண்டுள்ளது.
- சமய உண்மைகளை சரித்திர பாரம்பரியத்துடன் இணைத்து பாமர மக்களும் படித்துணர்ந்து இன்புறும் வண்ணம் பாடப்பட்டுள்ளன.
- இவை அனைத்தும் செய்யுள் வடிவில் அமைந்தமை.
- இவை குப்தர்காலம் வரையிலான வட இந்திய வரலாற்றுச் செய்திகளை தருவது அறிவியல் களஞ்சியமாக விளங்குகின்றது.
- இலக்கியம், இலக்கணம், நுண்கலை, வைத்தியம், அரசியல், போர்க்கலை, கட்டிடகலை முதலிய செய்திகளும் மகாபுராணங்களில் அடங்கியுள்ளது.

- முழுமுதற் கடவுள் கோட்பாடு பக்தி நெறி என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு சமயங்கள் வளர்ச்சிப்பெற்ற காலத்தில் அவற்றின் தத்துவங்களையும் மரபுகளையும் விளக்கும் வகையில் எழுதப்பட்டன.
- இவை ஈஸ்வரன், ஆன்மா உலகம், வழிபாடு அருள் வீடுபேறு என்பவற்றை கதை மூலம் விளக்குகின்றன.
- தலவழிபாடு, மகாத்மியம், தலபுராணம் என்பவற்றிற்கு புராணங்கள் வழிக்காட்டுகின்றன.
- உலகியல் சார்ந்த கருத்துக்களும் ஆன்மிக கருத்துக்களும் விருத்தி பெற்றுள்ளன.
- ஐவகை இலக்கணமுடையவை (பஞ்ச இலக்கணம்)
  1. சர்க்கம் - உலகத்தின் தோற்றம்.
  2. பிரதி சர்க்கம் - உயிர்களின் தோற்றமும் ஒடுக்கமும்.
  3. வம்சம் - மன்னர் பரம்பரை
  4. மனுவந்தரம் - மனுக்களின் காலங்கள்
  5. வம்சானுசரிதம் - மன்னர் பரம்பரையோடு தொடர்பான கதைகள்.

**தச இலட்சணம்**

பஞ்சஇலட்சணங்களோடு

6. முக்தி
7. கேது
8. ரக்ஷா
9. அபாரஷ்ய
10. விருத்தி

**மகாபுராணங்கள் பதினெட்டு**

சிவபுராணங்கள்

1. சிவபுராணம்
2. பௌவிடிய புராணம்
3. மார்க்கண்டேய புராணம்
4. ஸ்கந்த புராணம்
5. வாமன புராணம்
6. கூர்ம புராணம்
7. இலிங்க புராணம்
8. வராக புராணம்
9. மச்ச புராணம்
10. பிரம்மாண்ட புராணம்

விஷ்ணு புராணங்கள்

1. கருட புராணம்
2. விஷ்ணு புராணம்
3. நாசதீய புராணம்
4. பாகவத புராணம்

பிரம்ம புராணங்கள்

1. பிரம்ம புராணம்
2. பதும புராணம்

சூரிய புராணங்கள்

1. பிரம்மகைவர்தன புராணம்

அக்கினி புராணங்கள்

1. ஆக்நேய புராணம்

மகாபுராணங்கள் தெய்வீகப்பரத்துவத்தை விளக்குகின்றது.

| | | |
|---|---|---|
| சிவபரத்துவம் | - | அடிமுடி தேடியகதை |
| விஷ்ணுபரத்துவம் | - | பாகவத புராண அவதாரம் |
| சக்தி பரத்துவம் | - | துர்க்கை மகிடாசுரனை அழித்தது |

பக்தி மரபுகள் ➡ மார்க்கண்டேயர், பக்த பிரகலாதன் கதை

**புராணங்கள் காட்டும் தெய்வங்களும் வழிப்பாட்டு முறைகளும்**

- புராணங்கள் சிவ வழிப்பாட்டை உயர்த்திக் காட்டின.
- படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய தொழில்களுக்காக பிரம்மா, விஷ்ணு, சிவன் போன்ற தெய்வங்கள் போற்றப்பட்டன.
- விஷ்ணுவின் அவதாரக் கோட்பாட்டின் படி விஷ்ணுவின் மகிமையைக் காட்டுகின்றன.
- ஸ்கந்த புராணம் போன்றவற்றில் முருகன், வைரவர், விநாயகர், துர்க்கை போன்ற தெய்வங்கள் சிறப்பிக்கப்படுகின்றன.
- அறுவகை சமயச் சிறப்பு புராணங்களில் காணப்படுகின்றன.
- வேதங்கள் கூறும் வேள்வி யாகத்தை விட உருவ வழிபாடும், கோயில் வழிபாடும் காணப்படுகின்றது.
- சூரிய, லிங்க, தீர்த்த, தல வழிபாடு விளக்கப்பட்டுள்ளது. உதாரணம் - கந்த புராணம் முருகன் சிவலிங்கத்திற்கு பூசை செய்தல்.
- விரதம், தவம், பூசை சாதாரண மக்களால் மேற்கொள்ள கூடியவாறு அமைதல்.
- வீட்டுக்கிரியைகள், விழாக்கள், பண்டிகைகள் கொண்டாடப்பட்டன.
- விபூதி உருத்திராக்கம் திருவைந்தெழுத்து ஆகியவற்றின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.
- மந்திர வழிபாடு சிறப்பிக்கப்படுகிறது.

**முக்கியத்துவம்**

- நண்பர் போல அறிவுரை தருவது.
- கோயில் வழிபாடு உருவ வழிபாடு பற்றி கூறுவது.
- சமய கருத்துக்களை இலகு படுத்தியும் எளிமைபடுத்தியும் கூறுவது.
- அறநெறி போதனை புரிவது.
- இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது.
- சிற்ப, விக்கிரக, ஓவிய கலை வளர்ச்சி.
- இலக்கியங்கள், காவியங்களுக்கு முன்னோடியானது.
- இறை நம்பிக்கையை வலுப்படுத்துவன.
- தத்துவத்தை கதை வடிவில் கூறுகின்றது. உ+ம்: மார்க்கண்டேய புராணம்

**புராணங்கள் பிற்கால சமய மரபுகளின் செலுத்திய செல்வாக்கு**

- தல புராணம், தமிழ் புராணம் என்பன தோன்றக் காரணம்.
- மான்மியங்கள் உருவாக காரணம்.
- புராணபடனம், கந்தபுராண கலாசார மரபு.
- நாடகம், காவியம், ஓவியம், நடனம் போன்ற கலைகள் தோன்ற காரணம்.
- திருமுறைகளிலும் பிரபந்தங்களிலும் புராணக்கதைகள் செல்வாக்கு செலுத்தின.

தமிழ் புராணம் :- கந்த புராணம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம்.

தலபுராணம் :- காஞ்சிபுராணம், திருவானைக்கா புராணம், திருக்கேதீச்சர புராணம் தட்சணகைலாய புராணம்.

**புராணங்கள்**

1. புராணங்கள் கூறும் சிவனின் அட்ட மூர்த்தங்களும் யாவை?
2. ஈழத்து தல புராணம் 3 கூறுக.?
3. பஞ்சலட்சணங்கள் யாவை?
4. பூரணாத் புராணம் இதி உச்சியதே என்பதன் கருத்து யாது?
5. புராணமுக்கனி என சிறப்பிக்கப்படும் புராணங்கள் யாவை?
6. மகா புராணங்கள் எத்தனை?
7. மகா புராணங்கள் எத்துறைகள் பற்றி விபரிக்கின்றது?
8. மகா புராணங்களின் மறு பெயர்கள் யாவை?
9. விஷ்ணுவும் பிரம்மாவும் சோதிப்பிழம்பாக அடிமுடிதேடிய புராணக் கதையோடு தொடர்புடைய சிவவடிவம் யாது?
10. புராணங்கள் யாரால் அருளப்பட்டவை?
11. மூவாறு தொல்கதை என்ற புராணக்கதை பற்றி கூறும் புராணம் யாது?
12. தெய்வீக வரலாற்றைப் பரப்பும் நோக்கில் எழுதப்பட்டவை யாவை?
13. சக்தி பரத்துவத்தை கூறும் புராணம் எது?
14. பாவச் செயல்கள் அதன் பிராயச்சித்தம் என்பவற்றைக் கூறும் புராணம் எது?
15. கந்த புராணத்தில் சூரன் போர் குறிப்பது யாது?
16. பெரிய புராணத்தை இயற்றியவர் யார்?
17. புராணங்கள் கூறும் திசை தெய்வங்கள் 3 இனைக் குறிப்பிடுக.
18. இரணியன் கதையுடன் தொடர்புடைய புராணம் யாது?
19. திருக்கோணேச்சரத்துடன் தொடர்புடைய தல புராணம் யாது?
20. புராணங்களுக்கு கூறும் 6 வகையான உரைகளும் எவை?

# தமிழகத்தில் ஏற்பட்ட சமய பண்பாட்டு வளர்ச்சி

**சங்ககாலம் / சங்கமருவிய காலம்**

சங்ககாலம் தமிழ் நாட்டின் ஆரம்பபண்பாட்டுக் காலமாகும். இது தமிழ் நெறியின் பண்பாடு, கலை, இலக்கியம் ஆகியவற்றின் தொன்மைச்சிறப்பினைக் காட்டும் காலமாக அமைந்தது.
சங்ககால நெறியில் சங்ககாலம், சங்கமருவிய காலம் இரண்டும் உள்ளடக்கப்படுகின்றன. சங்ககாலத்தில் மௌரியர், யவனர், நந்தர் வம்சங்களின் பண்பாட்டம்சங்களும் வடமொழி இலக்கியங்களும் கலந்தன.
அரசன் - பிரதானி சமூக தலைவனாவான். பிராமனர்களுக்கு தானம் வழங்கினான். குடிமக்களின் நலன் கருதி செயற்பட்டான்.

| **ஐவகை நிலம்** | | **கடவுளர்** |
|---|---|---|
| குறிஞ்சி | ⟶ | முருகன் |
| முல்லை | ⟶ | திருமால் |
| மருதம் | ⟶ | இந்திரன் |
| நெய்தல் | ⟶ | வருணன் |
| பாலை | ⟶ | கொற்றவை |

பிராமணர்களது கலாசார பரவல் இடம் பெற்றது.

கலை ⟶ கட்டிடகலை, சித்திரமாடங்கள், துணங்கைக் கூத்துகள், பாணர் இசைகள் முதலியன காணப்பட்டன.

சங்ககாலத்தில் வைணவ வழிபாடு தோற்றம் பெற்றது. தொல்காப்பியத்தில் **“மயோன் மேயமை வரை உலகு**’’ என்பதில் மாயோன் ⟶ திருமாலாக குறிப்பிடப்பட்டுள்ளது. மாயோன், சேயோன், வேந்தன் வழிபாடுகள் காணப்பட்டன. சிவ வழிப்பாட்டில் புராணக்கதைகள் செல்வாக்கு செலுத்தின. திருவாதிரை நாள் சிறப்பிடம் பெற்றது. கறைமிடற்றண்ணல், ஆலமர் கடவுள், முக்கட் செல்வன் என சிவன் போற்றப்பட்டார். பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்கள் சிறப்பானவை.

வழிப்பாட்டம்சங்களில் வெறியாட்டு, நடுகல், பாவை நோன்பு என்பன இடம் பெறும்.

திருமுருகாற்றுப்படையில் இருவகை வழிபாடு, ஆறுபடை வீடுகள் என்பன கூறப்பட்டுள்ளன. கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை என்பன சங்கமருவிய கால நூல்களாகும்.

‘‘பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேதனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண் குடை மன்னவன் கோயிலும்’’

எனும் சிலப்பதிகார பாடலில் சிவனுக்கும், முருகனுக்கும், திருமாலுக்கும், பலராமனுக்கும் கோயில்கள் இருந்ததாக கூறப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| செங்கண் நெடியோன் நின்ற வண்ணத்தை | – | திருமால் |
| மாங்கட்டு மறையவன் | - | திருமால் |
| நீலமேனி வாழிலை பாகத்து ஒருவன் | - | சிவன் |

போன்ற வரிகள் அக்கால தமிழ் தெய்வ மரபை காட்டுகின்றது. இங்கு பிராமணர்களுக்கும் களப்பிரர் எனும் சமண சமயம் சார்ந்தோருக்கும் சங்கமருவிய காலத்தில் போராட்டம் நிலவியது. காரைக்காலம்மையார் திருவிரட்டை மணிமாலை, அற்புதத்திருவந்தாதி என்பவற்றையும் முதல் ஆழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் போன்றோர் முதல் மூன்று பிரபந்தங்களை இக்காலத்தில் இயற்றினர். மரபு இந்து சமுதாய வளர்ச்சியில் களப்பிரர் வருகை மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. எனினும் இது தமிழக வரலாற்றில் பின்னடைவுக் காலமாகும்

**பயற்சிகள்**


1. நக்கீரன் எழுதிய முருக வரலாற்று நூல் எது?
2. காரைக்காலம்மையார் பாடிய பிரபந்தங்களைக் குறிப்பிடுக.
3. சங்கமருவிய காலத்தைச் சார்ந்த ஆழ்வார்கள் யாவர்?
4. ‘‘வேந்தன் மேய தீம்புனல் உலகம்’’ என்று வர்ணிக்கப்பட்ட நிலம் எது?
5. ஆறுபடை வீடுகளும் எவை?
6. நீலமேனி வாலிலைபாகத்து ஒருவன் எனும் சங்ககால வரியின் மூலம் குறிப்பிடப்படும் புராணக் கதை யாது?
7. சங்ககால முதல் நூல் எது?


8. குறிஞ்சி நிலக் கடவுள் யார்?
9. சங்ககால நாட்டார் வழிபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
10. சங்ககாலம் குறிப்பிடும் முக்கட்செல்வன் யார்?

## பல்லவர் காலம்

பல்லவர் காலம் கி.பி 6ம் நூற் - கி.பி 9ம் நூற்றாண்டு வரை சங்கமருவிய காலத்தில் களப்பிரர் வருகையால் பின்னடைவு நிலையை அடைந்திருந்தது இந்து சமயம் பல்லவர் கால ஆரம்பத்தில் பின்னடைவு நிலையையே அடைந்திருந்தது. நாயன்மார்கள் ஆழ்வார்கள் தோற்றம் பெற்று அற்புதங்கள், வாதங்கள், பதிகங்கள் என்பவற்றின் மூலம் சமயத்துறை சார்ந்த இயக்கமாக பக்தி இயக்கம் தோற்றம். அதனைத் தொடர்ந்து பல்லவ அரசர்களால் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. பல்லவர் காலம் சமய பொறை நிகழ்ந்த காலமாகும்.

### பல்லவ அரசவம்சம்






**பல்லவராட்சியில் வேதம் ஆகமம் - வளர்ச்சி**

- பிராமாணக்குடியிருப்புகளை விரிவுபடுத்தினர்.
- வேதாகம மரபுகள் பரவின.
- திருக்கோயில்கள் எழுச்சி.
- கோயில் பூசை மரபுகள் தோன்றின.
- திருக்கோயில் நகரங்கள் உருவாகின.
- அரண்மனை சமயச்சடங்குகள் மேலோங்கின.
- அரண்மனைச் சடங்குகள் ஆலய சடங்குகளாகின.
- வேத ஆகம கல்வி மரபு பரவியது.
- வேதம், வேதாங்கம், மீமாம்சை முதலியன போதிக்கப்பட்டன.
- மரபு வழி சைவமரபு மறுமலர்ச்சியடைந்தமை.
- பிரமதேயம், அக்கிரகாரங்களின் எழுச்சி.

**சைவசமயத்திற்கு அரசர்களின் பணி**

- சிம்ம விஷ்ணு வைணவ அரசன்.
- இவனது மகன் மகேந்திர வர்மன்.
- மகேந்திர வர்மன் காலத்திலேயே இந்து மதத்தில் திருப்பங்கள் ஏற்பட்டன.

| மகேந்திர வர்மனின் விருது பெயர்கள் | திறமை |
| --- | --- |
| • விசித்திரசித்தன் | • நூலாசிரியர்<br>• கட்டிட நிர்மான சிற்பி<br>இசை வல்லுனர்<br>• ஓவியன்<br>• கவிஞன் |
| • வியத்தகு திறந்தோன் | |
| • சங்கீர்ணஜாதி | |
| • குணபரன் | |
| • மந்தவிலாசன் | |
| • ஷேத்ரகாரி | |
| • சித்திரகாரப்புலி | |

- முதன் முதலில் கற்களால் கோயில் அமைத்தான்.
- சித்தன்னவாசல் குகை ஓவியங்கள் இவனால் வரையப்பட்டது.
- குடுமியா கல்வெட்டில் சிவதோத்திரம்.
- குணபர ஈச்சரம் கட்டுவித்தான் சீயமங்கலம், வல்லம் முதலிய இடங்களில் குடபோக ஆலயம் அமைத்தல்.

| **ஏனைய அரசர்கள்** | **பணிகள்** |
|---|---|
| 1ம் சிம்மவர்மன் | • திருக்கழுக்குன்றம் சிவன்கோயிலுக்கு தானம் செய்தான் |
| 3ம் சிம்மவர்மன் (ஐயடிகள் காடவர்கோன்) | • 24 சிவத்தலங்கள் பற்றி ஷேத்திர வெண்பா பாடியுள்ளார். |
| மாமல்லன் | • சாளுக்கியருடன் போராடி தமிழகத்தை மீட்டவன்.<br>• ரதக்கோயில் அமைத்தவன்.<br>• மாமல்லபுரம் கலைக்கூடம், குடபோக மண்டபங்கள், ஒற்றை கல் ரதக்கோயில் இதிகாசபுராண சிற்பங்கள், பாண்டவ ரதங்கள், மகிடாசுர மண்டபம். |
| பரமேசுவரவர்மன் | • கூரம் எனுமிடத்தில் சிவன் கோயில் அமைத்தான்.<br>• 108 சதுர்வேதிகட்கு நிலமளித்தான் திருமுடியால் உருத்திராட்சத்திலான மகாசிவலிங்கத்தை தரித்தான்.<br>• சிவனை நினையாதோர் ஆறுமுறை சபிக்கப்பட்டவர்கள் எனும் இவனது மாமல்லபுரக் கணேசர் கோயில் கல்வெட்டு. |
| இரண்டாம் நரசிம்மவர்மன்(இராசசிம்மன்) | • 40 ஆண்டு ஆட்சி.<br>• மகாபலிபுரத்திலும் காஞ்சிபுரத்திலும் சைவ வைணவ ஆலயம் அமைத்தல்.<br>• காஞ்சிகடிகையை மறுசீரமைப்பு செய்தல்.<br>• பாண்டியரிடையே சமய ஒருமைப்பாடு ஆலயங்களுக்கு சொத்துக்கள் வழங்கல்.<br>• வைதீக கல்வி பரவியது.<br>• பாசுபதம், கபாலிகம் எனும் சைவப் பிரிவு வளர்ச்சி.<br>• காஞ்சிகைலாசநாதர் கோயில் ( பெரியகற்றளி) அமைத்தல் புராண இதிகாச கதைகள் போதிக்கப்பட்டன. |

**இராச சிம்மன் விருதுப் பெயர்கள்**

- சிவசூடாமணி
- சைவசித்தாந்த மார்க்கன்
- ரிஷபலாஞ்சனன்
- ஆகமப்பிரியன்
- சங்கரபக்தன்

**பல்லவர் கால வைணவ பணி**

- இதிகாசபுராணக் கதை மரபு பரப்பப்பட்டது
- ஆழ்வார்கள் மூலமாக பிரபந்தங்கள் பாடப்பட்டன.
- தென்கலை வைணவம் வளர்ச்சியடைந்தது.

**பல்லவர் கால சைவப் பணி**

- ஆகமவழியை பின்பற்றிய மாகேஸ்வரர்கள் ஆகமங்கள் கடைப்பிடித்து வீர சைவர்கள் எனப்பட்டனர்.
- காளாமுகர், மாவிரதர், பாசுபதர் முதலிய வைசவசமயப் பிரிவினர் காணப்பட்டனர்.
- நாயன்மார் பக்திநெறியை வெளிப்படுத்தினர்

**சைவசமய பக்தி இயக்கம்**

- புறசமய கண்டனம்.
- சைவசமய மீட்டுருவாக்கம்.
- இறைவனை அன்பு வழியில் வழிபடல்.
- தோத்திரப் பாடல்கள் பாடல்.

- இசையுடன் பாடல், கலைஞர்களை இணைத்தல்.
- சைவப் பெண்களை பக்தி இயக்கத்தில் இணைத்தல்.
- மன்னர்களை சைவசமயத்தில் சேர்த்தல்.
- சிவசின்னங்களைப் பேணுதல்.
- பஞ்சாட்சர மந்திரம் ஓதுதல்.
- ஆலயத் தொண்டுகளை செய்தல்.
- ஊர் ஊராக சென்று புராணக் கதைகளைக் கூறல்.
- இறையருள் மூலம் அற்புதங்கள் பல செய்தல்.
- வாதங்கள் மூலம் சைவசமயம் மெய்ச்சமயம் என வாதிடல்.
- பல்வேறு மார்க்கங்கள் மூலம் சிவனைப்போற்றல்.


**வைணவத்தின் திருப்பணி**

- திருமால் பக்தியில் மூழ்கித் திளைத்தல்.
- திருமால் மீது தமிழில் தோத்தரப்பாடல்களைப்பாடுதல்.
- கடவுள் மீது இடையறா ஈடுபாடு கொண்டவர்கள்.
- பஜனை பாடும் மரபு.
- புராண இதிகாச கதையை ஆதாரமாக கொண்டவர்கள்.
- பல்வேறு பாவங்களில் விஸணுவைப் போற்றியவர்கள் (தாஸ்ய, மதுர, சகிய).
- மங்களாசனம் பெற்ற திவ்ய தேசங்களின் உருவாக்கத்திற்கு அடித்தளமிட்டவர்கள்.

## திருஞானசம்பந்தர்

| | |
|---|---|
| நாடு | :- சோழநாடு |
| ஊர் | : சீர்காழி |
| குலம் | : வைதிகப் பிராமணர் |
| தாய் | : பகவதியார் |
| தந்தை | : சிவபாதவிருதயர் |
| வேறு பெயர்கள் | : கவுணியர்கோண், காழிவேந்தர், பரமசமய கோளரி, பாலறாவாயர், ஆளுடைய பிள்ளை. |
| முதலில் பாடிய பதிகம் | : “தோடுடைய செவியன்......” |
| கடைசியில் பாடிய பதிகம் | : “காதலாகிக் கசிந்து.....” |
| பாடிய பாட்டுக்களின் தொகை | : 16000 |
| இப்போதுள்ளவை | : 384 பதிகங்கள் |
| திருமுறை வகுப்பு | : 1ம், 2ம், 3ம் திருமுறைகள் |
| முதலில் அருள் பெற்ற தலம் | : திருப்பிரமபுரம் |
| முத்தி பெற்ற தலம் | : திருப்பெருமண நல்லூர் |

| | |
|---|---|
| சமகாலத்து நாயன்மார் | : திருநாவுக்கரசர், அப்பூதியடிகள், முருகநாயனார், சிறுத்தொண்டர், நெடுமாறன், குலச்சிறையார், , திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர், மங்கையற்கரசியார், குங்கிலியக்கலயர். |
| முத்தியடைந்த வயது | : 16 |
| முத்தியடைந்த தினம் | : வைகாசி மூலம் |
| வாழ்ந்த காலம் | : கி.பி. 7ம் நூற்றாண்டு |



**அற்புதங்கள்**

1. 3 வயதிலே உமாதேவியார் சுரந்து பொற்கிண்ணத்தில் ஊட்டிய திருமுலைப்பாலை உண்டது.
2. சிவனிடம் பொற்றாளமும், முத்துப்பல்லக்கும், முத்துச் சின்னமும், முத்துப்பந்தரும், உலவாக்கிழியும், படிக்காசும் பெற்றது.
3. வேதாரணியத்திலே வேதங்களினாலே பூட்டப்பட்டு அப்பருடைய திருப்பதிகத்தினாலே திறக்கப்பட்ட திருக்கதவு அடைக்கப் பாடியது.
4. பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியது.
5. பாண்டியனுக்கு கூனையும் சுரத்தையும் போக்கியது.
6. சமணர்களுக்கெதிரே தேவாரத் திருவேட்டை அக்கினியிலே போட்டு பச்சையாக எடுத்தது.
7. வைகையாற்றிலே திருவேட்டை போட்டு எதிரேறும்படி செய்தது.
8. புத்த நந்தியுடைய தலையிலே இடியிடிக்கச் செய்தது.
9. ஆற்றிலே தாமும் அடியார்களும் ஏறிய ஓடத்தைத் திருப்பதிகத்தினாலே கரை சேர்த்தது.
10. ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியது.
11. பாம்பு தீண்டிய விஷத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தது.
12. இறந்த பெண்ணினுடைய எலும்பைப் பெண்ணாக்கியது.
13. தமது திருக்கல்யாணத்தைத் தரிசிக்க வந்தவர்கள் எல்லோரையும் தம்மோடு அக்கினியிலே புகுவித்து முத்தியிலே சேர்த்தது.

# திருநாவுக்கரசர்

| | | |
|---|---|---|
| நாடு | : | திருமுனைப்பாடி நாடு |
| ஊர் | : | திருவாமூர் |
| குலம் | : | வேளாளர் |
| தாய் | : | மாதினியார் |
| தந்தை | : | புகழனார் |
| வேறு பெயர்கள் | : | வாகீசர், ஆளுடைய அரசர், தாண்டக வேந்தர், அப்பர், உழவாரப் படையாளி. |
| முதலில் பாடிய பதிகம் | : | ''கூற்றாயினவாறு விலக்ககலீர் .....'' |
| கடைசியில் பாடிய பதிகம் | : | ''எண்ணுகேன்.....'' |
| பாடிய பாட்டுக்களின் தொகை | : | 49,000 |
| இப்போதுள்ளவை | : | 311 பதிகங்கள் |
| திருமுறை வகுப்பு | : | 4ம், 5ம், 6ம் திருமுறைகள் |
| முதலில் அருள் பெற்ற தலம் | : | திருவதிகை வீரட்டானம் |
| முத்தி பெற்ற தலம் | : | திருப்புகலூர் |
| சமகாலத்து நாயன்மார் | : | சம்பந்தர், அப்பூதியடிகள், முருகநாயனார், சிறுத்தொண்டர், குங்கிலியக்கலயர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர். |
| முத்தியடைந்த வயது | : | 81 |
| முத்தியடைந்த தினம் | : | சித்திரைச் சதயம் |
| வாழ்ந்த காலம் | : | கி.பி. 7ம் நூற்றாண்டு |



**அற்புதங்கள்**

1. சமணர்களாலே 7 நாட்கள் சுண்ணாம்பு அறையிலே பூட்டப்பட்டிருந்தும் வேகாது பிழைத்தது.
2. சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டும் சாகாது பிழைத்தது.
3. சமணர்கள் விடுத்த யானை இவரை கொல்லாமல் வலஞ் செய்து வணங்கியது.
4. சமணர்கள் கல்லிலே சேர்த்துக்கட்டிச் சமுத்திரத்திலே இடவும் அக்கல்லே தோணியாகிக் கரையேறியது.
5. சிவபெருமானிடத்தே படிக்காசு பெற்றது.
6. வேதாரணியத்திலே வேதங்களாலே பூட்டப்பட்ட திருக்கதவு திறக்கப் பாடியது.
7. பாம்பு கடித்து இறந்த அப்பூதியடிகளின் பிள்ளையை உயிர்ப்பிக்கச் செய்தது.

# சுந்தரர்

| | |
|---|---|
| நாடு | : திருமுனைப்பாடி நாடு |
| ஊர் | : திருநாவலூர் |
| குலம் | : சிவப்பிராமணர் |
| தாய் | : இசைஞானியர் |
| தந்தை | : சடையனார் |
| வேறு பெயர்கள் | : நம்பியாரூரர், திருநாவலூர், வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், ஆளுடைய நம்பி. |
| முதலில் பாடிய பதிகம் | : “பித்தா பிறை சூடி .....” |
| கடைசியில் பாடிய பதிகம் | : “தலைக்கு தலை மாலை” |
| பாடிய பாட்டுக்களின் தொகை | : 38,000 |
| இப்போதுள்ளவை | : 100 பதிகங்கள் |
| திருமுறை வகுப்பு | : 7ம் திருமுறைகள் |
| முதலில் அருள் பெற்ற தலம் | : திருவெண்ணை நல்லூர் |
| முத்தி பெற்ற தலம் | : திருவஞ்சைக்களம் (திருக்கையிலை) |
| சமகாலத்து நாயன்மார் | : சடையனார், கலிக்காமர், இசைஞானியார், நரசிங்க முனையரையர், விறன்மிண்டர், சேரமான், மானக்கஞ்சாரர் பெருமிழலைக் குறும்பர். |
| முத்தியடைந்த வயது | : 18 |
| முத்தியடைந்த தினம் | : ஆடிச்சோதி |
| வாழ்ந்த காலம் | : கி.பி. 9ம் நூற்றாண்டு |



**அற்புதங்கள்**

1. செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொண்டது.
2. சிவன் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை விருத்தாசலத்திலே உள்ள ஆற்றிலே போட்டு திருவாரூரில் உள்ள குளத்தில் எடுத்தது.
3. காவேரியாறு பிரிந்து வழிவிடச் செய்தது.
4. முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம்முதலை வாயிலிருந்து அழைத்துக் கொடுத்தது.
5. வெள்ளை யானையில் ஏறிக் கொண்டு திருக்கைலாயத்திற்கு ஏழுந்தருளியது.
6. பரவையாரின் பொருட்டு இறைவனைத் தூது விடுத்தது.

# மாணிக்கவாசகர்

| | |
|---|---|
| நாடு | : பாண்டி நாடு |
| ஊர் | : திருவாதவூர் |
| குலம் | : அமாத்தியப் பிராமணர் |
| தாய் | : சிவஞானவதியார் |
| தந்தை | : சம்புப் பாதாசிரியர் |
| வேறு பெயர்கள் | : திருவாதவூரர், ஆளுடைய அடிகள், மணிவாசகர், கோவை வேந்தர். |
| முதலில் பாடிய பதிகம் | : “நமச்சிவாய வாழ்க .....” |
| பாடிய பாடல்கள் | : திருக்கோவையார் 400 பாடல்கள், திருவாசகம் 648 பாடல்கள். |



திருமுறை வகுப்பு : 8ம் திருமுறைகள்

முதலில் அருள் பெற்ற தலம் : திருப்பெருந்துறை

முத்தி பெற்ற தலம் : தில்லைச் சிதம்பரம்

சமகாலத்து நாயன்மார்: -

முத்தியடைந்த வயது : 32

முத்தியடைந்த தினம் : ஆனிமகம்

வாழ்ந்த காலம் : கி.பி. 8ம் நூற்றாண்டு எனக் கூறுவார்கள்.

**அற்புதங்கள்**


1. சிவனே நரியைக் குதிரையாக்கிக் கொண்டு வரும்படியும் மண்சுமந்து அடிபடும் படியும் பெற்றுக் கொண்டது.
2. புத்தர்களைத் தருக்கத்திலே வென்று ஊமைகளாக்கி பின் ஊமை தீர்த்துச் சைவர்களாக்கியது.
3. பிறவி முதல் ஊமையாய் இருந்த ஒரு பெண்ணை ஊமை தீர்த்துப் புத்தர்கள் வினாவிய வினாக்களுக்கு விடை சொல்லும்படி செய்தது.
4. தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளி வந்து எழுதும்படி பெற்றுக் கொண்டது.
5. எல்லோருங் காணக் கனகசபையினுள்ளே புகுந்து சிவத்தோடு கலந்தது.

**பல்லவர் காலம்**

1. பல்லவர்காலத்தில் ஆழ்வார்களால் பாடல் பெற்ற தலங்களை எவ்வாறு அழைப்பர்?
2. ''அசரீரி கேட்ட மன்னன்'' எனப் போற்றப்படுபவன் யார்?
3. ''வித்தியா வீநீதன்'' என்ற விருதுப்பெயர் கொண்டவன் யார்?
4. பல்லவர் கால கட்டடக் கலையில் ''சேத்திரகாரி'' எனப் போற்றப்படுபவன் யார்?
5. பல்லவர் கால முதல் அரசன் யார்?
6. ஆகமஅனுசாரி, சைவசித்தாந்தி எனப் போற்றும் பல்லவ மன்னன் யார்?
7. பக்தியியக்க காலத்தில் யாகங்கள் செய்யப்பட்டதற்கு சான்றுகள் தருக.
8. வாதாபியை வெற்றி கொண்டு வாதாபி கணபதியை தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்த பல்லவ மன்னன் யார்?
9. இராசசிம்மனுடன் தொடர்புடைய மனதால் கோயில் கட்டிய நாயனார் யார்?
10. படிக்காசு பெற்று பஞ்சம் போக்கிய இரு நாயன்மார்களும் யாவர்?
11. சேரமான் பெருமாளின் தோழரான நாயனார் யார்?
12. திருப்பல்லாண்டு பாடிய சைவவைணவ அடியார் யார்?

**13.** திருத்தாண்டகம் பாடிய சைவவைணவ அடியார் யார்?
**14.** திருப்பாவை பாடிய சைவவைணவ அடியார் யார்?
**15.** சேர மன்னர்களில் சைவவைணவ நாயன்மார்களையும், ஆழ்வார்களையும் குறிப்பிடுக.
**16.** திருமுறைகளை தொகுத்தவர் யார்?
**17.** சூலை நோய் கொடுத்து சிவபெருமானால் ஆட்கொள்ளப்பட்டவர் யார்?
**18.** சிவபெருமானால் காலால் உதைத்து ஆட்கொள்ளப்பட்ட மூவரை குறிப்பிடுக?
**19.** சிவபெருமானுக்கு கல்லால் எறிந்தவர் யார்?
**20.** திருமாலை காதலனாக கருதி வழிப்பட்ட ஆழ்வார் யார்?
**21.** நம்மாழ்வார் பாடிய பிரபந்தங்கள் நான்கினைக் குறிப்பிடுக.
**22.** அந்தாதி தொகையில் அமைந்த பிரபந்தங்களை பாடியவர் யார்?
**23.** திருஞான சம்பந்தருக்கு இறைவனால் வழங்கப்பட்ட விருது பொருட்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
**24.** திருநாவுக்கரசரின் மார்க்கத்தையும் முத்தியையும் குறிப்பிடுக.
25. அடங்கன் முறை எனப்படுவது யாது?

# சோழர் காலம்




- இந்து சமய வளர்ச்சியில் சோழர்காலம் பொற்காலமாகும்.
- அரசியல் கலை, இலக்கிய, சமய, கலாசார பண்பாடுகளில் சைவமும், வைணவமும் பாரிய வளர்ச்சியடைந்த காலமாகும்.

**சோழர்காலம்**

| முற்கால சோழர் | இடைகால சோழர் | பிற்கால சோழர் |
|---|---|---|
| • விஜயபாலன்<br>• ஆதித்யன்.<br>• கண்டராதித்தன்<br>• பராந்தகன்<br>• உத்தம சோழன் | • இராஜஇராஜ சோழன்<br>• இராஜேந்திர சோழன் | • 1ம் குலோத்துங்கன்<br>• 3ம் இராஜேந்திரன் |


**சோழ அரசர்களின் சைவப்பணி**

- பிரம்மாண்டமான ஆலயங்கள் காணப்பட்டன.
- திருமுறைகள் தொகுக்கப்பட்டன.
- பிராமண குடியிருப்பை ஏற்படுத்தல்.
- குருகுல கல்வி கூடங்கள் நிறுவல்.
- கிரியை வளர்ச்சிக்குதவுதல்.
- சிற்ப இசை, ஓவிய வளர்ச்சிக்கு உதவுதல்.
- மானியம் வழங்கல்.

| | |
|---|---|
| விஜயன் | - தஞ்சையைக் கைப்பற்றி நிசும்ப சூதினி என்ற கோயிலை கட்டல். |
| ஆதித்தன் | - காவிரி ஆற்றின் இருமருங்கிலும் கருங்கல் கோயில் அமைத்தான். |
| பராந்தகன் | - தன் தந்தையின் சமாதியின் மேல் கோதண்ட ராமேசுவரம் என்ற கோயிலை கட்டுவித்தான் |
| கண்டராதித்தன் | - ஆதித்தன் மரபையொட்டிய ஆலயங்கள் அமைக்கப்பட்டன. |
| இராஜஇராஜசோழன் | - தஞ்சை பெருங்கோயில் (பிரகதீஸ்வரர் ஆலயம், தென்திசை மேரு, இராஜராஜேஸ்வரம்) 500’ நீளம் 250’ அகலம். 216’ உயரமான விமானம் அதன் மேல் 18 தொண் கல். (கலச நிழல் பூமியில் விழாதபடி) |
| இராஜேந்திரசோழன் | - கங்கை கொண்ட சோழேஸ்வரம். |


## இராஜஇராஜசோழனும் சைவநெறியும்

- சோழ அரசர்களில் தலை சிறந்தவன்
- இந்திய துணைக்கண்டம் முழுவதும் ஆட்சியை விஸ்தரித்து சைவ சமயத்தை அங்கும் வளரச்செய்தான்.
- அரச சபை வீடுகள், அளவை கருவிகளில் நடராஜ சின்னம்.
- பிறந்த நாள் விழா, ஐப்பசி சதயத்தில் கொண்டாடல்.
- தமிழகத்திலும் குடியேற்ற நாடுகளிலும் ஆலயங்கள் அமைத்தல்.
- பொற்காலத்தை குறிக்கும் தஞ்சை பெருங்கோயில்.
- பிராமணர்களுக்கு கொடை மானியம் வழங்கப்பட்டது.
- ஆகம முறையிலான பூஜை இடம் பெற்றது.
- தேவரடியார், ரிஷபத்தலியிலார், தலைக்கோலிகள், நிருத்தவிடங்கியர், ஓதுவார் என்போர் நியமிக்கப்படல்.
- சைவத்திருமுறைகள் தொகுப்பு : பண் அமைப்பு ஓதுவார், பிடாரர்கள், அவற்றை பண்ணுடன் பாடினர்.
- மடங்கள் அமைத்து சமய பணி, கல்வி நிலையங்கள் ஆக்கப்பட்டன.
- வணிகர்கள் மடங்கள் அமைத்து சமயப்பணியாற்றினர்.
- நாயன்மார் வழிபாடு குருபூசை தினம் இடம் பெற்றது.
- சைவசித்தாந்த கோட்பாடு வளர்ச்சி.
- அரசர்களின் இராஜகுருமாராக சைவகுருமார் இடம் பெற்றனர்.
- அம்மன் வழிபாடு, விநாயகர் வழிபாடு மேன்மை.
- பஞ்சபுராணம் ஓதும் முறை உருவானது.
- கோயில் அமைப்பு பல விருத்தி கண்டது.
- தேவார பாராயணங்கள் இடம் பெற்றன.
- கோயில்கள் பல சேவைகள் ஆற்றின.




- சைவ இலக்கியங்கள் வளர்ச்சி பெற்றன.


1. தமிழ் புராண அமைப்பு - பெரிய புராணம், திருவிளையாடல் புராணம்.
2. தலபுராணம் - திருப்பதி புராணம், கருவூர் புராணம், சிதம்பர புராணம், இராஜஇராஜேஸ்வரம்.
3. பன்னிரு திருமுறை - நம்பியாண்டநம்பி தொகுத்தல் 9, 11, 12ம் திருமுறைகள்.
4. வைணவ நூல்கள் - நாதமுனிவரால் 4000 திவ்விய பிரபந்தம் தொகுக்கப்பட்டது.
5. சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் - சிவஞானபோதம், சிவஞான சித்தியார். இருபா இருப∴து, சித்தாந்த அட்டகம்.
6. சைவசிற்றிலக்கியம் - தக்கன்யாக பரணி, கலிங்கத்து பரணி, சரஸ்வதி அந்தாதி கம்பராமாயணம்.
7. வைணவவேதாந்த கோட்பாடு - யமுனாச்சாரியார். யாதவப்பிரகாசர், ராமானுஜர் நூல்கள்.



**பயிற்சிகள்**

1. சோழர் கால ஆரம்ப அரசர்கள் யாவர்?
2. சோழ அரசர்கள் சைவ நெறியை பின்பற்றியதால் எவ்விருதுப் பெயர்களால் அழைக்கப்பட்டனர்?
3. சோழ அசரர்களால் பொறிக்கப்பட்ட சாசனம் எது?
4. முத்தரையர்களை தோற்கடித்த சோழ மன்னன் யார்?
5. இராஜஇராஜனின் பிறந்த நாள் எப்போது கொண்டாடப்படும்?
6. சோழர் காலத்து பிராமண குடியிருப்புகளுக்கு வழங்கும் பெயர் யாது?
7. சோழர் காலத்தைச் சேர்ந்த சைவ அடியார்கள் நால்வரைக் குறிப்பிடுக.
8. அரசர்களின் இராஜகுருமாராக செயற்பட்ட சைவகுருமார்கள் யாவர்?
9. 1ம் இராஜேந்திர சோழனின் வேறுபெயர்கள் 2 தருக.
10. 3ம் குலோத்துங்கனால் கட்டப்பட்ட சிவாலயம் எது?
11. 2ம் குலோத்துங்கனின் முதலமைச்சர் யார்?
12. கம்பராமாயணம் எச் சோழ மன்னனுடைய காலத்தில் இயற்றப்பட்டது?
13. ஈழத்தில் அமைந்த சோழர்கால கோயில்கள் மூன்றினைக் குறிப்பிடுக.
14. சைவத்திருமுறைகள் தொகுக்கப்பட்ட இடம் யாது?
15. கோயில்களுக்கு வரி இன்றி விடப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
16. புலவர்களுக்கு சோழ அரசர்களால் வழங்கப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
17. சோழர் காலத்தில் அறநிலையங்களுக்கு விடப்பட்ட நிலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
18. சோழர்கால இலக்கியமான மூவருலா யாரால் பாடப்பட்டது?
19. சோழர்காலத்தில் எழுதப்பட்ட கலிங்கத்து பரணியை பாடியவர் யார்?
20. நம்பியாண்டார் நம்பி நாயன்மார்களை பற்றி பாடிய நூல் எது?

# விஜய நகர காலம்



| விஜய நகர அரசர்கள் | பணிகள் |
|---|---|
| ⬇ முதலாம் புக்கன் | சாயனருக்கு உதவி செய்தல். அவனால் வேதம், பிராமணங்களுக்கு உரை எழுதப்பட்டது. |
| ⬇ கரிகரன் | காளகஸ்தி, சிதம்பரம், திருவரங்கம், திருப்பதி ஆலய பணி செய்தல். |
| ⬇ குமாரகம்பணன் | |
| ⬇ கிருஸ்ணதேவராயன் | வடமொழி இலக்கிய பணி<br>விஷ்ணு சிந்தியம் எனும் நூலை எழுதுதல்.<br>விருப்பாட்சர் கோயில், விட்டலாசுவாமி கோயில் அமைத்தார். |
| ⬇ அச்சுதராயர் | |
| ⬇ இராமராயர் | |

## கிருஸ்ண தேவராயர்

| | |
|---|---|
| இலக்கிய பணி | • ஆமுக்தமால்யா எனும் ஆண்டாள் கதையை எழுதினார்.<br>• இராமாயண உரை எழுத ஸ்வரதீட்சதருக்கு உதவல்<br>• விஷ்ணு சிந்தியத்தை எழுதினார்.<br>• சானாவதிம்மர் கிருஸ்ண சந்தம் எழுத உதவல்.<br>• காளத்தி மகாத்மியம் இவருடைய காலத்தில் எழுதப்பட்டது. |
| ஆலய பணி | • விருப்பாட்சர் விட்டலா கோயில் அமைத்தல். |

## சைவ வைணவ வளர்ச்சி

- சங்கரரின் சிருங்கேரி மடத்திற்கு மானியம் வழங்கல்.
- வீரசைவம், காஷ்மீர சைவம், சித்தாந்த சைவம் வளர்ச்சி.
- பசவபுராணம் ,பிரபுலிங்கலீலை, வீரசைவ கோட்பாட்டு நூல்.
- வடகலை வைணவம், தென்கலை வைணவம் வளர்ச்சி.
- மத்துவர் வேதாந்தம் போதிக்கப்பட்டது.
- அருணகிரி நாதர் - முருகவழிபாடு வளர்ச்சி.

- காளமுகர் பாசுபதர் சமய பிரிவு வளர்ச்சி.
- ராஜகோபுரம், கல்யாணமண்டபம், ஆயிரங்கால் மண்டபம், பட்டாபிராமர் கோயில், அம்மன் சந்நிதானம் அமைக்கப்பட்டது.

# நாயக்கர் காலம்

- கி.பி 14 – கி.பி 18 வரை.
- வடகலை வைணவம் தென்கலை வைணவம் வீரசைவம் வளர்ச்சி.
- சிவப்பிரகாசர் பணி
- உமாபதி சிவாச்சாரியரின் சித்தாந்த சைவ வளர்ச்சி.
- அம்மன் முருகன் விநாயகர் வழிபாடு.
- மடாலயங்கள் ஆதீனங்கள் வளர்ச்சி – திருவாடுதுறை ஆதீனம்.
- இந்து கோயில், விழாக்கள் வளர்ச்சி.
- (மதுரை, சிதம்பரம், திருவாரூர்) - திருவாதிரை விழா.

## சைவ இலக்கிய மறுமலர்ச்சி காலம்

| | நூல் | ஆசிரியர்கள் |
|---|---|---|
| சைவ இலக்கியம் தலபுராணம் | கோயிற்புராணம்<br>திருவானைக்கா புராணம்<br>சேது புராணம்<br>அருணாசல புராணம்<br>காஞ்சிபுராணம்<br>தணிகை புராணம் | உமாபதி சிவாச்சிரியார்<br>கமலை ஞானபிரகாசர்<br>நிரம்ப அழகிய தேசிகர்<br>எல்லப்ப நாவலர்<br>சிவஞான முனிவர்<br>கச்சியப்ப முனிவர் |
| ஆகம உரை | சிவதர்மோத்திரம்<br>சிவநெறி பிரகாரம் | மறைஞான சம்பந்தர்.<br>சிவாக்கிரக யோகி |
| தோத்திரப்பாடல் | சிதம்பர வெண்பா<br>கந்தர்களிவெண்பா }<br>மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ் }<br>சகலகலாவல்லி மாலை<br>பராபரக்கண்ணி | குருநமசிவாயம்<br>குமரகுரூபரர்<br>தாயுமானவர் |
| கலை இலக்கியம் | திருக்குற்றாலக் குறவஞ்சி<br>திருப்புகழ், கந்தரந்தாதி, }<br>கந்தரலங்காரம், வேல் விருத்தம் }<br>சேவல் விருத்தம் | திரிகூடராசப்பகவிராயர்<br>அருணகிரிநாதர் |
| சைவ நாயன்மார் தோத்திரம் | நால்வர் நான்மணிமாலை | சிவப்பிரகாசர் |
| சைவ ஆதினம் சித்தாந்தம் | தசகாரியம்<br>சித்தாந்த சிகாமணி<br>நமச்சிவாயமாலை<br>கந்தபுராணம் | -<br>-<br>-<br>கச்சியப்பசிவாச்சாரியார். |

**பயிற்சிகள்**

1. விஜய நகர அரசர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
2. கிருஸ்ணதேவராயரின் பெருமையை கூறும் வெளிநாட்டு அறிஞன் யார்?
3. விஜய நகர நாயக்கர் காலத்தில் இராமாயண உரையை எழுதியவர் யார்? உரையை எழுதுவதற்கு உதவிய மன்னன் யார்?
4. கிருஸ்ண தேவராயரின் அரண்மனைப் புலவர் யார்?
5. வீரசைவ கோட்பாட்டைக் கூறும் நூல் எது?
6. விஜயநகர நாயக்கர் காலத்தைச் சேர்ந்த முருக பக்தர்கள் இருவரைக் குறிப்பிடுக.
7. விஜயநகர ஆலய கோபுரங்கள் இராயகோபுரம் என அழைப்பதற்கான காரணம் யாது?
8. விஜயநகர நாயக்கர் காலத்தில் வளர்ச்சியடைந்த கிரியைகள் 3 இனைக் குறிப்பிடுக.
9. நாயக்க கால மடாதீனங்கள் 3 இனைக் குறிப்பிடுக.
10. நாயக்கர் கால ஆதீனங்கள் 3 இனை பெயரிடுக.

# 2. வட நாட்டு வைணவ பக்தி நெறியாளர்கள்

**வட இந்திய பக்தி நெறி தோன்றிய காலச்சூழல்**

இந்து சமயமானது, சமய உட்பூசல்களாலும் அந்நியர்களின் ஆக்கிரமிப்புகளாலும் மத்திய காலத்தினை அடுத்து வந்த காலப்பகுதிகளில் வீழ்ச்சியடைந்தது. இத்தகைய சூழ்நிலையில் கி.பி 13ம் நூற்றாண்டில் பக்தி நெறி தோற்றம் பெற்றது. இக்காலக்கட்டத்தில் வட இந்தியா இஸ்லாமியர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. இதனால் இஸ்லாமியர்களின் செல்வாக்கு வடநாட்டில் பெருக, இந்து சமயம் தளர்ச்சி அடைந்தது. இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய தேவை அக்கால அறிஞர்களுக்கும் இருந்தது.

இத்தகைய சூழ்நிலையில் வடநாட்டில் பக்தி இயக்கம் தோற்றம் பெற்றது. இந்து சமயத்தை குறிப்பாக வைணவ சமயத்தினை மையமாகக் கொண்டதாக இவ்வியக்கம் தோற்றம் பெற்றது. இப் பக்தி இயக்கத்தின் பக்தி நெறியாளர்களாக பின்வருவோர் திகழ்கின்றனர். இவர்களை வட இந்திய பக்தி நெறியாளர்கள் எனக் கூறுவர்.

- இராமானந்தர்
- கபீர் தாசர்
- ஸ்ரீசைதன்யர்
- மீராபாய்
- துளசிதாசர்

**வட இந்திய பக்தி இயக்கத்தினதும், நெறியாளர்களின் பொது பண்புகளும், நடைமுறைகளும்**

- வட இந்திய பக்தி நெறி வைணவத்தினை அடிப்படையாகக் கொண்டது. அதாவது விஷ்ணுவை பரம்பொருளாகக் கொண்டது.
- ஆன்மாக்கள் ஒவ்வொன்றும் தனியானவை அவை பரமாத்மா எனும் இறைவனாகாது.
- ஆன்மாக்கள் பக்தி மார்க்கத்தின் மூலம் விடுதலை பெறலாம்.
- பக்தி என்பது கன்மம் (வினை), ஞானம், கிரியை, சடங்கு என்பவற்றை விடவும் மேலானது.
- சமஸ்கிருத மொழியை விட்டு ஹிந்தி, மராத்தி, வங்காளி மொழியில் பாடினார்.
- ‘‘நாம சங்கீர்த்தன முறை’’ பின்பற்றப்பட்டது.
- பக்தி ரசம், பக்தி, உணர்வுடன் பாடல்கள் பாடப்பட்டது.
- சாதிப்பிரிவினை தகர்த்து எல்லோரும் ஒருவர் எனும் கோட்பாட்டை பின்பற்றியமை.
- தமிழகத்தில் நாயன்மார்கள் போன்று இறைவனை உறவு முறையில் விழித்து பாடியுள்ளனர்.

உதாரணம் :- துளசி தாசர் - சதாசிவ பாவம்
மீரா பாய் - மதுர பாவம்

# <u>இராமானந்தர்</u>

வைணவ பக்தி மார்க்கம் இரு பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டது ஒன்று தென் இந்தியாவை மையமாகக் கொண்டதும் மற்றையது வட இந்தியாவை மையமாகக் கொண்டதுமாகும். வட இந்திய வைணவ பக்தி நெறி மார்க்கத்தின் முன்னோடியே இராமனந்தர் ஆவார். இவர் தென்னிந்திய வைணவ பக்தி நெறியாளர்களுள் ஒருவரான ''இராமனுஜரிடம்'' வைணவப் பயிற்சி பெற்றவர். வட இந்திய வைணவ பக்தி இயக்கத்தின் தலைவராகவும் மகாபாகவதராகவும் விளங்கியவர். திருமால் மீது அதீத பக்தி கொண்டவர். ''இராம பக்தியே நிரந்தரமானது'' என்பது இவரது கொள்கை. இராம தர்மத்தை உலகறியச் செய்ததால் ''இராமதாசர்'' எனும் விருது பெயரை பெற்றுக் கொண்டார்.

கி.பி 14ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்து வாழ்ந்த இவர் தனக்கென சீடர் பரம்பரை ஒன்றையும் உருவாக்கினார். கபீர்தாசர், சிவாஜி மன்னன் உட்பட பல சீடர்கள் இவரை பின்பற்றினார். சீடர்களுடன் இணைந்து வடநாட்டில் எழுந்த யோகம், ஞானம் என்பவற்றோடு தென்னாட்டில் எழுந்த பக்தி சரணாகதி என்பவற்றையும் சேர்த்து அரிய பாடல்களை பாடினார். அத்துடன் அக்காலத்தில் வட நாட்டினால் நிலவிய வகுப்பு வாதம் (சாதி பேதம்), மத போதம் என்பவற்றை புறக்கணித்து ஒருமைப்பாட்டினை பேணினார்.

## கபீர்தாசர்

வட இந்தியாவில் வைணவ பக்தியினை வளர்த்த நெறியாளர்களுள் முன்னோடியான இராமானந்தரின் சீடரே கபீர்தாசராவார். இவர் கி.பி 14ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். இவரது,

| | | |
|---|---|---|
| தந்தை | - | நூர் அலி |
| தாய் | - | நிமா |
| மனைவி | - | லோய் |
| மகன் | - | கமால் |
| சீடர்கள் | - | மனைவி, மைந்தன், சூரத்கோபால், சாஹிப் குருநானக். |

இவர் இஸ்லாமியர்களின் வளர்ப்பு பிள்ளையாவர். இளவயதிலிருந்தே இஸ்லாமியக் கருத்துக்களை அறிந்திருந்த போதிலும், இந்து சமய நம்பிக்கைகளையும் அதன் அடிப்படை கோட்பாடுகளையும் கற்றுக்கொண்ட இவர் இஸ்லாமிய கருத்துக்களை உள்வாங்கிய நிலையில் வைணவத்தை வளர்த்தார். இவரது கருத்துக்களும் பாடல்களும் இன, மத, பேதங்களை கடந்தவைகளாகக் காணப்பட்டது. விஷ்ணு ஒருவரையே தஞ்சம் எனக் கொண்டு வாழ்ந்தார்.

## இவரது சமூக மேம்பாட்டு சிந்தனைகள்

- சமயங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்த்தமை.
- தேவையற்ற சடங்குகளும், சம்பிரதாயங்களும் அவசியமற்றவை என வலியுறுத்தியமை.
- மக்களின் வாழ்வியலுக்கு தேவையான அறிவுரைகளை எளிய வகையில் கூறியமை.
- அக்கால சமூகத்தில் நிலவிய மூட நம்பிக்கைகளை எதிர்த்தமை.
  உதாரணம் :- உடன் கட்டை ஏறுதலை மறுத்தல்
- பேதங்கள் கடந்த நிலையில் பக்தியினை வளர்த்தமை.
- சமய சார்பற்ற இறை பக்தி பாடல்கள் பாடியமை.
- துறவறத்தை மறுத்துரைத்து இல்லறத்தினூடாகவே பக்தியை வெளிப்படுத்தினார்.
- இறைவனை உறவு முறையில் விளித்து தனது பாடலை பாடினார்.
  உதாரணம் :- நாயக – நாயகி பாவம்
- இராமநாமத்தின் சிறப்புகளை பரவலாக தனது பாடலில் பாடினார்.
- இறைவன் வேறெங்கும் இல்லை நம் அருகே தான் இருக்கின்றார் என ஆதாரங்களை முன்வைத்தார்.
- உலக வாழ்வியலூடாகவே இறைவனை அடையலாம். அன்பும், பக்தியுமே இறைவனை அடைவதற்கான வழி என்கிறார்.

## ஸ்ரீசைதன்யர்

கி.பி 1486 இல் வட இந்தியாவின் நாதியா மாவட்டத்திலுள்ள மாயப்பூரில் சந்திரகிரகணத்தின் போது இவர் பிறந்தார். இவரது தந்தை வேத கலாசாரத்தை சார்ந்த ஜகந்நாத மிஸ்ரர் ஆவார். இவரது தாய் சசீ தேவி ஆவார். இவரது ஆற்றலை கண்ட பிரபல ஜோதிடரான பண்டிதர் நீலாம்பர சக்ரவர்த்தி அவர்கள் இக்குழந்தை வருங்காலத்தில் ஒரு மகா புருஷராக வருவார். என்பதை முன்னுரைத்தார். ஆதனால் இக்குழந்தைக்கு ‘‘விஷ்வம்பரர்’’ என்று பெயர் சூட்டினார்.

எட்டு வயதில் கங்கா நகரத்தில் ‘‘கங்காதாஸ பண்டிதர்’’ என்பவரின் பள்ளியில் சேர்க்கப்பட்டார். சமஸ்கிருத இலக்கணத்திலும் அலங்காரத்திலும் சிறுவயதிலேயே வல்லுனரானார். அதன் சுயகல்வியாகவே தனது வீட்டில் கற்றுக் கொண்டார். பண்டிதராகத் திகழ்ந்த தனது தந்தையின் புத்தகங்களை கற்றுத்தெளிந்தார். பத்து வயதிற்கு பின் சைதன்யர் இலக்கணம், அலங்காரம், ஸ்மிருமிருதி, நியாயம் ஆகியவற்றில் புலமை மிக்கவராவார்.

தனது 14ம் வயதில் திருமணம் முடித்துக்கொண்ட இவர் குறுகிய காலத்திலேயே மனைவியை இழந்தார். வாழ்க்கையின் நிலையாமையை உணர்ந்த இவர் பின் தாயின் கட்டாயத்திற்கிணங்க மறுமணம் செய்து கொண்டார். தனது 16ம் வயதில் தீட்சை பெற்று பண்டிதர், வித்வான் என்ற நிலையை கடந்து கிருஷ்ணரின் நாமத்தை உச்சரித்து பக்தி பரவசத்தில் மூழ்கினார்.

**இவரது பக்தி இயக்கப் பணிகள்**

- வீடு தோறும் சென்று இராமநாமத்தை பாடி பக்தியினை வளர்த்தார்.
- கிராமம் தோறும் சென்று தனது கொள்கைகளை பிரச்சாரம் செய்தார்.
- ‘‘இராம நாம சங்கீர்த்தனம் நிறுத்தப்பட வேண்டும்’’ என்ற மன்னனின் கட்டளைக்கு எதிராக அமைதி புரட்சி செய்தார்.
- இராம நாம சங்கீர்த்தன இயக்கம் ஒன்றினை ஆரம்பித்தார்.
- தனது பக்திச் செயற்பாட்டிற்காக இல்லறத்தை துறந்தார்.
- யாத்திரை மேற்கொண்ட இவர் வேதாந்த சூத்திரங்களை கொண்டு வாதங்களில் கலந்து கொண்டார்.
- யாத்திரைகள் மூலம் பக்தி பற்றிய உரையாடலை மேற்கொண்டனர்.
- சாதி, மத, பேதமற்ற பக்தி நிலைமை வெளிப்படுத்தினார்.
- கடவுளுக்கு உருவம் இல்லை என்று நினைத்து அதனை நிரூபிக்க வீண் முயற்சியில் ஈடுபட்ட மாயாவாதிகளை எதிர்த்தார்.

இவரது போதனைகளில்,

- குருவிடம் மதிப்பும் மரியாதையும் பணிவும் காட்ட வேண்டும்.
- அற நெறியினைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- அறப் பண்பை வளர்த்து, அமைதி கொள்ள வேண்டும்.
- மனிதனுக்கு மனிதன் எவ்வித பேதமுமில்லை, கடவுள் அறிவைப் பெற்றவன் எவனாயினும் அவன் பிராமணனிலும் பெரியவனாவான்.
- துளசியின் மகிமை.

போன்ற கருத்துக்களை முன்வைத்தார்.

இவரது கொள்கைகளையும், சிந்தனைகளையும் ‘‘நித்தியானந்தர், ஜீவ கோஸ்வாமி, பல தேவர், கரிதாஸ் போன்ற சீடர்கள் பக்தி இயக்கத்தின் மூலம் முன்வைத்தனர்.

# மீராபாய்

வட இந்திய பக்தி நெறியாளர்களுள் பெண் நெறியாளரான இவர் கி.பி 16ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மேர்த்தா எனும் சமஸ்தானத்தில் 1498ம் ஆண்டு பிறந்தார்.

தந்தை - ரணா ரத்னசிங்

கணவர் - போஜ்ராஜ்

இவர் ராஜஸ்தான் மாநிலத்து ''கவிஞானச் செல்வி'' என அழைக்கப்பட்டார். சிறு வயதிலேயே சங்கீதஞானம் பெற்ற இவர் குடும்ப பந்தங்களை தகர்த்து விட்டு அச்சமின்றி சுதந்திரமாக கிருஸ்ணபக்தியை மேற்கொண்டார். 1521ம் ஆண்டு கணவர் போரில் இறந்ததும் இவர் கைம்பை (விதவை விரதம்) நோற்று துறவு கோலத்தில் வாழ்ந்து தனது பக்தியை அதிகரித்தார். மீரா, கிருஸ்ணனே தன் காதலன் என்று தனது பாடலில் பாடினார். இவ்வாறு இவர் 400 பாடல்களை பாடியுள்ளார். இவர் இயற்றிய நூல்களுள்,

1. கீதா கோவிந்தடீகா
2. ராக ஸோரட்
3. ராகமல் கார்
4. ராக கோவிந்
5. மீராணிகர்பி
6. ருக்மினி மங்களம்

என்பன முக்கியமானவை. இவரது பாடல்கள் ''வாத்சல்ய பக்தி, தாஸ்ய பக்தி என்பவற்றோடு நாயகன், நாயகி பாவனையுடன் அமைந்தனவாக காணப்படுகின்றன. இவரின் பக்தியில் ''மதுரபாவம்'' அதிகம் காணப்படும்.

- சிரவணம்
- ஸ்மரணம்
- பாத சேவை
- அர்ச்சனை
- தாஸ்யம்
- ஸக்ஸம்
- ஆத்மநிவேதனம்

போன்ற ஏனைய இரு அம்சங்களுடன் இணைந்த ஒன்பது வகையான நியமங்களும் இவரின் பாடல்களில் காணப்படுகின்றன.

அரண்மனையில் பிறந்து வாழ்ந்திருந்தாலும் சிறு வயது முதலே ''கிரிதர கோபாலன்'' எனும் கிருஷ்ணர் சிலை மீது தொடங்கிய ஈடுபாடு நாளடைவில் தென்னிந்தியாவின் ஆண்டாள் போல கண்ணனை தன் மணவாளனாக நினைத்துக் கொண்டார். குடும்பத்தின் வற்புறுத்தலின் பேரில் 1516 இல் தனது 18ம் வயதில் போக்ராஜ் என்பவரை திருமணம் முடித்தார்.

அதன் பின் சிறிது காலத்திலேயே கணவரை இழக்க நேரிட்டது. பின்னர் கண்ணன் ஒருவனே துணையென கணவரின் குடும்பம் துர்க்கை வழிப்பாட்டை மேற்கொள்ள மீராவின் கிருஷ்ண பக்திக்கு பல எதிர்ப்புகள் கிளம்பின. இதனால் இவரை பல முறை கொலை செய்யவும் முயற்சித்தனர். இவற்றிலிருந்து கண்ணன் அருளால் மீண்டு தனது பக்தி நெறியினை வளர்த்தார்.




# <u>மீராபாயின் பக்தி வெளிப்பாடுகள்</u>

- பிரபக்தி மார்க்கத்தினை மதுர பாவனையில் வெளிப்படுத்தினார்.
- தென்னிந்திய நாயன்மார்கள் போல் உறவுமுறைக் கொண்டு வழிப்பாட்டினை மேற்கொண்டார்.
- மீராபாயின் இசைப்பாடல்கள், இலக்கியங்கள் என்பன பக்திச் சுவையும், கருத்தாழமும் கொண்டவை. இதனால் இவரது பாடல்கள் சாதாரண மக்கள் மனதை இலகுவாகத்தொட்டன.
- கீர்த்தனம், வர்த்தனம், பாதஷேவனம் முதலிய ரசபாவங்கள் இவரது பாடல்களில் உண்டு.
- இவரது பாடல்கள் இறை நம்பிக்கையை வளர்ப்பவை: தத்துவ செறிவு மிக்கவை.

## துளசிதாசர்

வட நாட்டின் உத்தர பிரதேசத்தின் பந்தா மாவட்டத்தில் பிரியாகைக்கு (காசி) அருகில் உள்ள ராசப்பர் எனும் கிராமத்தில் ஆத்மாரம் துபே என்பவருக்கும், உலேசி அம்மையாருக்கும் கி.பி 1532ம் ஆண்டு பிறந்தார். சிறு வயதிலே பெற்றோரை இழந்த இவர் வான்மீகி இராமாயணக் கதையை மக்களிடையே பிரச்சாரமாக கொண்டு தனது வாழ்க்கையை நடாத்தி வந்த இவர் இரத்தினாவனி என்ற பெண்ணை மணந்தார்.

வான்மீகியின் அவதாரமாகக் கருதப்படும் இவர் 16ம் நூற்றாண்டில் இந்தியில் இராமாயணத்தினை பாடினார். இது "துளசி இராமாயணம்" எனப்பட்டது. இதனைத் தொடர்ந்து.



- சீரகந்தீபனி
- கிருஷ்ண கீதாவளி
- கவிதாவளி
- ஜனகி மங்களம்

போன்ற நூல்களை எழுதினார்.

**இவரது கொள்கைகள்**

- ஒப்புயர்வற்ற கடவுளை நம்பினார்.
- ஆன்மா, கன்மம், மறுபிறப்பு, முத்தி பற்றி கருத்துக்களை முன்வைத்தார்.
- அன்பு ஒன்றே மேலானது என வலியுறுத்தினார்.
- இன, மத, சாதி பேதங்களை கடந்த பக்தியினை வளர்த்தார்.

## 2.2 இந்து சமூக சீர்த்திருத்த இயக்கம்

இந்தியா, அந்நிய சமயங்களாலும், மேலை நாட்டு கலாசார மோகங்களினாலும் 18ம் நூற்றாண்டில் இந்து சமயம் வீழ்ச்சியடைந்தது. இவற்றிலிருந்து இந்து சமய கலாசார பண்பாட்டு அம்சங்களை மீட்டெடுக்கும் நோக்கில் தோற்றம் பெற்ற நிறுவனங்களே இந்து சமூக சீர்த்திருத்த இயக்கங்கள் ஆகும். அவையாவன,

- பிரம சமாஜம்
- ஆரிய சமாஜம்
- இராமகிருஷ்ண மிஷன்

என்பவைகளாகும். இந் நிறுவனங்கள் முறையே,

- இராஜாராம் மோகன்ராய்.
- தயானந்த சரஸ்வதி.
- சுவாமி விவேகானந்தர்.

ஆகியோர் நிறுவினார்.

அக்காலத்தில் நிலவிய பின்வரும் சமூக சீர்கேடுகள் இந்து சமய வீழ்ச்சிக்கு காரணமாகின.

- பலதார மணம்
- பாலிய விவாகம்
- பெண் சிசுக் கொலை
- உடன் கட்டை ஏறல்
- விதவைகள் மறுமண மறுப்பு
- சாதி பாகுபாடு
- பெண்ணடிமைத்தனம்

இத்தகு சீர்கேடுகள் யாவும் இந்துசமயத்தின் பலவீனங்களாக விளங்கின.

### பிரம்ம சமாஜம்



இராஜாராம் மோகன்ராய் என்பவரால் 1828ம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது.

- பிறப்பு - 1774.05.22
- பெற்றோர் - இராமகாந்தர், தாரிணி தேவி
- பிறந்த இடம் - மாநகர்
- இளமை பெயர் - ராம் மோகன்

இவரது வாழ்வில் ஏற்பட்ட பின்வரும் சம்பவங்களால் சீர்த்திருத்த இயக்கமான பிரம்ம சமாஜத்தை தோற்றுவித்தார்.

- தமது தந்தை மூன்று பெண்களை மணந்திருந்தமை.
- தனக்கு பால்ய விவாகம் நடைப்பெற்றமை.
- மனைவி இறந்ததும் மீண்டும் இரண்டாவது தடவையாக பால்ய திருமணம்.
- அண்ணன் இறந்ததும் மைத்துணி உடன்கட்டை ஏற்றப்பட்டமை.

**பிரம்ம சமாஜத்தின் பணிகள்**

- 1840 உருவ வழிப்பாட்டை எதிர்த்து துண்டுப் பிரசுரம் வெளியிட்டமை.
- 1816 வேதாந்த சூத்திரத்தை மொழி பெயர்த்தமை.
- 1817 வேதாந்த கல்வியை பரப்பியமை.
- 1820 மரபு வழி நம்பிக்கைகளை பகுத்தறிவு ரீதியாக விமர்சித்தமை.
- பிராமணன் எனும் சஞ்சிகையை வெளியிட்டமை.
- பல வகை பிரார்த்தனை, வழிபாடுகளை அறிமுகஞ்செய்தமை.
- உடன்கட்டை ஏறும் பழக்கத்தை சட்டப்படி தடை செய்தமை.
- பெண்ணுரிமையை பாதுகாத்து இருந்து தர்மத்தை பரப்பியமை.

## ஆரிய சமாஜம்

சுவாமி தயானந்த சரஸ்வதி வேத நெறியையும், சமஸ்கிருத மொழியையும் முதன்மை படுத்தி 1875ம் ஆண்டு ஏப்ரல் 10ம் நூற்றாண்டில் பல இன்னல்களையும் சவால்களையும் எதிர் கொண்ட இந்து சமயத்திற்கு பின்வரும் பணிகளை மேற்கொண்டது.

**பணிகள்**

- மூட நம்பிக்கைகளை வேதங்களை சான்று காட்டி நிரூபித்தல்.
- சாதி, மத, பால் வேற்றுமை பாராமல் வேதங்களை மக்கள் மொழிகளில் மொழி பெயர்த்தமை.
- பல நூல்களை வெளியிட்டமை.
- சமயப் பிரசாரம் செய்தமை.
- மதம் மாறியவர்களை மீண்டும் இந்து சமயத்தில் சேர்த்திட "சுத்தி" எனும் இயக்கத்தை ஆரம்பித்தமை.
- தேசிய கல்வி முறையினை நடைமுறைப்படுத்தியமை.
- சாதி அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பூணூல் அணிவித்து மேன்மக்களாக பிரகடனப்படுத்தியமை.
- விதவை பெண்களின் மறுமணத்தை ஆதரித்தமை.
- பால்ய விவாகத்தை எதிர்த்தமை.



## இராமகிருஷ்ண மிஷன்

சுவாமி விவேகானந்தரினால் அவரது குருநாதரின் பெயரினால் தாபிக்கப்பட்டவைகளே இராமகிருஷ்ண மிஷன், இராமகிருஷ்ண மடங்களாகும். இவற்றினூடாக இராமகிருஷ்ணரின் சிந்தனைகளையும், போதனைகளையும் பரப்பியுள்ளார். 18ம், 19ம் நூற்றாண்டுகளில் நிலவிய சமய சீர்கேடுகளை இல்லாதொழிக்க பின்வரும் பணிகளை மேற்கொண்டது.

**இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனைகளும் சாதனைகளும்**

- இந்து மத மறுமலர்ச்சியில் தலைசிறந்தவர். வங்காள நாட்டில் அந்தண குலத்தில் பிறந்தவர். சாக்த சமய பக்தர்.
- வேதாந்த கோட்பாட்டை நடைமுறை வாழ்வியலுடன் ஒப்பிட்டார்.
- வேத, உபநிடத சிந்தனைகளை போதித்தவர்.
- சமயங்கள் பலவானாலும் உணர்த்தும் விடயம் ஒன்றே என்கிறார்.
- பிற உயிர்களையும் தன்னுயிர் போல் போற்றுதல்.
- இறைவனை அன்பு வழியில் உணரலாம்.
- சமூக வாழ்வின் விருத்தியே சமய வளர்ச்சியாகும்.



**சுவாமி விவேகானந்தரின் பணிகள்**

- இராமகிருஷ்ண பரமஹம்சரின் முதன்மை சீடர்களுள் ஒருவரான இவரது இந்து மதப் பணிகளால் ''வேதாந்த சிங்கம்'', ''சூறாவளித்துறவி'', ''தேசபக்த மெய்ஞானி'' என சிறப்பக்கப்படுகின்றார்.
- தனது குருநாதரின் பெயரில் சமூக சீர்த்திருத்த இயக்கம் ஆரம்பித்தமை.
- அமெரிக்காவில் சிக்காக்கோ மாநாட்டில் தலைமை தாங்கியமை.
- ''எழுமின் விழுமின்'' கருத்துக்களை வலியுறுத்தியமை. அதாவது. பசியுள்ளவனுக்கு சமயப் போதனை ஆகாது.
- பாமர மக்களுக்கு சாதாரண கல்வியறிவினூடாக சமய அறிவு புகட்டியமை.
- உலகில் இந்து கலாசார சனாதன தர்மத்தை எடுத்துக்காட்டல்.
- கீழை நாட்டு, மேலை நாட்டு தத்துவ உண்மைகளை ஒப்பிட்டு நோக்கல்.
- இந்தியா, இலங்கை உட்பட பல நாடுகளில் சமய சொற் பொழிவுகள் நடாத்தியமை.

## வட இந்திய பக்தி நெறியாளர்கள்

**வினாக்கள்**

1. வட இந்திய பக்தி நெறி …………………….................... சமயத்தினை அடிப்படையாகக் கொண்டது.
2. சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் ………………………………….. ஆவார்.
3. வட இந்திய பக்தி இயக்கம் ………………………………….. நூற்றாண்டு காலப்பகுதிகளில் தோற்றம் பெற்றது.
4. வட இந்திய, பக்தி நெறியாளர்களாக ………………………….., …………………………..,
   ………………………….., …………………………, …………………………
5. இவர்களுள் முன்னோடி ………………………………… ஆவார்.
6. இவர்களுள் பெண் பக்தி நெறியாளர்களாக …………………………….. திகழ்கிறார்.
7. இஸ்லாமியக் கருத்துக்களை உள்வாங்கிய நிலையில் வைணவத்தை வளர்த்தவர் …………………………… ஆவார்.
8. மீராபாய், தமிழகத்தின் ………………………….. நிகராக ஒப்பிடப்படுகின்றனர்.
9. வான்மீகியின் அவதாரமாக ……………………………………… கருதப்படுகின்றார்.
10. துளசி தாசரால் இந்தியில் எழுதப்பட்ட இராமாயணம் ………………………………… எனப்பட்டது.

## <u>பகுதி II</u>

1. வட இந்திய பக்தி நெறியாளர்களின் பொது பண்புகளை குறிப்பிடுக.

## இந்து சமூக சீர்த்திருத்த இயக்கம்

**வினாக்கள்**

1. இந்து சமூக சீர்த்திருத்த இயக்கங்கள் எவை?
2. அவற்றை நிறுவியோர் யாவர்?
3. மேற்குறிப்பிட்ட இயக்கங்களின் பணிகளை அட்டவணைப்படுத்துக.

| இயக்கம் | பணிகள் |
|---|---|
| 1. | |
| 2. | |

# புராதன இலங்கையிற் சைவம்

அனுராதபுர இராசதானியின் எழுச்சிக்கு முன்னரான காலப்பகுதி இலங்கை வரலாற்றில் புராதன காலமாக கருதப்படுகின்றது. தேவார காலம் முதலாகவே சைவசமய வரலாறு நோக்கப்படுகின்றது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சைவம் வளர்ச்சியுற்றிருந்தது.

இலங்கையின் பூர்வீக குடிகள்- இயக்கரும், நாகரும் சிவவழிபாட்டினர்.

திருமூலர் இலங்கையை சிவபூமி என அழைத்தார். விஜயன் வரும்பொழுது இலங்கையின் 4 திசைகளிலும் 5 ஈச்சரங்கள் காணப்பட்டன.




**இயக்கர்**

- பூத வழிபாடு

**நாகர்**

- நாக வழிபாடு ( இற்றைக்கு 2800ம் ஆண்டு முதல் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகியவற்றிலிருந்து இலங்கையில் குடியேறினர்)
- திருக்கேதீச்சரம் - நயினை நாகபூசணி<br>நாகதம்பிரான் ஆலயங்கள்
- நாக வழிபாடு - ஐந்து தலை நாகம்<br>ஏழு தலை நாகம்<br>ஒன்பது தலை நாகம்
- நாகர்களுடைய கல்வெட்டுக்கள் பண்பாட்டு சின்னங்களில் காணப்பட்டன.
- ஆலயத்தூண்களிலும், கடவுட்படிமங்களிலும் – நந்தி, மயூரம், மூசிகம் முதலிய சிற்பங்கள்.
- விளக்கு,அம்மி,ஆட்டுக்கல்,குளவி,சங்கு முதலியவற்றில் கடவுள் பெயர்கள் பொறித்தனர்.
- வடக்கு,கிழக்கு வடமத்திய பகுதிகளில் ஏராளமான நாகசிற்பங்கள் காணப்பட்டது. அவற்றில் மணிநாகன் எனப்பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.
- நாகர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்கள்.
  - திருக்கோணேஸ்வரம்- திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம்,திருக்கரசை நகுலேஸ்வரம்.
  - முன்னேஸ்வரத்தில் நாறு திரிகள் ஏரியக்கூடிய விளக்கு வழிபாடு விழாக்கள் நடைபெற்றதிற்கு ஆதாரமாகும்.

- ➢ திருக்கரசையில் இலிங்கம், நந்தி, ஆவுடையார், விளக்கு முதலியவற்றில் மணிநாகன் எனப்பெயர் பொறிக்கப்பட்டிருந்தது.
- ➢ பொலன்நறுவை, கந்தளாய், அநுராதபுரம் போன்ற இடங்களில் ஆவுடையார் சின்னங்கள் எடுகோளாக காணப்படுகின்றது.
  அதில் மணிநாயகன் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது
- ➢ வவுனியா அருங்காட்சியகத்திலே வனப்புடன் அமைந்த கோலத்தில் மகிடமர்த்தனியின் சிற்பம் – மணிநாகன்
- ➢ கற்றளிகளான கோயில்களை அமைத்தனர் – மணிநாகன்
  (முன்னேஸ்வரம், திருக்கரசை, நவாலி – கண்ணகியம்மன் கோயில்)
- ➢ உயரமான தூண்களையுடைய மண்டபங்களோடு கூடிய கோயில்கள் (திருக்கரசை, சேனையூர், திரௌபதியம்மன்)
- ➢ வவுனியாவில் சாளம்பன் குளத்தின் அருகே சிவலிங்கம் ஒன்று நாகலிங்கம் (தலைப்பாகம் நாகவடிவம்)
- ➢ பெருங்கற்பண்பாட்டு ஈமச்சின்னம் ஒன்றில் ஒற்றைத்தலை நாகமும் அதன்மேல் சிவலிங்க வடிவமும்
- ➢ இரத்தினபுரியில் – ஈமக்கல்லறையில் திரிசூல வடிவமும் நாகபந்த உருவமும் அமைந்துள்ளது.

**புராதன கால சைவ வளர்ச்சிக்கான ஆதாரங்கள்**

- இதிகாச புராணங்கள் – இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம்
- வரலாற்று நூல்கள் – மகாவம்சம், சூளவம்சம், தீபவம்சம், யாழ்ப்பாண வைபவமாலை
- தேச சஞ்சாரிகளது குறிப்புக்கள் – இபுன்பத்தூத்தா, மக்கன்சி
- அறிஞர்களது ஆய்வு முடிவுகள்
- தொல் பொருட் சின்னங்கள்
- சிங்கள மொழித்தூதுப் பிரபந்தங்கள்

## அநுராதபுரக்காலம்

- பண்டு காபயன் – ஐந்தாம் மகிந்தன் ஆட்சிக்காலம் வரையாகும்.
- கி.மு 4ம் நூற்றாண்டு – கி.பி 10ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி.
- அநுராதபுரகால சைவ மன்னர்கள் – பண்டு வாசுதேவன், அபயன், பண்டுகாபயன்.
- பண்டுகாபயன் – சிவன் கோயிலை நிறுவினான்- மகாவம்சம்.
- தீசனுக்கு முற்ப்பட்ட மன்னர்கள் சிவன் என முடிவன } கிரிகண்டசிவன், மகாசிவன், மூத்தசிவன்
- பிராமணர்கள் – புரோகிதர்களாகவும், ஆலோசகராகவும்,வைத்தியராகவும் இருந்தனர்.
- எல்லாளன் காலம் –(கி.மு 145- 101) சைவம் வளர்ச்சியடைந்தமை.
- துட்டகைமுனு காலத்தில் – கதிர்காமத்தில் நேர்த்திகடன் செலுத்தியதாக மகாவம்சம் கூறுகிறது.
- கி.பி 2ம் நூற்றாண்டு கஜபாகு மன்னன் சேர நாட்டிலிருந்து இலங்கை பத்தினித் தெய்வ அறிமுகம்.
- கி.பி 4ம் நூற்றாண்டில் கோணேஸ்வரத்தை – மகாசேனன் இடித்து விகாரை கட்டியதும் கி.பி 5ம் நூற்றாண்டில் குளக்கோட்டன் கோணேச்சரத்தையும் முன்னேச்சரத்தையும் புனரமைத்தமை.
- கி.பி 831 -851 ஆட்சி செய்த சேனன் சைவத்துறவி ஒருவரால் சைவனாக மாற்றப்பட்டமை. (திருவாதவூரடிகள் புராணத்தில் மாணிக்க வாசகர் குறிப்பிடுகிறார்)
- கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர் கோணேச்சரத்தின் மீதும் திருக்கேதீச்சரத்தின் மீதும் இந்தியாவில் இருந்து தேவாரம் பாடியமை.

- கி.பி 9ம் நூற்றாண்டில் சுந்தரர் திருக்கேதீஸ்வரத்தின் மீது தேவாரம் பாடியமை.
- அநுராதபுரம் கண்டக சைத்திய காணப்படும் விநாயகர் சிற்பமே காலத்தால் முந்தியவை.
- மாரதப்புரவீகவல்லியாலும் அவளின் கணவன் உக்கிர சிங்கனாலும் மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில் கட்டப்பட்டமை.

## பொலனறுவைக் காலம்

கி.பி 10ம் நூற்றாண்டு முதல் 13ம் நூற்றாண்டு வரையான காலமாகும். இராஜராஜனும் அவர் மகன் இராஜேந்திர சோழனும் இலங்கை முழுவதையும் தம் ஆட்சிக்கு உட்படுத்தினர்.

பொலனறுவையில் 10ற்கு மேற்பட்ட சிவாலயங்கள், 5 விஷ்ணு ஆலயங்கள், 1 காளி கோயில் என்பன கட்டப்பட்டதாக ஆய்வு கூறுகிறது.

| | |
|---|---|
| இரண்டாம் சிவாலயம் | - இராஜ ராஜனின் மனைவி பெயரில் – வானவன்மாதேவி ஈச்சரம் எனப்பட்டது. |
| பதவியாவில் | - 5 சிவாலயங்கள் கட்டப்பட்டது. அதில் “இரவிகுல மாணிக்க ஈஸ்வரம்” சிறப்பானது. |
| கடவத் கோறளையில் | - உத்தம சோழேஸ்வரம் |
| குருணாகலில் | - விக்கிரமசாலாமேக ஈஸ்வரம் |
| மதிரி கிரியில் | - பண்டிதசோழேஸ்வரம் |
| சோழர்கள் | -‘இராஜராஜேச்சரம்“ “திருவிராமேச்சரம்” |
| மாதோட்டம் | - ராஜராஜபுரம் என அழைக்கப்பட்டது. |
| திருக்கோணேச்சரம் | - மச்சேஸ்வரம் என அழைக்கப்பட்டது. |
| பொலனறுவையில் கண்டெடுக்கப்பட்ட செப்பு படிமங்கள் | சோமஸ்கந்த மூர்த்தி, நடராஜர், சிவகாமி, விநாயகர் முதலிய தெய்வச்சிலைகள். காரைக்காலம்மையார், சுந்தரமூர்த்தி நாயனார் முதலிய அடியவர் படிமங்கள். |



## ஆரியச்சக்கரவர்த்தி காலம்

பாண்டிய மன்னர்களுக்குச் சேனாதிபதிகளாக இருந்தவர்கள் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற பெயரில் ஆட்சி செலுத்தினர்.

இவர்களது ஆட்சி கி.பி 12ம் நூற்றாண்டிலிருந்து கி.பி 15ம் நூற்றாண்டு வரை யாழ்ப்பாண அரசின்
தலைநகர்கள் - சிங்கை நகர் - வல்லிபுரம்
யாழ்ப்பாணத்து நல்லூர்

சப்புமல்குமாரன் - செண்பகப்பெருமாள் - 6ம் புவனேகபாகு - நல்லூர் ஆலயத்தைக் கட்டினார்.

இக்காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள்

- நல்லூர் கைலாச நாதர் கோவில் நல்லூர் சட்டநாதர் கோவில்
- நல்லூர் வெயிலுகந்த பிள்ளையார் ஆலயம்,
- இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம்
- உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயம்,
- நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம்,
- நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயம்,
- அரியாலைச் சித்தி விநாயகர் ஆலயம்.

இக்கால மன்னர்கள் புனரமைப்புச் செய்த ஆலயம்

- நகுலேஸ்வரம்
- மாவிட்டபுரம் கந்த சுவாமி கோயில்
- செல்வசந்நிதி முருகன் ஆலயம்

இக்காலத்தில் மட்டக்களப்பில் எழுந்த ஆலயங்கள் –

- முருகன் கோயில்கள்
- பிள்ளையார் கோயில்கள்
- பத்திரக்காளி
- பேச்சி
- மாரி
- கண்ணகி
- திரௌபதி
- விஷ்ணு ஆலயங்கள்.

## ஐரோப்பியர் காலம்

| | |
|---|---|
| போர்த்துக்கேயர் காலம் | – (1505 – 1658) |
| ஒல்லாந்தர் காலம் | – (1658- 1796) |
| ஆங்கிலேயர் காலம் | – (1796 – 1948) |

போர்த்துக்கேயர் காலத்தில் அவர்களால் இடித்து அழிக்கப்பட்ட ஆலயங்கள்

- திருக்கேதீஸ்வரம்
- திருக்கோனேஸ்வரம்
- முன்னேஸ்வரம்
- பெறண்டிக் கோயில் தெய்வத்துறை விஷ்ணு ஆலயம்

ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த சைவசமய நூல்கள்

- பறாளை விநாயகர் பள்ளு
- மறைசையந்தாதி
- கல்வளையந்தாதி
- நல்லைக் குறவஞ்சி
- வண்ணை வைத்திலிங்கக் குறவஞ்சி
- நல்லைக் கலி வெண்பா
- சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ்
- வெருகல்
- சித்திரவேலாயுதர் காதல் முதலான நூல்கள்

19ம் நூற்றாண்டின் சைவசமய வளர்ச்சிக்குப் பணியாற்றிய சைவப் பெரியார்கள்

- ஆறுமுகநாவலர்
- சேர் பொன் இராமநாதன்
- சேர் பொன்ஆருணாசலம்
- புலோலியூர் நா. கதிரவேற்பிள்ளை
- கண்ணாகம் அ. குமார சுவாமிப்புலவர்
- மாதகல் அ. ஏரம்பையர்

19ம் நாற்றாண்டில் தொண்டாற்றிய சைவசமய நிறுவனங்கள்

- சைவப்பிரகாச சமாஜம்
- சைவப்பரிபாலன சபை

**20ம் நூற்றாண்டில் தோற்றம் பெற்ற சைவ நிறுவனங்கள்**

- கொழும்பு விவேகானந்த சபை - 1902ல் அமைக்கப்பட்டது.
- சைவ வித்தியா விருத்தி சங்கம் - 1924ல் அமைக்கப்பட்டது.
- இராமகிருஷ்ண மிஷன்
- இந்துக் கல்லூரிகள் சபை

அகில இலங்கை இந்துமாமன்றம்

- நல்லை ஆதீனம்
- சிவதொண்டன் நிலையங்கள்

**வினாக்கள்**

1. விஜயன் இலங்கைக்கு வரும் போது நான்கு திசைகளிலும் ஐந்து சிவாலயங்கள் காணப்பட்டதாகவும் அவ்வாலயங்களை புனருத்தாரணம் செய்ததாகவும் "யாழ்ப்பாண வைபவ மாலையில்" குறிப்பிடப்பட்டுள்ளது. அவை எவை?
2. பண்டு காபயன் "சிவிகாசாலை" ," சொத்திராலை" எனும் நிலையங்களை அமைத்ததாக எந்த நூல் கூறுகிறது?
3. முதலாம் சேனன் சைவனாக மாற்றப்பட்டதை எந்த நூல் மூலம் அறியலாம்?
4. பல்லவ மன்னர்களது காலப்பகுதியில் மாமல்லபுரத்தில் கட்டப்பட்டது போன்று தெய்வேந்திர முனையில் அமைக்கப்பட்ட ஆலயம் அது?
5. மாவிட்டபுரம் கோயிலைக் கட்டியவர்கள் யாவர்?
6. "ஜனநாத மங்கலம்" எனவும் "புலத்திய நகரம்" எனவும் அழைக்கப்பட்ட நகர் எது?
7. இரண்டாம் சிவாலயம் எவ்வாறு அழைக்கப்பட்டது?
8. சோழ மன்னர்களது காலத்தில் மச்சேஸ்வரம் என அழைக்கப்பட்ட ஆலயம் எது?
9. "ராஜராஜ புரம்" என எதனை அழைத்தார்கள்?
10. சிவ என்னும் சொல் அமையப்பெற்ற மன்னர்களின் பெயர்கள் இரண்டு தருக?
11. விஜயராஜேஸ்வரம் ஆலயத்தை எந்த மன்னன் எங்கே அமைத்தான்?
12. சிவபூமி எனத்திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட நாடு எது?
13. "விஜயராஜ சதுர் வேதி மங்கலம்" என அழைக்கப்பட்ட இடம் எது?
14. இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் ஆலயத்தை கட்டியவர் யார்?
15. இரகு வம்சத்தினை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?
16. உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தை கட்டியவர் யார்?
17. தேவநம்பியதீசனுக்கு முன்பு இலங்க்கையை ஆண்ட மன்னர்கள் சைவர்களாக விளங்கியதோடு பிராமணர்களை ஆதரித்ததிற்கு சான்றுகள் யாவை?
18. சுந்தரர் இலங்கையில் எத்தலத்தின் மீது தேவாரம் பாடினார்?
19. வேல்விழா எங்கே நடாத்தப்படுகின்றது?
20. இந்துக் கலைக் களஞ்சியத்தை வெளியிடும் திணைக்களம் எது?


# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

| | |
|---|---|
| பிறப்பிடம் | - யாழ்ப்பாணத்தில் நல்லூர் |
| பிறந்த காலம் | - 18.12.1822 |
| இயற்பெயர் | - ஆறுமுகம் |
| பெற்றோர் பெயர் | - தந்தை - கந்தப்பிள்ளை<br>- தாய் - சிவகாமி |
| ஆங்கிலம் கற்ற விபரம் | - வெஸ்லியன் கல்லூரியின் அதிபராக இருந்த பீற்றர் பேர்சிவல் பாதிரியாரிடம். |
| தமிழ் இலக்கியமும், இலக்கணத்தையும் கற்ற விபரம் | - நல்லூர் சரவணமுத்து உபாத்தியாயர் இருபாலை சேனாதிராஜா முதலியார். |
| இவரது முதற் பிரசங்கம் | - 1947 – 12 – 31 வண்ணார்பண்ணை சிவன் கோவிலில் நடத்தினார். |
| இவர் அமைத்த முதற் பாடசாலை | - வண்ணார் பண்ணையில் அமைக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலை 1948 இல். |



**ஆறுமுகநாவலர் வினாக்கள்**

1. ஆறுமுகநாவலருக்கு நாவலர் பட்டத்தை வழங்கிய ஆதீனம் எது?
2. தமிழ்ப் பதிப்புத்துறையின் முன்னோடியாக விளக்கியவர் யார்?
3. ஆறுமுக நாவலர் நிறுவிய அச்சகத்தின் பெயர் யாது?
4. வசனநடை இலக்கிங்களைச் சிறப்பாக எழுதியமையால் நாவலர் எவ்வாறு சிறப்பிக்கப்படுகின்றனர்?
5. நாவலர் தமிழ் நாட்டிலே பதிப்புச் செய்த இலக்கியங்கள் எவை?
6. தமிழ்ப் பதிப்புத்துறையில் முன்னோடியாக விளங்கியவர் யார்?
7. ஆறுமுகநாவலர் எழுதிய இலக்கியங்கள் எவை?
8. நாவலர் அச்சியந்திரம் நிறுவியதன் பிரதான நோக்கங்கள் எவை?
9. நாவலர் இலங்கையில் யாருடைய ஆட்சிக்காலத்தில் பிறந்தார்?
10. நாவலர் எழுதிய கண்டன இலக்கியங்கள் எவை?
11. நாவலர் புரிந்த சமயப்பணிகள் எவை?
12. நாவலர் கண்டனம் மேற்கொண்ட விடயங்கள் சில குறிப்பிடுக.
13. நாலலர் ஆற்றிய சமூகப்பணிகள் எவை?
14. நாவலர் புரிந்த கல்விப்பணிகள் எவை?
15. நாவலர் புனரமைப்புச் செய்த ஆலயங்கள் எவை?
16. 19ம் நூற்றாண்டில் சைவத்தையும் தமிழையும் காக்க எழுந்த விடிவெள்ளி என்று குறிப்பிட்ட இந்து சமய மறுமலர்ச்சியாளர் யார்?
17. ஆறுமுகநாவலர் இறைபதம் அடைந்த தினம் எது?
18. நாவலரின் குரு பூசைத்தினம் எது?



**விபுலானந்தர் வினாக்கள்**

1. சுவாமி விபுலானந்தர் எந்த ஊரில் பிறந்தார்?
2. இவருடைய பெற்றோர் பெயர் யாது?
3. விபுலானந்தர் பிறந்த ஆண்டு எது?
4. விபுலானந்தரின் இயற்பெயர் யார்?
5. விபுலானந்தர் ஆங்கிலக்கல்வியை எங்கே பெற்றார்?
6. கொழும்பு தொழினுட்பக்கல்லூரியில் இணைந்து எந்த ஆண்டு விஞ்ஞானத்தின் பட்டயச்சான்றிதழை பெற்றார்?
7. விபுலானந்தர் ஏன் ''பண்டிதர் மயில்வாகனார்'' என அழைக்கப்பட்டார்?
8. விபுலானந்தர் எந்த ஆண்டு யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியர் ஆனார்?
9. விபுலானந்தர் எந்த ஆண்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபர் ஆனார்?
10. யாருடைய இழப்பினால் மயில்வாகனனார் துறவை நாடினார்?
11. மயில்வாகனனார் எந்த ஆண்டில் இராமகிருஷ்ண மடத்தில் இணைந்துக் கொண்டார்?
12. மயில்வாகனாரின் பிரம்மச்சரிய நாமம் எது?
13. விபுலானந்தர் ஆன்மீக அறிவை வளர்ப்பதற்கு ஆசிரியராக இருந்து வெளியிட்ட சஞ்சிகைகள் எவை?
14. பிரபோத சைதன்யா எந்தத்தினத்தில் துறவறத்தை மேவினார்?
15. மயில்வாகனனருக்கு விபுலானந்தர் எனும் துறவு நாமம் யாரால் எத்தனையாம் ஆண்டு வழங்கப்பட்டது?
16. உலகின் முதலாவது தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கியவர் யார்?
17. விவேகானந்தன் இதழின் ஆசிரியராக கடமையாற்றியவர் யார்?

18. விபுலானந்தர் தமிழ்த்துறைப் பேராசிரியராக கடமையாற்றிய பல்கலைக்கழகம் எது?
19. விபுலானந்தர் எழுதிய இசை நூல் எது?
20. விபுலானந்தர் எழுதிய நாடக நூல் எது?
21. இராமகிருஸ்ண சங்க வெளியீடாக "பிரபுத்தபாரத" என்ற இதழின் ஆசிரியர் யார்?
22. விபுலானந்தர் எந்த ஆண்டு இறையடி சேர்ந்தார்?

**அருணாசலதேசிகர்**

1. தேசிகமணி, சைவமெய்ப்போதகர், சைவசித்தாந்தமணி என அழைக்கப்பட்டவர் யார்?
2. அருணாசலதேசிகர் எழுதிய சமய நூல்கள் 5 இனைக் குறிப்பிடுக.
3. அருணாசலருக்கு "தேசிகர்" எனும் பட்டத்தைச் சூட்டியவர் யார்?
4. அருணாசல தேசிகரின் சமயப்பணிகள் 5 இணைக் குறிப்பிடுக.
5. அருணாசல தேசிகரின் பத்திரிகை கட்டுரைகளில் சிறப்பானது எது?

**காசிவாசி செந்திநாதையார்**

1. உரை ஆசிரியர்களாக சிறப்பிடம் பெறும் இருவரைப் பெயரிடுக.
2. "கிறிஸ்தவ கண்டன குடாரி" என சிறப்பாக அழைக்கப்பட்டவர் யார்?
3. தேவாரம் வேத சாரம் எனும் நூலின் ஆசிரியர் யார்?
4. காசிவாசி செந்திநாதையர் எழுதிய நூல்கள் 5 இனைத் தருக.
5. காசிவாசி செந்திநாதையர் அமைத்த அச்சியந்திர சாலையின் பெயர் யாது?

**கைலாசநாதக் குருக்கள்**

1. கைலாசநாதக் குருக்களின் பெற்றோர் பெயர் யாது?
2. கைலாசநாதக் குருக்களின் சமய பணிகளைக் குறிப்பிடுக.

# கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்

| | | |
|---|---|---|
| ஆலயம் | - | கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் |
| அமைவிடம் | - | மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலை |
| இறைவன், இறைவி | - | தான்தோன்றீஸ்வரர், பார்வதி |
| தலவிருட்சம் | - | கொக்கட்டி மரம் |
| மகோற்சவம் | - | ஆவணி வளர்ப்பிறை முதலாம் நாள் கொடியேற்றி 15 நாள் நடைபெறும். |
| தீர்த்தம் | - | |
| பதிகச்சிறப்பு | - | |
| ஆலயச்சிறப்பு | - | |



- திருப்படைக் கோயில்கள் 7 இல் இதுவும் ஒன்றாகும்.
- கிழக்கு நோக்கி அமைந்துள்ள இங்குள்ள கொடிக்கம்பம் ஈழத்திலே மிக உயரமானது. உயரம் - 60 அடி
- கதிர்காம யாத்திரிகர் சொப்பணத்தின் மூலம் சிவலிங்கம் ஒன்று மறைந்திருப்பதை அறிந்திருந்தார். அச்சிவலிங்கத்திற்கு கோயில் எழுப்பி திருப்பணி செய்தார்.
- உலக நாச்சி எனும் அரசி ஆலயம் அமைத்ததாகவும், மட்டக்களப்பை ஆண்ட தருமசிங்கன் உதவி புரிந்ததாகவும் வரலாறு கூறுகின்றது.
- மட்டக்களப்பில் உள்ள பழமையான சிவன்கோயில்.

## வினாக்கள்

1. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம் ஆலயத்தின் தோற்றம் பற்றி கூறும் நூல் எது?
2. தேசத்துக்கோயில் என்றால் என்ன?
3. சுயம்புலிங்கமாகத் தானே தோன்றி அருள் பாலிக்கும் ஆலயம் எது?
4. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்திற்கு திருப்பணி செய்த இருவர் பெயர் தருக.
5. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தின் பரிபாலகரை எவ்வாறு அழைப்பர்?
6. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரத்தில் பூசை செய்பவர்கள் யார்?

# திருக்கோணேஸ்வரம்

| | |
|---|---|
| ஆலயம் | திருக்கோணேஸ்வரம் |
| அமைவிடம் | கிழக்கு மாகாணம் - திருகோணமலை சுவாமிமலைக் குன்று. |
| இறைவன், இறைவி | கோணேச்சரநாதர் - மாதுமையம்பாள் |
| தலவிருட்சம் | கல்லால மரம் |
| மகோற்சவம் | பங்குனி உத்திரத்தில் கொடியேறி 18 நாட்கள் நடைபெறும். |
| தீர்த்தம் | பாபநாசம் |
| பதிகச்சிறப்பு | தேவாரம் - திருஞானசம்பந்தர்<br>திருப்புகழ் - அருணகிரிநாதர் |
| ஆலயச்சிறப்பு | ➢ இராவணனால் வழிப்பட்ட தலம்.<br>➢ கோணேசர் மலையானது மகா மேருமலையின் சிகரங்களில் ஒன்று.<br>➢ குளக்கோட்ட மன்னன் திருப்பணி செய்தார்.<br>➢ திருகோணமலையில் இராவணன் வாளால் வெட்டி மலையெடுத்த இடம் இராவணன் வெட்டு என்று அழைக்கப்படும். |

## வினாக்கள்

1. திருக்கோணேச்சரத்திற்கு திருப்பணிகள் செய்த மன்னன் யார்?
2. திருக்கோணேச்சரத்தின் வரலாற்றினை அறிய உதவும் நூல்கள் எவை?
3. "கொன்ஸ்ரன்டைன் டிசா" என்ற போர்த்துக்கேய தளபதியால் இவ்வாலயம் தரைமட்டம் ஆக்கப்பட்ட ஆண்டு எது?
4. தட்சிணகைலாயம் எனப்போற்றப்படும் ஆலயம் எது?
5. இராவணனின் இஷ்ட தெய்வம் எது?
6. ஆயிரம் தூண்கள் அணி செய்யும் ஆலயம் என போர்த்துக்கேயன் ஒருவனால் புகழப்பட்ட ஆலயம் எது?
7. திருக்கோணேச்சரத்தின் மீதெழுந்த இலக்கியங்கள் இரண்டு தருக.



# திருக்கேதீஸ்வரம்

| | | |
|---|---|---|
| ஆலயம் | - | திருக்கேதீஸ்வரம் |
| அமைவிடம் | - | மன்னார் - மாந்தை |
| இறைவன், இறைவி | - | கேதீஸ்வரநாதர், கௌரி அம்பாள் |
| தலவிருட்சம் | - | வன்னி மரம் |
| மகோற்சவம் | - | வைகாசி மாதம் |
| தீர்த்தம் | - | பாலாவி |
| பதிகச்சிறப்பு | - | தேவாரம் பாடியோர் சம்பந்தர், சுந்தரர். |
| ஆலயச்சிறப்பு | - | |

- நாகர்களின் தலையாய வழிப்பாட்டுத்தலம்.
- இதனால் இங்குள்ள இறைவன் நாகநாதர் எனும் பெயர் பெறுகிறார்.
- நவக்கிரகங்களில் கேது எனும் கிரகம் வழிப்பட்டதால் கேதீஸ்வரம் என பெயர் வழங்கப்பட்டுள்ளது.
- புராதன மகாலிங்கம் சான்றாக அமைந்துள்ளது.
- சிவராத்திரி சிறப்பாக கொண்டாடப்படுகிறது.
- பல மடங்கள் அமைந்துள்ளன.
  திருஞான சம்பந்தர் மடம்
  திருவாசக மடம்
  நாவலர் மடம்
  சிவராத்திரி மடம்
  கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை மடம்



## வினாக்கள்

### திருக்கேதீஸ்வரம்

1. நவராத்திரிக்கு முன்னேஸ்வரம் போன்று சிவராத்திரிக்கு சிறப்பு வாய்ந்த தலம் எது?
2. இலங்கையில் தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் எவை? பாடியோரையும் குறிப்பிடுக.
3. ''மன்னாருக்கு சமீபத்திலுள்ள மாதோட்டத்திலே திருக்கேதீஸ்வரம் என்னும் தேன் பொந்து ஒன்று அங்கு மருந்து ஒன்று மறைந்திருக்கின்றது அதனை சென்றடையுங்கள்'' என வேண்டுகோள் விடுத்தவர் யார்?
4. எந்த ஆலயத்திலுள்ள இறைவனுக்கு நாகதாதர் என்ற பெயர் வழங்கப்படுகின்றது?
5. கேதீஸ்வரத்தில் காணப்படும் இலிங்கத்தின் பெயர் யாது?
6. ''பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின்'' என்று எத்தலத்தின் தீர்த்தம் சிறப்பிக்கப்படுகின்றது?
7. அந்நியராட்சியாலும் இயற்கையின் சீற்றத்தாலும் ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகள் தேவாரத்திருவுருவில் மட்டுமே அமைந்துள்ள ஆலயம் எது?
8. சம்பந்தரும், சுந்தரரும் கேதீஸ்வரத்தின் மீது எங்கிருந்து தேவாரம் பாடினார்கள்?
9. பாலாவியில் தீர்த்தமாடி தீர்த்தத்தை குடத்திலே ஏந்தி தலையிற் சுமந்த படி வரிசையாகச் சென்று புராதன மகாலிங்கத்திற்குத்தாமே அபிஷேகம் செய்து பூசிக்கும் ஆலயம் எது?
10. மாதோட்டத்தில் அமைந்துள்ள சிவாலயம் எது?
11. திருவெண்ணெய் நல்லூர் போன்ற சிவதலத்திற்கு ஈடான பெருமை கொண்ட ஆலயம் எது?
12. ''கேதீஸ்வர நாதரை கைதொழ கடுவினை அடையாவே'' என குறிப்பிட்டவர் யார்?

# பொன்னம்பலவானேச்சரம்

| | | |
|---|---|---|
| ஆலயம் | - | பொன்னம்பலவானேச்சரம் |
| அமைவிடம் | - | கொழும்பு – கொச்சிக்கடை |
| இறைவன், இறைவி | - | பொன்னம்பலவானேசர், சிவகாமி அம்பாள் |
| தலவிருட்சம் | - | அரசு |
| மகோற்சவம் | - | பங்குனி உத்தரத்தை தீர்த்தோற்சவமாக கொண்ட பத்து தினங்கள் |
| தீர்த்தம் | - | சுவர்ணபுஷ்கரணி |
| ஆலயச்சிறப்பு | - | ➢ திராவிட கட்டடக் கலைப்பாணியில் முழுமையாக கருங்கல்லினால் அமைக்கப்பட்ட ஆலயம்.<br>➢ 1857ல் பொன்னம்பல முதலியார் செங்கல்லால் கோயிலை கட்டினார்<br>➢ 1905ல் இராமநாதன் அவர்களால் கருங்கற் கோயிலாக புனர்நிர்மானம் செய்யப்பட்டது.<br>➢ நித்திய அக்கினி வளர்க்கப்படுவது சிறப்பம்சமாகும்.<br>➢ பௌர்ணமி தினத்தில் ஶ்ரீ சக்கர பூசை இடம் பெறும்.<br>➢ ஐந்தடுக்கு ராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.<br>➢ பரிவார மூர்த்திகளாக கணேசர், சோமஸ்கந்தர், திருமால், விஷ்ணு, பஞ்சலிங்கம், சுப்ரமணியர், சண்முகர், ஞானவைரவர், சுவர்ணவைரவர் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.<br>➢ நவக்கிரகங்களும் இடம் பெறுகின்றது. |

**வினாக்கள்**

1. கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் பிரசித்தி பெற்ற சிவாலயமாக விளங்குவது எது?
2. இங்கு வருடாந்த மகோற்சவம் எத்தனை தினங்கள் இடம்பெறும்?
3. ஈழத்து ஆலயங்களுள் கலை நுட்பம் மிகுந்த ஆலயம் எது?
4. ஐந்தடுக்கு ராஜ கோபுரம் அமைந்துள்ள ஆலயம் எது?
5. பொன்னம்பலவானேச்சரத்தை தென்னிந்திய ஆலயங்களுக்கு நிகராக கட்டியவர் யார்?

# நகுலேச்சரம்

| | | |
|---|---|---|
| ஆலயம் | - | நகுலேச்சரம் |
| அமைவிடம் | - | இலங்கையின் வடக்கே கீரிமலையில்<br>கீரிமலையின் புராதன பெயர் - திருத்தம்பலை |
| இறைவன், இறைவி | - | நகுலேசுவரர் (திருத்தம்பலேஸ்வரர்)<br>நகுலாம்பிகை. |
| தீர்த்தம் | - | கண்டகிதீர்த்தம், அல்லது நகுலதீர்த்தம் அல்லது தீர்த்தம். |
| மகோற்சவம் | - | மாசி மாதம் சிவராத்திரி தினத்தை தீர்த்தோற்சவமாக கொண்டு 15 நாட்கள் இடம்பெறும். |
| இவ்வாலய சிறப்புக்களைக் கூறும் நூல் | - | தட்சிணகைலாய புராணம், கைலாய மாலை, நகுலாசல புராணம், நகுலமலைக்குறவஞ்சி, நகுலமலைச்சதகம், நகுலகிரிப்புராணம், நகுலேசுவரர் விநோத விசித்திர கவிப் பூங்கொத்து. |

ஆலயச்சிறப்பு -

- ஈழத்து சிவாலயங்களுள் புராதன வரலாற்று சிறப்பு மிக்க தலம்.
- மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற தலம் இது.
- நகுல முனிவர் சாபவிமோசனம் பெற்றதலம்
- இராமன், சோழவேந்தன், முசுகுந்தன், நளன், அருச்சுணன், மாருதப்புரவீகவல்லி, முதலானோர் வழிப்பட்ட தலம்.
- வடக்கில் பிதிர்கடன் செய்யப்பட்ட தலம்.
- மாருதப்புரவீரகவல்லி தன் குன்ம நோய் நீங்க இத்தீர்த்தத்திலேயே நீராடினார்.
- பரிவார மூர்த்திகளாக கணேசர், சோமஸ்கந்தர், திருமால், விஷ்ணு, பஞ்சலிங்கம், சுப்ரமணியர், சண்முகர், ஞானவைரவர், சுவர்ணவைரவர் ஆகியோர் இடம் பெறுகின்றனர்.
- நவக்கிரகங்களும் இடம் பெறுகின்றது.
- கந்த புராணத்தின் சூத சங்கிதையிலும் நகுலேச்சரம் பழமையானது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- விஜயன் ஆட்சி செய்த போது இங்கு திருப்பணி செய்ததாக வரலாறு கூறுகின்றது.



**வினாக்கள்**

நகுலேஸ்வரம்

1. திருத்தம்பலேஸ்வரம் என அழைக்கப்படும் ஆலயம் எது?
2. நகுல முனிவருக்கு கீரி முகம் நீங்கிய தலம் எது?
3. நகுலேச்சரம் எனப் பெயர் வரக்காரணம் யாது?
4. இலங்கையில் பிதிர்க்கடன் செய்யும் ஆலயம் ஒன்று தருக.
5. வேடனுக்கு கீரி முகம் அமைய சாபமிட்ட முனிவர் யார்?

## <u>முன்னேஸ்வரம்</u>

| | | |
|---|---|---|
| ஆலயம் | - | முன்னேஸ்வரம் |
| அமைவிடம் | - | சிலாபம் |
| இறைவன், இறைவி | - | முன்னேஸ்வரர், வடிவாம்பிகை |
| தலவிருட்சம் | - | அரச மரம் |
| மகோற்சவம் | - | வருடத்தில் இரண்டு முறை மகோற்சவம் இடம்பெறும். |
| தீர்த்தம் | - | மாயவனாறு அல்லது தெதுறு ஓயா |

ஆலயச்சிறப்பு -



- இராமர், வியாசர் போன்றோர் வழிப்பட்ட தலம்.
- இராமர் பிரமகத்திதோஷம் நீங்க வழிபட்ட தலம்.
- அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் அழகேச்சரம் எனப் போற்றப்படும் தலம்.
- பக்தோற்சவம் சிறப்பாக நடைபெறும் தலம்.
- போர்த்துகேயர் காலத்தில் இடிக்கப்பட்டு கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனால் புனருத்தாரணம் செய்யப்பட்ட தலம்.
- தமிழ் சிங்களவர்களின் ஒற்றுமைப் பாலமாக விளங்குகிறது.

**முன்னேஸ்வரம்**

**வினாக்கள்**

மேற்குறிப்பிட்ட சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

(நவராத்திரி, வடிவாம்பிகை, முன்னேஸ்வரம், அழகேச்சரம்)

1. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ..................................... என போற்றப்படும் தலம் முன்னேஸ்வரம் ஆகும்.
2. முன்னேஸ்வரத்தில் ..................................... சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.
3. முன்னேஸ்வரத்தின் இறைவி .............................. ஆவார்.
4. பக்தோற்சவம் சிறப்பாக கொண்டாடும் தலம் ..................................... ஆகும்.

# உலக நாடுகளில் இந்து நாகரீகம்

## கீழைத்தேய நாடுகளில் இந்து நாகரீகம்

பரவல் அடைய காரணம்

- மலேசியா, பாலித்தீவு
- சாதகமான போக்குவரத்து
- அரசியல் தொடர்பு
- விவாகத் தொடர்பு
- அரச உறவு
- சுவர்ணபூமி

பரவிய விடயங்கள்

- பிராமணர் நெறி
- கலையம்சம்
- இலக்கிய மரபு
- சமயம், அரசியல்
- வாழ்க்கை அம்சங்கள்

சமய தொடர்பு

- அரசசபையில் அர்த்தசாஸ்த்திரம், தர்மசாஸ்திரம் பின்பற்றல்
- இந்து சமய முறையிலான பட்டாபிஷேகம்
- அரசசபை புரோகிதர் இராஜகுரு எனப்பட்டனர்
- அரசர்கள் பிராமணர்களுக்கு தானம் வழங்கல் (ஜாவா)

- அரசர்கள் திருமாலின் அவதாரமாக கருதப்படல்
- இந்து குடியிருப்பு காணப்படல் (சயாம் நாடு)

## நாடுகள் ஆலயங்கள்

- கம்போடியா - அங்கோட்வாட் சிவாலயம்
- மலேசியா - பத்துமலைக்கோயில்
- சம்பா - பத்திரவர்மன், பத்திரேஸ்வரர்
- ஜாவா - பிரம்பனார் கோயில், பொரபதூர் விநாயகர் ஆலயம்.
- தாய்லாந்து - வாட்போ கோயில்



**வினாக்கள்**


1. மலேசியாவிலுள்ள மாமல்லபுரக்கல் போன்ற கட்டுமானத்தையுடைய ஆலயம் எது?
2. ஆவணி நாராயணன் எனும் விருது பெயர் கொண்ட மன்னன?
3. உலகிலேயே மிக உயரமான தங்கத்திலான முருகன் சிலை உள்ள நாடு எது?
4. கம்போடியாவில் 2008ம் ஆண்டு சர்வதேச கலாசார பாரம்பரியச்சின்னமாக அறிவிக்கப்பட்ட இந்து ஆலயம் எது?
5. கம்போடியாவை ஆட்சிசெய்த அகத்தியர் வழிவந்த அரசன் யார்?

# இந்துக் கலைக் கோட்பாடுகள்

பண்பாட்டின் ஓர் அம்சமாகவே கலைகள் அமைகின்றன. ஆயகலைகள் அறுபத்தினான்கு எனினும் அவற்றுள்,


- கட்டிடம்
- சிற்பம்
- ஓவியம்
- இசை
- நடனம்
- நாடகம்
- இலக்கியம்

என்பன பிரதான கலைகளாகக் கொள்ளப்படுகின்றன. ''கலை'' என்பது ''கலா'' எனும் சமஸ்கிருத சொல்லில் இருந்து தோற்றம் பெற்றதாகும். ஆங்கிலத்தில் ''Art'' என்பர். கலைகள் பிரதானமாக மூன்று வகைபடும்.




இந்துகலையானது, இந்து தத்துவம், ஆக்கத்திறன், அழகியல், மனமகிழ்ச்சி வெளிப்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். இவை, ஒருவனை தன்னலமில்லா உலகிற்கு அழைத்துச் செல்கிறது. கீழான விலங்கு உணர்விலிருந்து விடுபடச் செய்து மானுட நிலைக்கும், உயர் தெய்வீக நிலைக்கும் உயர்த்திவிடுகிறது.

இனம், மதம், மொழி வேறுப்பட்டு காணப்பட்டது.
கலை உணர்வானது ஒரே அமைப்பாகவே காணப்படுகிறது. ''இயல், இசை, நாடகம்'' என்பன முத்தமிழாக கருதப்படுகின்றன. இசை இல்லாமல் எமது வழிபாடே கிடையாது. பரத முனிவரின் 8 ரசனைகளும், அபிநவகுப்தரின் ''சாந்தம்'' எனும் ரசனையும் இணைந்து 4 ரசனைகளை நடனம் வெளிப்படுத்துகிறது. இத்தகைய கலை ரசனைகள் பக்தி இலக்கியங்களில் தொன்று தொட்டு வளர்ந்து வந்துள்ளது.




**குப்தர் காலக் கட்டடக் கலை**

- வட இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் குப்தர் காலம் மிக முக்கியமானது.
- கி.பி 318 – 570 வரை இவர்களது ஆட்சி காலமாகும்.
- இந்து சமயம் சார்ந்த சமயம், கலை, இலக்கியம், தத்துவம் போன்ற துறைகளில் வளர்ச்சி கண்ட காலமாகும்.
- இக்காலத்தில் "நாகர கட்டடக் கலைபாணி" தழுவியதாக கட்டடங்கள் (ஆலயங்கள்) அமைக்கப்பட்டன.
- கி.பி 6ம் நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட இவர்களது ஆலயங்கள் 6 கட்டங்களைக் கொண்டது.

1. குடைவரைக் கோயில் (கற்களை குடைந்து அமைத்தல்)
2. சதுரமான கருவறையும் ஒடுக்கமான முன் மண்டபமும் உடைய கோயில்கள்.
3. சதுரமான கருவறையும் ஒடுக்கமான முன் மண்டபத்துடன் கூடிய திருச்சாற்றாலை உடைய கோயில்கள்.
4. பின் புறம் வில் வளைவான தோற்றத்தை கொண்ட கோயில்கள்.
5. சிறிய சிகரங்கள் கொண்டவைகள்.
6. உயரமான சிகரங்களை கொண்டவைகள்.

- இவர்கள் அமைத்த ஆலயங்களும் இடங்களும்.
  - தியாகோ தசாவதாரக் கோயில்.
  - நாச்சனா குட்டார சிவன் கோயில்.
  - பட்டாரி மகாதேவன் கோயில்.
  - விதர் கோன் மட்டாரி கோயில்.
  - பூமரா சிவன் கோயில்.
  - உதயகிரி குகைக் கோயில்.

- இவர்கள் அமைத்த சிகரக் கோயில்கள் பின்வரும் பகுதிகளை கொண்டிருந்தது.
    - சிகரம்
    - கருவறை
    - அந்தராளம்
    - அர்த்த மண்டபம்
    - முன் மண்டபம்
    - நடை பாதை

**பல்லவர் காலக் கட்டடக்கலை**

தமிழகத்தில் கி.பி 6 – 9ம் நூற்றாண்டு காலப்பகுதிகளில் ஆட்சி செய்தவர்களே பல்லவ மன்னர்களாவர். இக்காலம் “பக்தி நெறிக்காலம்” பக்தி இயக்க காலம் எனவும் அழைக்கப்படுகின்றன. சைவ, வைணவ மறுமலர்ச்சியுடன் கட்டடக்கலை வளர்ச்சிப்பெற்றது. “திராவிடக் கட்டடக்கலை இங்கு வளர்ச்சி அடைந்தது” கட்டடக்கலை 4 கட்டங்களை கொண்டது.


**கட்டடக்கலை**

- மகேந்தரவர்மன் பாணி
- நரசிம்மவர்மன் பாணி (மாமல்லன்)
- இராஜசிம்மன் பாணி (2ம் நரசிம்மவர்மன்)
- நந்திவர்மன் பாணி

இக்கால கட்டடக்கலை அமைப்பு அல்லது பாணி 3 வகைப்படும்

- குடைதளி / குடைவரை
- மலைதளிகள்
- கட்டுத்தளி / கற்றளி






**குடைதளிகள்**

- பல்லவர் ஆரம்ப கட்ட கோயில்கள் இவையாகும்.
- கற்குகைகளை குடைந்து ஆலய வடிவில் அமைக்கப்பட்டதே குடைதளிகள் அல்லது குடைவரைகளாகும்.
- இவ்வாறான ஆலயங்களை அமைத்தவர் ‘‘மகேந்திரவர்மன் ஆவார்’’

| **முற்காலம்** | **பிற்காலம்** |
|---|---|
| மண்டகப்பட்டு | சீயமங்கலம் |
| மகேந்திரவாடியில் | திருச்சிராப்பள்ளி |
| மாமண்டூர் | தளவானூர் |
| வல்லம் | |
| பல்லாவரம் | |

- இவ்வகையான கோயில்கள் பின்வரும் பகுதிகளை கொண்டிருந்தன.
  கருவறை
  அர்த்த மண்டபம்
  முகப்பு மணடபம்
- இக் குடைவரைகளின் முகப்பு மண்டபங்களில் 2 அடி அகலமும் கொண்ட தூண்கள் காணப்படுகின்றன.
- இக் கோயில்களின் கருவரையில் இறைவடிவங்கள் தற்போது காணப்படவில்லை. இவை மரம், சுதை போன்ற அழியும் பொருட்களில் அமைக்கப்பட்டிருக்கலாம்.
- அடுத்த கட்டமாக மண்டபங்களுடன் கூடிய குடைவரைகள் அமைக்கப்பட்டன.
- இவற்றுள் அதிகமானவை 1ம் நரசிம்மன் காலத்தில் கட்டப்பட்டவை.
  உதாரணம் :- திரிமூர்த்தி மண்டபம்
  ஆதிவராக மண்டபம்
  மகிஷாசுரமர்த்தனி மண்டபம்
- இம் மண்டபங்களில் 7 அடி உயரமுள்ள தூண் நிரைகள் காணப்படுகின்றன.

**மலைதளிகள்**

- பல்லவர் கால கட்டடக்கலையின் 2ம் கட்ட வளர்ச்சி இதுவாகும்.
- இம் மலைதளிகள், ‘‘ரதக் கோயில்கள்’’ , ‘‘ பாறைக் கோயில்கள்’’, ‘‘செதுக்குத்தளிகள்’’ என்றும் அழைக்கப்படுகின்றன.
- இம் மலைதளிகள், மரத்தில் இரதத்தை செதுக்குவது போன்ற அமைப்பில் பாறைகளை மேலிருந்து கீழாக செதுக்கி அமைக்கப்பட்டன.

- தென்னிந்தியாவில் மாமல்லபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள மலைதளிகள், மகாபாரதக் கதாபாத்திரங்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றன.

  உதாரணம் :- தருமரதம்
  வீமரதம்
  அர்ச்சுன ரதம்
  நகுல ரதம்
  சகாதேவ ரதம்
- இவற்றுள் தர்மராஜ ரதம், மூன்று தளங்களை கொண்டதாகவும், ஒவ்வொரு தளங்களில் ஐந்து சமய சார்புடைய சிற்பங்களுடன் திராவிட அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. இதனால் ''சிற்பக் கலைக் களஞ்சியம்'' என போற்றப்படுகின்றது.
- இக்கோயில்கள் கடற்கரையில் திறந்த வெளியில் அமைக்கப்பட்டுள்ளதால் ''ஜலசயனம்'' எனவும் அழைக்கப்படுகின்றது.

**கட்டுத்தளிகள்/கற்றளிகள்**

- கற்களை சீராகப் பொழித்தெடுத்து ஒன்றின் மேல் ஒன்றை வைத்து கட்டுகின்ற கட்டிடமே ''கற்றளி'' ஆகும்.
- இராஜசிம்ம பல்ல மன்னனே இக்கலை மரபை கட்டுவித்தான்.

  உ+ம் :- காஞ்சி கைலாசநாதர் ஆலயம்
- இவ்வாலயம் பின்வரும் பகுதிகளை கொண்டுள்ளது.

  விமானம் (கருவறையின் மேற்பகுதி)
  மண்டபங்கள்
  பரிவாரத் தேவர் கோட்டம்
  திருச் சுற்றாலை
  கோபுரம்
  சுற்றுப் பிரகாரம்

**காஞ்சி கைலாசநாதர் கோயில்**

- 16 பட்டை கொண்ட இலிங்கம்
- பல தளங்களை கொண்ட விமானம். உள் நோக்கிய சரிவுடன் மேலே ஓங்கியெழும் பாங்கில் அமைக்கப்பட்டுள்ளன.
- திருச் சுற்றாலையை சுற்றி 58 சிறிய தேவகோட்டங்கள் உண்டு.



**வைகுந்தப் பெருமாள் ஆலயம்**

- கருவறை, முகமண்டபம், சுற்றாலையுடன் கூடிய ஆலயம்.
- கருவறை – 90 அடி நீளமுள்ள சதுர வடிவம்.
- சிங்க உருவங்கள் செதுக்கப்பட்ட தூண்களும், அரசர்களது முக்கிய நிகழ்ச்சிகளை கூறும் செய்திகள் பொறிக்கப்பட்ட தூண்களும் சுற்றாலை மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

- கருவறையின் மேல் உள்ள விமானம் சதுர வடிவானது. இது 60 அடி உயரமாகும், நான்கு தளங்களை கொண்டது.
- சாலை நெடுகிலும் யாழித் தூண்கள் நிரைகளாக காணப்படுகின்றன.
- பல்லவர் கால கட்டடக்கலை மிக உயர்ந்த வளர்ச்சி காலம் "இராஜசிம்மனது" காலமாகும்.

**நந்தி வர்மன் கட்டடக்கலை**
**(கி.பி 800 – கி.பி 900 வரை)**

- ஆலயங்கள் சிறியவை.
- ஆலயம் அமைந்த இடங்களும் ஆலயங்களும்.

| இடம் | ஆலயம் |
|---|---|
| காஞ்சி | முத்தீஸ்வரர் கோயில்<br>மதங்கேஸ்வரர் கோயில் |
| செங்கற்பட்டு | வாடாமல்லீஸ்வரர் கோயில் |
| திருத்தனி | வீரட்டாணேஸ்வரர் கோயில் |

- முத்தீஸ்வர, மதங்கேஸ்வர கோயில்களின் நுழைவாயிலில் இரு தூண்கள் தாங்குவது போல அமைத்துள்ளது.
- ஏனைய நான்கு கோயில்களும் அரைவட்ட வடிவில் அமைந்துள்ளது.

# சோழர் கால கட்டடக் கலை

முற்கால சோழர் பாணி
(கி.பி 850 – 985)
விஜயபாலயன் - பராந்தன்

இடைக்கால சோழர் பாணி
(கி.பி 985 – 1070)
இராஜராஜன் - இராஜேந்திரன்

பிற்கால சோழர் பாணி
(கி.பி 1070 – 1270)
1ம் குலோத்துங்கன் - 3ம் இராஜேந்திரன்

**ஆலயங்கள்**

| காலம் | ஆலயங்கள் |
|---|---|
| முற்கால சோழர்கள் | • நார்த்தாமலை விஜயாலய சோழேஸ்வரம்<br>• புதுக்கோட்டை மூவர் கோயில் |
| இடைக்கால சோழர்கள் | • தஞ்சை பெருங்கோயில்<br>• கங்கை கொண்ட சோழேஸ்வரம் |
| பிற்கால சோழர்கள் | • சிதம்பரம், ஐராவதேஸ்வரம், திரிபுவனம் |

## முற்கால சோழர் பாணி ஆலயங்கள்

### விஜயாலய சோழேஸ்வரம்

<u>அமைப்பு</u>

1. கருவறை, விமானம், முன்மண்டபம், பரிவாரக் கோயில்கள் கொண்டது.
2. நான்கு தளங்கள் கொண்ட விமானம் மேல் நோக்கி கூட்டிய வண்ணமும், மூன்று தளங்கள் சதுரமாகவும், நான்காவது தளம் வட்டமாகவும் அமைந்துள்ளது.

<u>புதுக்கோட்டை மூவர் கோயில்</u>

1. மூன்று பிரதான கோயில்களை கொண்ட ஒரு கோயில்.
2. ஒவ்வொரு மையக் கோயிலும்,

   கருவறை

   அர்த்த மண்டபம்

   எனும் பகுதிகளை கொண்டவை.

- இவை ஒவ்வொன்றும் 21 அடி நீளமும், மகாமண்டபம் 91 அடி நீளமும், நந்தி மண்டபம் 11 சதுர அடி நீளமும் கொண்டவை.

## இடைக்கால சோழர் பாணி ஆலயங்கள்

### தஞ்சை பெருங்கோயில்



- சாளுக்கிய மன்னனை இராஜஇராஜ சோழன் வெற்றிக் கொண்டதன் நினைவாக கட்டப்பட்டதே தஞ்சை பெருங்கோயிலாகும்.
- 500 அடி நீளமும் 250 அடி அகலமும் கொண்டது.
- இவ்வாலயம்,

  கருவறை

  அர்த்த மண்டபம்

மகா மண்டபம்
நந்தி மண்டபம்
நர்த்தன மண்டபம்
வாச்சிய மண்டபம்

எனும் 6 பிரதான பகுதிகளை கொண்டுள்ளது.

- கருவறை 45 அடி நீளமும் 9 அடி அகலமும் கொண்டது. நான்கு வாயில்களையும் கொண்டது.
- ஆலயத்தின் மிக பிரதானமான பகுதி “ விமானம்” ஆகும்.
- இது 216 அடி உயரமும் 15 அடுக்குகளையும் கொண்டது.
- இவ்வாலயம் 3 கோபுரங்களும் முறையே,

  கேரளந்தகன் வாயில்
  ராஜராஜன் வாயில்
  திருவேணுக்கன் வாயில்

  ஆகும்.

**கங்கை கொண்ட சோழேஸ்வரம்**

- கங்கையை வெற்றிக் கொண்டதன் நினைவாக ‘இராஜேந்திர சோழனால்“ கட்டப்பட்டதே இவ்வாலயமாகும்.
- 567 அடி நீளமும் 318 அடி அகலமும் கொண்டது.
- இவ்வாலயம்,

  கருவரை
  அர்த்த மண்டபம்
  மகா மண்டபம்

  எனும் பகுதிகளை கொண்டது.
- பிரதான பகுதி விமானமாகும்.
- விமானங்கள் ‘வில் வளைவாக’ காணப்படுகின்றன.
- கருவறையின் இரு புறமும் ‘வட கைலாயம்’.
  “தென் கைலாயம்” எனும் இரு சிவாலயங்கள் உள்ளன.



**பிற்கால சோழர் பாணி**

- கட்டடக் கலையின் முதிர்ச்சி காலம். சோழப் பேரரசின் வீழ்ச்சி காலம்.
- மன்னர்கள்,
  1ம் குலோத்துங்கன்
  2ம் குலோத்துங்கன்
  விக்கிரம சோழன்
- ஆலயங்கள்,
  சிதம்பரம்
  திரிபுவனேஸ்வரம்
  ஐராவதேஸ்வரம்

**சிதம்பரம்**

- இவ்வாலயம்,
  நிருத்தசபை
  கோபுரங்கள்
  நூற்றுக்கால் மண்டபம்
  ஆயிரங்கால் மண்டபம் எனும் பகுதிகளை கொண்டது.
- கோபுரங்கள் ஏனைய காலங்களை விட உயரமாக கட்டப்பட்டன.
- 7 வாயில்களில் 7 கோபுரங்கள் உள்ளன.

**ஐராவதேஸ்வரம்**

- 2ம் இராஜராஜனால் கட்டப்பட்டது.
- “இராஜராஜேஸ்வரம்” எனவும் அழைக்கப்படும்.
- இவ்வாலயம்,
  கருவறை
  அர்த்த மண்டபம்
  பெரு மண்டபம்
  எனும் பகுதிகளை கொண்டது.
- விமானம், தேவ கோட்டம், சுவர் போன்ற இடங்களில் சிற்பங்கள் காணப்படுகின்றன.
- இதனால் இவ்வாலயம் “சிற்பங்களால் இழைக்கப்பட்ட ஒரே சோழ வளாகம்” என வர்ணிக்கப்படுகிறது.

**இந்துக்கலைக் கோட்பாடு வினாக்கள்**

1. ஆய கலைகள் .......................... ஆகும்.
2. கலைகளின் வகைகளை குறிப்பிடுக.
3. முத்தமிழ் எவை?
4. நாட்டிய சாஸ்திரத்தை .................... எழுதினார்
5. நடனத்தில் ................ சந்தம் எனும் ஒன்பதாவது இரசனையைஇணைத்தார் .
6. குப்தர்கள் ................ கட்டடக் கலைப்பாணியை பின்பற்றினர்.
7. பல்லர் கால கட்டடக்கலை வளர்ச்சி கட்டங்களை குறிப்பிடுக.
8. பல்லவர் கால ஆலய பாணிகளை குறிப்பிடுக.
9. குடை வரை கோயிலை முதலில் அமைத்தவர் யார்?
10. சிற்பக்கலைக் களஞ்சியம் என போற்றப்படும் ஆலயம் எது?

11 – 17 வரையான வினாக்களுக்கு பின்வரும் தொகுதிகளிலிருந்து சரியான விடைத் தொகுதியினை தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| A<br>மகேந்திரவர்மன் | B<br>16 பட்டை கொண்ட இலிங்கம் | C<br>மலைதளி | D<br>சுதையால் ஆன இறைவடிவம் |
| E<br>தருமராஜரதம் | F<br>பெரிய கற்றளி | G<br>மாமண்டூர் | H<br>கங்கைகொண்ட சோழேச்சரம் |
| I<br>இராஜசிம்மன் | J<br>மாாமல்ல புரம் | K<br>நரசிம்மன் | L<br>அர்ச்சுனரதம் |
| M<br>கி.பி 850 - 985 | N<br>வில் வளைவான விமானம் | O<br>சிற்பக் கலை களஞ்சியம் | P<br>சிதம்பரம் |
| Q<br>தஞ்சை பெரிய கோவில் | R<br>விஜயபாலன் | S<br>இராஜராஜேஸ் வரம் | T<br>வடகைலாயம் |
| U<br>1ம் குலோத்துங்கன் | V<br>500 அடி நீளம் 250 அடி அகலம் | W<br>புதுக்கோட்டை மூவர் கோயில் | X<br>கேரளந்தகன் வாயில் |

11. பல்லவர் கால கட்டடக் கலை வளர்ச்சியின் ஆரம்பக்கட்டத்துடன் தொடர்புடைய தொகுதி

I. CMO

II. ADG

III. DKI

IV. GEJ

12. பல்லவர் காலத்தின் 2ம் கட்ட வளர்ச்சியுடன் தொடர்புடைய தொகுதி

I. CKJ

II. NAC

III. KGO

IV.AJM

13. காஞ்சி கைலாசநாதர் ஆலயத்துடன் தொடர்புடைய தொகுதி

I. BRS

II. CXU

III. IFB

IV. FKS

14. முற்கால சோழர் பணியுடன் தொடர்புடைய தொகுதி

I. RMW

II. QRS

III. KIC IV. PMF

15. இராஜராஜ சோழ மன்னனுடன் தொடர்புடைய தொகுதி

I. MGF

II. NVS

III. OXK

IV. QVX

16. இராஜேந்திர சோழனுடன் தொடர்புடைய தொகுதி

I. STV

II. HNT

III. EPC

IV.KCT

17. பிற்கால சோழர் பணியுடன் தொடர்புடைய தொகுதி

I. PSU

II. RWK

III. MFK

IV HIS

# விக்கிரகக் கலை

சிற்பகலையுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டதே விக்கிரகக்கலை ஆகும். சிற்பங்களாக அமையும் வடிவங்களது எல்லா அங்கங்களும் வெளித் தெரியும் படியாக அமையும் போது அது ''விக்கிரகம்'' எனப்படும். விக்கிரகம் அமைக்க வேண்டிய முறை, மூலப் பொருள்கள் பற்றி ''மானசாரம்'' எனும் சிற்ப சாத்திர நூல் விரிவாக கூறுகிறது. ஆகம, சிற்ப சாத்திர விதிகளுக்கமைய அமைக்கப்படும் விக்கிரகங்கள் மூன்று வகைப்படும்.

விக்கிரகம்

- சகல விக்கிரகம் → இடத்துக்கிடம் நகர்த்தக்கூடிய → பொன், வெள்ளி, செம்பு,சுதை, சர்க்கரை, ஓடு மூலப் பொருள்
- அசல விக்கிரகம் → நிலையாக ஓரிடத்தில் நிறுவப்படுபவை → கல், மரம்
- சலாசல விக்கிரகம் → நகர்த்தக் கூடியதாக இருப்பினும் நகர்த்த கூடாது எனும் நோக்கில் நிறுவப்படுபவை

தென்னிந்தியாவில் சோழர், விஜய நகர நாயக்கர் காலங்களில் ஆலயங்களில் பல விக்கிரகங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் சிவனின் பல மூர்த்தி பேதங்கள் சோழர் காலத்தில் வெண்கலம் படிமங்களாக வளர்க்கப்பட்டன.

உதாரணம் :- நடராஜர்
தட்சணாமூர்த்தி
திரிபுராந்தகர்
இலிங்கோற்பவர்.

**நடராஜர்**

- 64 சிவ மூர்த்தங்களுள் 25 மூர்த்தங்கள் சிறப்பானவை.
- இவற்றுள் சிற்ப சாஸ்திர அளவு பிரமாணங்களுக்கு ஏற்ப அமைக்கப்படுவதே நடராஜர் ஆகும்.
- நடராஜரின் அங்க இலட்சணங்கள் அனைத்தும் உண்மைகளை விளக்குகின்றன.

  உதாரணம் :- முயலகன் - ஆன்மா
  பாம்பு - ஆணவம்
  முக்கண் - இச்சா, கிரியா, ஞான சக்தி
  புலித்தோல் - கோபத்தை கட்டுப்படுத்துபவன்
  பிறை - பேரழகு
- மேலும் இவ்வடிவம் பஞ்சகிருத்திய (ஐந்தொழில்) தத்துவத்தினையும் உணர்த்துகிறது.

| | | |
|---|---|---|
| (சிருஷ்டி) படைத்தல் | - | உடுக்கை ஏந்திய கை |
| (திதி) காத்தல் | - | அபயகரம் |
| (சங்காரம்) அழித்தல் | - | தீ ஏந்திய கை |

(திரோபவம்) மறைத்தல் - ஊன்றிய திருவடி
(அநுக்கிரகம்) அருளள் - தூக்கிய திருவடி




- நடராஜ வடிவத்தின் சிறப்புக்களையும், தத்துவ விளக்கங்களையும் நூல்களும் பாடலடிகளும் விளக்குகின்றன.

  உதாரணம் : உண்மை விளக்கம் - "தோற்றம் துடியதனில்"
  தேவாரம் - "குனித்த புருவமும்"
  திருமந்திரம்
  புராணங்கள்
- திருவைந்தெழுத்தின் சிறப்புடன் தொடர்புபட்டது.
- நடராஜருக்குரிய வழிபாடுகள்

  மார்கழி – திருவாதிரை (திருவெம்பாவையின் 10ம் நாள்)
  சிதம்பர சிறப்பு வழிபாடு (ஆருத்ரா தரிசனம்)
- ஆலயங்கள்

  சிதம்பரம் – தில்லை கூத்தன்
  பொலனறுவையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட வடிவங்கள்
  மதுரை ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வர ஆலயம் (கால் மாறி ஆடும் நடராஜர்)

**அனந்த சயனர் வடிவம்**

திருமால் திருப்பாற் கடலில் ஆதிசேடன் மீது பள்ளி கொண்டுள்ள வடிவமே ‘‘அனந்த சயன” வடிவமாகும். அனந்த சயனம் என்பது ‘‘அறிதுயில் நிலை” எனப்படும். அனந்த – அஷ்ட நாகங்களில் ஒன்று என்று பொருள்.

இந்து விக்கிரகங்களில் ‘‘யோக நிலையில் படுத்திருக்கும் கோலம்” அனந்த சயன வடிவம் மட்டுமே. இவ்வடிவம் ,

- திருவரங்கர்
- அரங்கநாதர்
- யோக சயன மூர்த்தி
- சேஷசாயி

எனவும் அழைக்கப்படுகிறது.



**பிரதிமாலட்சணங்கள்**

உதாரணம் :-

- சங்கு போன்ற வெண்மையான அனந்த சயனத்தாலே யோக நித்திரையில் காணப்படுகின்றார்.
- வலது கால் நீண்டு கிடக்க, இடது கால் சிறிது மடக்கி வளைந்திருக்கும்.
- தலை சற்றுத் தூக்கிய படி, உடம்பு படுக்கை மீது நீண்டு கிடக்கும்.
- இரு கரங்கள் காணப்படும்.
- வலது கை தலையணையாகக் கிரீட மகுடத்தை தழுவியிருக்கும்.

# இசைக்கலை

திருக்கோயில்கள் வளர்ந்த நுண்கலைகளில் ‘‘இசைக்கலை’’ முக்கியமானது. இறைவனே இசை வடிவனன் என்பது இந்து மத நம்பிக்கையாகும்.

இசையானது செவிக்கு இன்பம் ஊட்டுவதோடு மட்டுமல்லாது ஐம்புலன்களை கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்ப பேற்றையும் தரவல்லது.

**இசைக்கலையின் தோற்றம்**

<u>வட இந்தியா</u>

- வேதங்கள்.
  சாம வேதம் இசைப் பாடல்களை கொண்டது.
- புராண,இதிகாசம்
  இறைவனே இசைவடிவானவன்
  இறை உருவங்கள் இசைக் கருவிகளோடு சித்தரிக்கப்படல்
  உதாரணம் : சிவன் – உடுக்கு
  நாரதர் – தம்புரா
  சரஸ்வதி – வீணை
  கண்ணன் – புல்லாங்குழல்
- இராவணன் சாம கானம் பாடியமை.
- குப்தர் காலம்
  நாணயங்களில் சமுத்திரகுப்தன் வீணையுடன் காணப்படல்
  ‘‘பெரிய கவி’’ என போற்றப்படுதல்

**தென்னிந்தியா – தமிழகம்**

- சங்ககாலம்
  சங்க இலக்கியங்கள்
  உதாரணம் :- பரிபாடல், குறுந்தொகை

  ஐவகைப் பண்
  உதாரணம் :- ஐவகை நிலங்களுக்கும் சங்கீத மரபு.

- சங்கமருவிய காலம்
  இலக்கியங்கள்
  உதாரணம் :- சிலப்பதிகாரம்,மணிமேகலை,காரைக்காலம்மையாரின் பாடல்கள்.
- பல்லவர் காலம்

  நாயன்மார்களும், ஆழ்வார்களதும் பக்தி பாடல்கள்.
  மன்னர்கள் இசைக்கலையில் கொண்ட நாட்டம்
  உதாரணம் :- விருது பெயர்கள் - ‘‘சங்கீர்ண ஜாதி’’
  ‘‘பரிவாதினி’’
  ‘‘வீணாதரன்’’

- சோழர் காலம்

  ஆலய வழிபாடுகளில் தேவார, திருமுறைகள் இசைக்கருவிகளுடன் பாடப்பட்டன.
  ஆலயங்கள் இசைச்சிற்பங்கள், இசை மண்டபங்கள் என்பன அமைக்கப்பட்டன.
  இசைக்கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.
  உதாரணம் :- பட்டம் வழங்கியமை.
  பதவிகள் வழங்கியமை.
  நிலங்கள் கொடுத்தமை.

- நாயக்கர் காலம்
  பக்திப் பாடல்களில் "கீர்த்தனை வடிவம்" அறிமுகமாகியவை.
  ஆலயங்களில் இசைத்தூண்கள் அமைத்தமை.
- கற்காலம்
  கர்நாடக இசை கலைஞர்களின் பங்களிப்பு.
  விபுலானந்த "யாழ் நூல்"
  பாடசாலையில் அழகியல் பாடம்
  பல்கலைக்கழகங்களில் பட்டக் கல்வி
  ஆலய வழிபாடுகளில் இசைப்பாடல்கள் மற்றும் இசைக்கருவிகள் மற்றும் இசைக்கருவிகள் பயன்பாடு.

**விக்கிரகக் கலை வினாக்கள்**

1. விக்கிரகம் என்றால் என்ன?
2. விக்கிரக அமைப்பு பற்றி கூறும் நூல் எது?
3. மூவகையான விக்கிரகங்களை குறிப்பிடுக.
4. சிவனின் விக்கிரகங்கள் எக்காலத்தில் அதிகமாக வார்க்கப்பட்டன?
5. சிவனது மூர்த்தி பேதங்கள் 5 இனை குறிப்பிடுக.
6. சிவனின் …………………… மூர்த்தங்களுள்………………………மூர்த்தங்கள் சிறப்பானவை.
7. நடராஜரின் அங்க இலட்சணங்களுள் முயலகன் …………………………,
   ………………………., யும், பாம்பு …………………………. யும், முக்கன் ……………………,
   ………………………….. , …………………………. யும் குறிக்கின்றது.
8. பின்வரும் பஞ்சக்கிருத்தியங்களை உணர்த்தும் அம்சங்களை குறிப்பிடுக.
   படைத்தல் -
   காத்தல் -
   அழித்தல் -
   அருளல் -
   மறைத்தல் -
9. நடராஜர் வடிவத்தினை சிறப்பித்துக் கூறும் நூல்கள் எவை?
10. நடராஜருக்குரிய விரதம் ………………………….. ஆகும்.
11. ஆனந்த சயனம் ……………………… எனப்படும்.
12. இவ்வடிவம் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றன?

**இசைக்கலை வினாக்கள்**

1. வட இந்தியாவில் இசைக்கால வளர்ச்சி பெற்ற விதத்தினை சான்றாதாரங்களுடன் அட்டவணைப்படுத்துக.

| | |
|---|---|
| வேத காலம் | |
| புராணங்கள் | |
| குப்தர் காலம் | |

2. தமிழகத்தில் இசைக்கலை வளர்ச்சியினை சான்றாதாரங்களுடன் அட்டவணைப்படுத்துக.

| | |
|---|---|
| சங்ககாலம் | |
| சங்கமருவிய காலம் | |
| பல்லவர் காலம் | |
| சோழர் காலம் | |
| நாயக்கர் காலம் | |

# விடைகள்

**நாகரீகமும் பண்பாடும் விடைகள்**

1.

1. ரி.கே. சிதம்பரநாத முதலியார்
2. திருக்குறள்
3. சால்பு
4. சமயம்
5. இலத்தீன்

**சிந்துவெளி நாகரீகம்**

1.

1. பசுபதி
2. யானை,புலி,கரடி,சிங்கம்,மான்
3. இலிங்கவடிவங்கள், முத்திரைகள்
4. மொஹஞ்சதாரோ, ஹரப்பா
5. சேர். ஜோன் மார்ஷல்
6. வெண்கலம்,பழுப்பு நிறக் கற்கள், சுண்ணக் கற்கள்
7. என்பு எச்சங்கள்
8. ஊதுகுழல்,மிருதங்கம்,தவில்
9. கட்டிடக்கலை, இசைக்கலை, நடனக்கலை, ஓவியக்கலை
10. கட்டிடம் கட்ட சட்டசெங்கற்களை பயன்படுத்தல்
    பல அறைகள் கொண்ட கட்டிடம்
    காற்று,வெளிச்சம் புகக்கூடிய யன்னல்கள்
    குளியலறை நீர்த்தடாகம்
    கட்டடம் ஒன்று 242“ நீளம் 112“ அகலம்

2.

1. மாக்கே  2. மா. இராசமாணிக்கனார்  3. சேர். ஜோன் மார்ஷல்

3.

1. ஹரப்பா, மொகஞ்சதாரோ
2. கி.மு 3250 , கி.மு 2750
3. வாணியம்
4. பசுபதி
5. சுவஸ்திகா

**வேதம்**

1. வேதம்
2. 2ம் மண்டலம் முதல் 7ம் மண்டலம்
3. கிருத்ஸமதர், விசுவாமித்திரர்,அத்திரி, வாமதேவர், பரத்துவாசர்,வசிட்டர்
4. அத்வாயுக்கள்
5. பாட்டுக்களின் முதல் தொகுதி
6. அதர்வாங்கிரஸ், பிருகுவாங்கிரஸ்,பிரமவேதம்
7. இந்திரன், அக்கினி, உஷை, சூரியன்
8. வேள்வி மந்திரம் அவற்றுக்குரிய கிரியை நெறி
9. இராவணன்
10. அதர்வ வேதம்
11. 100
12. யசூர் வேதம்
13. உபநிடதம்
14. மந்திரங்கள்
15. அதர்வவேதம்
16. அஸ்வமேதயாகம், இராஜ சூயயாகம், வாஜபேய யாகம், புருஷமேத யாகம், சர்வ மேத யாகம்
17. சவித்திரு எனும் ஞாயிற்றுக் கடவுள்
18. அவிப்பொருட்கள்
19. ரிதஷ்யகோபா, ரிதாயு, ரிதஸ்வான்
20. அக்கினி

1. பௌஷ்டிகாணி, ஸ்திரீகர்மானி, ராஜகர்மானி ,பேஷஜானி
2. புருஷ, நாதசிய, யம, வருண
3. வேட்டல்,வேட்பித்தல்,ஒதுதல், ஓதுவித்தல்

**ஆகமம்**

1. திருமூலர்
2. திருமந்திரம்
3. 28, 207
4. பத்ததிகள்
5. சிவபேதம் 10
   உருத்திரபேதம் 18
6. காமிகம்
7. சுக்கிரநிதி
8. கருவறையின் வெளியே மேற்குதிசையில் அமைந்துள்ள கோஷ்ட பஞ்சரத்தில் மேற்கு நோக்கி
9. பிரதிஷ்டை
10. வீரம் வாதுளம்
11. ஆகமம், சிற்ப சாஸ்திரம், மயமதம், காசியஜயம்,மானாசாரம், சிலபரத்தினம்
12. சிவாச்சாரியார்
13. குமாரதந்திரம்
14. திருச்செந்தூர்
15. 12
16. காமிய கிரியை

17. உத்தூளனம், திரிபுண்டரம்
18. மலத்தை கெடுத்து ஞானத்தைக் கொடுப்பது
19. அந்தியேட்டி, திவசம்,மகாளயம்
20. மணமகள் கற்பில் உறுதியாய் இருத்தலை குறிக்கும்

**இதிகாசம்**

1. இதிகாசங்கள்
2. இராம அவதாரம்
3. ஏகலைவன்
4. அஸ்வமேதயாகம், இராஜசூயயாகம்
5. கங்கை,யமுனை,இந்து,காவேரி,துங்கபத்திரை
6. ஒப்பிலாமணிப் புலவர்
7. வான்மிகி
8. திருதராஷ்டிரர்
9. லவன்
10. கிருஸ்ணதேவராயர்
11. பாசுபத அஸ்திரம்
12. கிராதார்ச் ஜினியம்
13. குப்தர் காலம்
14. புத்திர காமேஷ்டி யாகம்
15. அனுகீதை
16. விபீஷணன்
17. சூரியவம்சம்
18. இராமாயணம்
19. பகவத்கீதை
20. இராஜசூய யாகம்

**புராணம்**

1. நிலம், நீர், ,தீ, ஆகாயம், சூரியன், சந்திரன், இயமானன்
2. செல்வச்சன்னிதி புராணம் ,ஈழத்து சிதம்பர புராணம்,திருக்கேதீச்சர மான்மியம்
3. சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், வம்சானுசரிதம், மனுவந்தரம்
4. முழுமையானது
5. பெரிய புராணம், கந்தபுராணம்,திருவிளையாடற் புராணம்
6. பதினெட்டு
7. இலக்கியம், இலக்கணம், நுண்கலைகள், அறிவியல், போர்க்கலை, தத்துவம் ,அரசியல்
8. வடமொழிப்புராணம்,ஆதிபுராணம்
9. இலிங்கோற்பவ மூர்த்தி
10. பௌராணிகர்களால்
11. கந்தபுராணம்
12. புராணங்கள்
13. துர்க்கை மகிடாசுரனை அழித்தமை
14. கருடபுராணம்
15. கந்தபுராணத்தில் சூரன்போர் குறிப்பது ஆணவம் அழித்தல்
16. சேக்கிழார்

17. வருணன், இந்திரன், யமன்
18. கூர்மபுராணம்
19. தட்சிணகைலாய புராணம்
20. பதவுரை, பொழிப்புரை, விே'ட உரை, விருத்தி உரை, அலங்கார உரை, தத்துவ கருத்து

**சங்ககாலம் / சங்கமருவியகாலம்**

1. திருமுருகாற்றுப்படை
2. திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம்
   திருவிரட்டை மணிமாலை
   அற்புதத் திருவந்தாதி
3. பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்
4. மருதம்
5. திருச்செந்தூர்,திருத்தணி,திருவேகரம்,பழனி, பழமுதிர்ச்சோலை, திருப்பரங்குன்றம்
6. நஞ்சுண்ட கதை
7. தொல்காப்பியம்
8. முருகன்
9. நடுகல், வெறியாட்டம்
10. சிவன்

**பல்லவர் காலம்**

1. மங்களாசனம் செய்யப்பட்ட தலங்கள்
2. இராசசிம்மன்
3. பரமேஸ்வர வர்மன்
4. மகேந்திர வர்மன்
5. சிம்மவிஷ்னு
6. இராசசிம்ம பல்லவன்
7. சம்பந்தர் யாகத்திற்கு பொன்வேண்டி இடரினும் தளரினும் எனும் தேவாரம் பாடியமை
8. 1ம் நரசிம்ம மன்னன் / சிறுத்தொண்டர்
9. பூசலார் நாயனார்
10. நாவுக்கரசர், சம்பந்தர்
11. சுந்தரமூர்த்தி நாயனார்
12. சைவம் - சேந்தனர்
    வைணவம் - பெரியாழ்வார்
13. சைவம் - அப்பர்
    வைணவம் - திருமங்கை ஆழ்வார்
14. சைவம் - மாணிக்கவாசகர்
    வைணவம் - தொண்டாடிப் பொடியாழ்வார்
15. வைவம் - சேரமான் பெருமாள் நாயனார்
    வைணவம் - குலசேகர ஆழ்வார்
16. நம்பியாண்டார் ,நம்பி, ஸ்ரீமத்நாதமுனிவர்

17. நாவுக்கரசர்
18. சுந்தரர், நாவுக்கரசர், யமன்
19. சாக்கிய நாயனார்
20. ஆண்டாள்
21. திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி,திருவாய்மொழி
22. மதுரகவியாழ்வார்
23. முத்துக் குடை, முத்துச் சின்னம், முத்துப்பல்லாக்கு
24. தாசமார்க்கம், சாமீபமுத்தி
25. முதல் மூன்று திருமுறைகளும்

**சோழர் காலம்**

1. 1ம் பராந்தகன், 1ம் ஆதித்தன்
2. திருநீற்றுச்சோழன், திரிபுவனச்சக்கரவர்த்தி,சிவபாத சேகரன்,சிவநேயச் செல்வர்கள்
3. உத்தரமேரு சாசனம்
4. இராஜஇராஜ சோழன்
5. ஐப்பசி சதயம்
6. பிரம்மதேயம்
7. நம்பியாண்டார் நம்பி,சேக்கிழார்,சேத்தனார், கருவூர்த்தேவர்
8. சர்வசிவ பண்டிதர், ஈசான பண்டிதர்
9. கடாரம் கொண்ட சோழன், பண்டித சோழன்
10. திரிபுவன வீரேஸ்வரம்
11. சேக்கிழார் – உத்தம சோழ பல்லவன்
12. 3ம் குலோத்துங்கன்
13. வானவன் மாதேவீச்சரம்,பொலனறுவைச்சிவன் கோயில், பதவியா சிவன் கோயில்
14. தில்லையில்
15. தேவதானம்
16. புலவர் முற்றூட்டு
17. சாலாபோகம்
18. ஒட்டக்கூத்தர்
19. சயங்கொண்டார்
20. திருத்தொண்டர் திருவந்தாதி

**நாயக்கர் காலம்**

1. மண்டலிதர்
2. பயசு
3. எழுதியவர் – ஸ்வரதீட்சிதர்     உதவியவர் – கிருஸ்ணதேவராயர்
4. சானாவதிமயர்
5. பசவபுராணம்
6. அருணகிரிநாதர், குமரகுருபரர்
7. கிருஸ்ணதேவராயர் காலத்தில் இராஜகோபுரங்கள் வளர்ச்சியுற்றதனால்
8. திருவாதிரை, நவராத்திரி,தைப்பூசம்
9. வித்தியாதீர்த்த மடம், வித்யாரண்ய மடம், பாசுபதமடம்
10. திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரஆதீனம், திருப்பனந்தான் ஆதீனம்

**வட இந்திய பக்தி நெறியாளர்கள்**

1. வைணவ
2. திருமால்
3. 14ம்
4. ராமானந்தர், துளசிதாசர், மீராபாய், கபீர்தாஸர், ஸ்ரீசைதன்யர்
5. ராமானந்தர்
6. மீராபாய்
7. கபீர்தாஸர்
8. ஆண்டாளுக்கு
9. துளசிதாசர்
10. துளசிஇராமாயணம்

**இந்து சமூக சீர்த்திருத்த இயக்கம்**

1. பிரம்மசமாஜம், ஆரியசமாஜம், இராமகிருஷ்ணமிஷன்.

பிரம்மசமாஜம் - ராஜாராம் மோகன்ராய்
ஆரியசமாஜம் - தயானந்த சரஸ்வதி
இராமகிருஷ்ணமிஷன் - விவேகானந்தர்

**புராதன இலங்கையிற் சைவம்**

1. கிழக்கு - திருக்கோணேச்சரம்
   மேற்கு - திருக்கேதீச்சரம், முன்னேச்சரம்
   வடக்கு - திருத்தம்பலேச்சரம் (நகுலேச்சரம்)
   தெற்கு - சுந்ாரசேகரீச்சரம்
2. மகாவம்சம்
3. நிக்காய சங்கிரவடிவம்
4. விஸ்ணு ஆலயம்
5. மாருதப்புரவீகவல்லியினாலும் அவள் கணவர் உக்கரசிங்களாலும்
6. பொலன்னறுவை
7. வானவன் மாதேவி ஈச்சரம்
8. திருக்கோணேச்சரம்
9. மாதோட்டம்
10. மகாசிவன், மூத்தசிவன், கிரிகண்டசிவன்
11. விஜயபாகு மன்னன் - கந்தளாயில்
12. இலங்கை
13. கந்தளாய்
14. பரராஜசேகரன்
15. அரசகேசரி
16. கருணாகரத் தொண்டமானால்
17. மகாவம்சம், தீபவம்சம், பிராமிக்கல் வெட்டுக்கள்
18. திருக்கேதீச்சரம்
19. கொழும்பில்
20. இந்து சமய கலாசார திணைக்களம்.

**ஆறுமுகநாவலர்**

1. திருவாதுறை ஆதினம்
2. ஆறுமுகநாவலர்
3. வித்தியானுபாலன யந்திரசாலை
4. தமிழ் வசன நடையின் தந்தை
   வசனநடை கைவந்த வல்லாளர்
5. சூடாமனி உரை, சௌந்தர்யலகறி உரை
6. ஆறுமுகநாவலர்
7. முதலாம், இரண்டாம், நான்காம், பாலபாடங்கள்
   சைவ வினா விடைகள்
   நீதி நூல்கள்
8. சைவப்பிள்ளைகளுக்கு பாடநூல்களை எழுதி வெளியிடல்
   உரை நூல்களை வெளியிடல்
   துண்டுப்பிரசுரங்களை வெளியிடல்
   பதிப்பு முயற்சிகளை மேற்கொள்ளல்
9. ஆங்கிலேயர்
10. சைவ தூஷண பரிகாரம்
    வச்சிர தண்டம்
    சுப்பிரபேதம்
11. பிரசங்கம் மேற்கொண்டமை
    சமய இலக்கியங்கள்
    கண்டன இலக்கியங்கள் வெளியிட்டமை
    ஆலயஙடகள் புனரமைப்புச் செய்தமை
    புராணபடனங்கள் மேற்கொண்டமை
12. மதமாற்றம்
    வசன நடையில் ஏற்பட்ட குறைபாடுகள்
    கோயில்களில் நிகழ்ந்த உயிர்ப்பலி
    குருமார், கோயிலதிகாரிகள் என்போரிடம் காணப்பட்ட குறைபாடுகுள் சிற்றின்ப நோக்கிலான நிகழ்ச்சிகள்.
13. யாழ் கரையூரில் கத்தோலிக்க மக்கள் பேதி நோயினால் மடிவது கண்டு மனம் வருந்தி அரசாங்கத்திற்கு கடுமையான முறைப்பாட்டைச் செய்தார். கொடிய பஞ்சம் ஏற்பட்ட வேளை மகாசபை ஒன்றினை உருவாக்கி பொருள் சேர்த்து ஏழைகளின் பசிபோக்கும் பணியில் ஈடுபட்டார்.
    வேளாண்மைச் சங்கம் நிறுவியமை.
    அரசாங்க ஊழியர்களின் ஊழல்கள் குறித்து துணிந்து எழுதி மக்களுக்கு நீதி கிடைக்கச் செய்தார்.
14. அச்சியந்திரம் நிறுவியமை
    பாடநூல்களையும், வினாவிடைகளையும் எழுதியமை.
    பாடசாலைகள் நிறுவியமை
    ஆசிரியராக பணிபுரிந்தமை
15. நல்லூர்
    நகுலேஸ்வரம்
    திருக்கேதீஸ்வரம்
16. ஆறுமுகநாவலர்
17. 1879-12-05
18. கார்த்திகை மாத மகநட்சத்திரம்

**விபுலானந்தர்**

1. மட்டக்களப்பு காரைதீவில்
2. தந்தை - சாமித்தம்பி
   தாய் - கண்ணம்மை
3. 03 – 05 – 1892
4. மயில்வாகனம்
5. கல்முனை மெதடிஸ்த ஆங்கிலப்பாடசாலையிலும், பின் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியிலும்.
6. 1915 இல்
7. மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் பரீட்சைக்குத்தோற்றி சிறப்புச் சித்தி பெற்றதனால்.
8. 1917 இல்
9. 1920 இல்
10. நண்பர்
11. 1922 இல்
12. பிரபோத சைதன்யர்
13. இராமகிருஷ்ண விஜயம் - தமிழ்மொழி
    வேதாந்த கேசரி - ஆங்கில மொழி
14. 1924 இல் சித்ரா பௌர்ணமி தினத்தில்
15. சுவாமி சிவானந்தர் - 1924ம் ஆண்டு
16. சுவாமி விபுலானந்தர்.
17. விபுலானந்தர்.
18. அண்ணாமலை
19. யாழ் நூல்
20. மதங்க சூளாமணி
21. சுவாமி விபுலானந்தர்
22. 1947 – 07- 19

**அருணாசல தேசிகர்**

1. சைவப்புலவர் கா.அருணாசலதேசிகர்
2. சைவசமய ஆரம்பபோதினி
   சித்தாந்த சிரோண்மணி
   மெய்ஞ்ஞான தீபம்
   சைவசமய சித்தாமணி
   சைவ இலக்கி கதாமஞ்சலி
3. அவிநாநாந்த அடிகளார்
4. சொற்பொழிவாற்றல்
   பிரசங்கம் செய்தல்
   செய்யுள் இயற்றுதல்
   சைவசமய நூல்களை எழுதுதல்
   கோயில் தொண்டு புரிதல்
5. சுதேச நாட்டியம்

**காசிவாசி செந்திநாதையர்**

1. ஞானப்பிரகாச முனிவர், காசிவாசி செந்திநாதையர்
2. காசிவாசி செந்திநாதையர்
3. காசிவாசி செந்திநாதையர்
4. ஞானரத்தினாவளி வஜ்ரதண்டம், சிவஞானபோத வசனலங்கார தீபம், கந்தபுராண நவனீதம், வீரபத்திராஸ்திரம்.
5. செந்திநாத சுவாமி யந்திர சாலை

**கைலாசநாத குருக்கள்**

1. சிவஸ்ரீ கார்திகேய குருக்கள், சுந்தராம்பாள் அம்மையார்
2. இந்து நாகரீகத்துறையின் முதற் பேராசிரியர், துறை தலைவர்
   சமஸ்கிருதம், இருக்கு வேதம் முதலிய சமயத்துறை நூல்களை எழுதல்.
   இந்து மகா நாடுகளில் ஆய்வுரைகள் வழங்கல்
   உலக நாடுகளில் இந்து பண்பாட்டு அம்சங்களை பரவச்செய்தல்

**<u>கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்</u>**

1. மட்டகளப்பு மாண்மியம்.
2. பண்டைக்கால அரசர்களது மதிப்பும் மானியங்களும், சீர்வரிசைகளும் பெற்றவையான கோயில்கள் ஆகும்.
3. கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரம், ஒட்டிச்சுட்டான் தான்தோன்றிஸ்வரம்.
4. குளக்கோட்ட மன்னன், கலிங்கமாகான்.
5. வண்ணக்கர்
6. சங்கமர் எனும் வீரசைவ குருமார்.

**திருகோணேச்சரம்**

1. குளக்கோட்டன்.
2. தட்சிணகைலாய புராணம், திருகோணேச்சபுராணம், கோணேசர் கல்வெட்டு.
3. கி.பி 1624
4. திருகோணேச்சரம்
5. திருகோணேச்சர்
6. திருகோணேஸ்வரம்
7. திருகோணேஸ்வர திருப்பதிகம், கோணேஸ்வரர் அகல்

**திருக்கேதீஸ்வரம்**

1. திருக்கேதீஸ்வரம்
2. திருக்கோணேஸ்வரம் - சம்பந்தர்
   திருக்கேதீஸ்வரம் - சம்பந்தர், சுந்தரர்
3. ஆறுமுகநாவலர்
4. திருகேதீஸ்வரம்
5. மகாலிங்கம்
6. திருக்கேதீஸ்வரம்
7. திருக்கேதீஸ்வரம்

8. இந்தியாவிலிருந்து
9. திருக்கேதீஸ்வரம்
10. திருக்கேதீஸ்வரம்
11. திருக்கேதீஸ்வரம்
12. திருஞானசம்பந்தர்

**பொன்னம்பலவானேச்சரம்**

1. பொன்னம்பலவானேச்சரம்
2. பத்து தினங்கள்
3. பொன்னம்பலவானேச்சரம்
4. பொன்னம்பலவானேச்சரம்
5. பொன்னம்பல முதலியார்

**முன்னேஸ்வரம்**

1. அழகேஸ்வரம்
2. நவராத்திரி
3. வடிவாம்பிகை
4. முன்னேஸ்வரம்

**நகுலேஸ்வரம்**

1. கீரிமலை
2. கீரிமலை அல்லது நகுலகிரி
3. நகுலமுனிவருக்கு கீரிமுகம் நீங்கிய தலம் என்பதால்
4. நகுலேச்சரம்
5. சுதாமா என்னும் முனிவர்

**உலகநாடுகளில் இந்து நாகரீகம்**

1. கெடா - அகழ்வாய்வு – சிவன்கோயில்
2. நந்திவர்மன்
3. மலேசியா
4. அங்கோர்வாட் சூரியனார் கோயில்
5. இந்திரவர்மன்

**இந்துகலைக்கோட்பாடு**

1. 64 ஆகும்
2. கட்புலக்கலை, அவைகாற்றுகை கலை, வாய்மொழிக்கலை
3. இயல், இசை, நாடகம்
4. பரத முனிவர்
5. அபிநவ குப்தர்
6. நாகர்
7. மகேந்திரவர்மன் பாணி, நரசிம்மன் பாணி, இராஜசிம்மன் பாணி, நந்திவரமன் பாணி
8. குடைவரை, மலைதளி,கட்டுத்தளி
9. மகேந்திரவர்மன்
10. தருமராஜரதம்

11. II
12. I
13. III
14. I
15. IV
16. II
17. I


1. திருமதி.அ.தமயந்தி
   ஆசிரிய ஆலோசகர்,
   ஹட்டன் கல்வி வலயம்,
   ஹட்டன்.
   071-4482065

2. செல்வி.ஜெ.சம்மந்தர்
   ஆசிரிய ஆலோசகர்,
   ஹட்டன் கல்வி வலயம்,
   ஹட்டன்.
   071-0460419

3. திருமதி.ம.பேரருட்செல்வி
   ஆசிரியர்,
   ஹைலன்ஸ் கல்லூரி,
   ஹட்டன்.
   077-1116549

4. செல்வி.அ.தில்ருக்ஷி
   071-6645472